Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16+20 | விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :72 தை 25ஆம் நாள் சனிக்கிழமை 08 பெப்ரவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2051

ஐ.நாவில் இலங்கைக்கு வழங்கப்பட்ட

# அவகாசத்தால் பயனில்லை வேறு பொறிமுறை தேவை!

வலியுறுத்துகின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 8

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த மாட்டேன் என்று பகிரங்கமாக அறிவித்துள்ள நிலையில், இன்னும் ஓராண்டு கால அவகாசத்தை வழங்காமல், வேறு பொறிமுறைக்கு அமைவாக ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு இலங்கை விவகாரத்தை எடுத்துச் செல்ல வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். 07

## ரஞ்சன் 'லீக்ஸ்' எம்.பிக்களுக்கு

கொழும்பு, பெப்.8

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவால் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய தொலைபேசி உரையாடல்கள் அடங்கிய இறுவட்டுகளை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள் 08

## டில்லியில் மஹிந்த!



07

## வசந்த கரன்னகொட வீட்டில் இல்லையாம்!

*அழைப்பாணையை கையளிக்காமைக்கு பொலிஸார் நீதிமன்றில் காரணம்*

கொழும்பு, பெப். 8

நீதிமன்றத்தின் அழைப்பாணையைக் கையளிக்கச் சென்ற போது முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட வீட்டில் இருக்கவில்லை. அழைப்பாணையைக் கையளிக்கவில்லை. இவ்வாறு நீதிமன்றில் பொலிஸார் தெரிவித்தனர். அவரிடம் அழைப்பாணையை மீண்டும் கையளிக்குமாறு தெரிவித்து வழக்கை நீதிமன்றம் ஒத்திவைத்தது.

2008ஆம் மற்றும் 11

*முச்சந்தி முரளி*



"இப்ப உந்த கோட்டு அழைப்பாணை எல்லாம் கலியாண வீட்டு கார்ட் மாதிரி மாறிப் போச்சு கண்டியளோ!..."

## பாலியல் "ராக்கிங்" விசாரணை தீவிரம்

யாழ்ப்பாணம், பெப்.8

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் புதுமுக மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பகிடிவதை தொடர்பாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை அடுத்து யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் நேற்றுக் கூடிய அதிகாரிகள் குழு சில முடிவுகளை எடுத்துள்ளது. 11

## தரம் 4 மாணவர்கள் மீது பனை மட்டை தாக்குதல்!

உறவினர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப்.8

வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் தரம் 4 மாணவர்கள் மூவர் மீது பனை மட்டையால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதலுக்கு இலக்கான மாணவர்கள் அம்பன் மருத்துவமனை 11

## நள்ளிரவு கூரை பிரித்து இறங்கி 22 பவுண் நகைகள் கொள்ளை!

சாவகச்சேரி, பெப்.8

மட்டுவில் வடக்கு சாவகச்சேரி, புத்தூர் வீதியில் ஆயத்தடியில் உள்ள வீடொன்றில் 22 பவுண் தங்க நகைகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு கொள்ளையிடப்பட்டுள்ளன.

சுமார் 10க்கும் மேற்பட்ட கொள்ளையர்கள் இந்தக் கொள்ளையில் ஈடுபட்டுள்ள 07

## "கோப்"புக்கு ஹந்துன்நெத்தி "கோபா"வுக்கு அழகியவன்ன

கொழும்பு, பெப்.8

அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப்) தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி நேற்று மீண்டும் ஏகமனதாக தெரிவு செய்யட்டுள்ளார்.

சுனில் ஹந்துன்நெத்தியின் பெயரை ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா முன்மொழிந்ததுடன், அந்தக் கட்சியின் சக நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க வழிமொழிந்தார்.

நாடாளுமன்ற கூட் 11

## வலையில் சிக்கிய முதலை கடித்துக்குதறியது கையை

இரணைமடுவில் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப்.8

கிளிநொச்சி, இரணைமடுக் குளத்தில் மீன்பிடியில் ஈடுபட்டவர் முதலையால் நேற்றுக் கடியுண்டார். படுகாயமடைந்த நிலையில் அவர் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். 11

உள்ளே

## பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளுக்கு

# தொழில்வாய்ப்பு வழங்கல் 20இற்கு முன் விண்ணப்பிக்குக

கொழும்பு, பெப்.8

தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பை வழங்கும் திட்டத்துக்கு பெப்ரவரி 20 வரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தொழிலை எதிர்பார்த்துள்ளவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள முதலாவது பட்டப் படிப்பொன்றை அல்லது அதற்கு சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள டிப்ளோமா பாடநெறி ஒன்றை 2019.12.31ஆம் திகதி பூரணப்படுத்தியிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரி விண்ணப்பிக்கின்ற பிரதேச செயலார் பிரிவில் நிரந்தரமாக வசிப்பவராகவும் 2020.01.01 ஆம் திகதிக்குப் பட்டம் பெற்று ஒரு வருடத்துக்கும் அதிக காலம் தொழிலின்றி இருப்பதாகவும் கிராமசேவகர் மற்றும் பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தவேண்டும்.

விண்ணப்பங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து பட்டச் சான்றிதழ் அல்லது டிப்ளோமா சான்றிதழ் மற்றும் பெறுபேறு ஆவணத்தின் புகைப்படப் பிரதி ஒன்று (மூலப் பிரதியுடன் ஒத்திருப்பதை சமாதான நீதவான் ஒருவர் அல்லது சட்டத்தரணி ஒருவரினால் உண்மையான பிரதி என்பதை உறுதிப்படுத்தி) 2020.02.20ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை தபால் திணைக்களத்தின் ஸ்பீட் போஸ்ட் கூரியர் சேவையின் ஊடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்களை ஜனாதிபதி அலுவலகத்தின் www.presid entsoffice.lk என்ற இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகள் டிப்ளோமாதாரிகளிற்கு தொழில் வழங்கும் நிகழ்ச்சி த்திட்டம் 2020, நிறுவன முகாமைத்துவ மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவு, ஜனாதிபதி அலுவலகம், காலி முகத்திடல், கொழும்பு 01 என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

ஒரு வருட பயிற்சிக் காலத்தில் ரூபா 20,000 கொடுப்பனவு வழங்கப்படும். நியமனங்கள் மாவட்ட மட்டத்தில் வழங்கப்படுவதுடன், முதலாவது நியமனம் வழங்கப்படும் மாவட்டத்தில் ஐந்து வருடங்கள் சேவை செய்வது கட்டாயமானதாகும் - என்றுள்ளது. (எ)

## பாரதிவிழா

யாழ்ப்பாணம், பெப்.8

இந்தியத் துணைத் தூதரகத்தின் ஆதரவுடன், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் முன்னெடுக்கும் பாரதிவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்ச் சங்கத்தின் தலைவர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முத ன்மை விருந்தினராக யாழ். இந்தியத் துணைத் தூதூவர் சங்கர் பாலசந்திரன் கலந்து கொள்வார்.

நிகழ்வில் மூத்த கவிஞர் சோ.பத்மநாதன் தமிழ்க் கவிதையில் பாரதியின் புரட்சி என்ற பொருளில் சிறப்புரையாற்றுவார், வரவேற்புரையை ந.ஐங்கரனும், நன்றியுரையை தமிழ்ச் சங்கத்தின் உப செயலர் முதுநிலை விரிவுரையாளர் ந.செல்வாம்பிகையும் ஆற்றுவர்.

கவிஞர் கலாநிதி ச. முகுந்தன் தலைமையில் "முண்டாசு கவிஞனிடம் முகிழ்த்த கவியடியால் எம்நிலையைச் சொல்லிடுவோம்" என்ற கருப்பொருளில் கவியரங்கம் இடம்பெறும்.

நடன ஆசிரியர் கீதாஞ்சலி சுதர்சனின் ஸ்வஸ்திக் நாட்டியப் பள்ளி மாணவர்கள் வழங்கும் பாரதி பாடல்களாலான நாட்டிய அரங்கம், தமிழறிஞர் கலாநிதி க. சிவராமலிங்கம்பிள்ளை நினைவாக பாடசாலை மாணவரிடையே தமிழ்ச் சங்கத்தால் நடத்தப்படும் விவாதப் போட்டிக்கான பரிசளிப்பு போன்ற நிகழ்வுகளும் நடைபெறும். (க)

## வேம்பொடுகேணியில் 100 ஏக்கர் கையளிப்பு

தென்மராட்சி, பெப்.8

பளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வேம்பொடுகேணி கிராம அலுவலர் பிரிவில் 100 ஏக்கர் காணிகளில் மக்கள் நேற்று மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

வெடிபொருள்கள் அகற்றப்பட்ட காணிகளை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுப் பளை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்தப் பகுதியில் 2016ஆம் ஆண்டு டிசெம்பர் மாதமும், 2019ஆம் ஆண்டு மே மாதமும் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டிருந்தனர். 43 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட்டிருந்த நிலையில் தற்போது 100 ஏக்கர் காணிகள் மக்களிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன. வெடிபொருள்கள் அகற்றப்பட்ட காணிகளை ஹலோட்ரஸ்ற் நிறுவனத்தினர் கையளித்தனர்.

பிரதேச செயலர் ஜெயராணி பரமோதயன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கே.கேதீஸ்வரன், பிரதேச உதவிச் செயலர் குணஜா குணரத்தினம், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மாலதி மகேந்திரன் ஆகியோரும், அந்தப் பகுதியில் வெடிபொருள்களை அகற்றிய ஹலோட்ரஸ்ற் நிறுவனப் பிரதிநிதிகள், றோனால்ட் நிறுவனப் பிரதிநிதிகள், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனப் பணியாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைப் பிரதிநிதிகள் உட்பட 100க்கும் மேற்பட்ட பொதுமக்களும் நிகழ்வுக்கு வந்திருந்தனர். (எ-9,6)



கோப்பாய் பிரதேச தேசோதய சபையால் நீர்வேலி மேற்குக் கரந்தன் பகுதியில் இலவசமாக கண் பரிசோதனை மற்றும் மூக்குக் கண்ணாடி வழங்கல், சித்த மருத்துவ சேவை கல்வி கற்றல் உபகரணங்கள் வழங்கல் உள்ளிட்ட நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. (க)

## சாரதி அனுமதிப்பத்திரம் கட்டணம் குறைக்கப்படும்

### துறைசார் அமைச்சர் தகவல்

கொழும்பு, பெப். 8

வாகனச் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்க தற்போது அறவிடப்பட்டு வரும் கட்டணம் குறைக்கப்படும் என்று போக்குவரத்துச் சேவை முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாகனச்சாரதி அனுமதிப் பத்திரம் வழங்க நபர் ஒருவரிடமிருந்து ஆயிரத்து 700 ரூபா அறவிடப்பட்டு வருகிறது. இந்தத் தொகையை 50 சதத்தால் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும், என்றார். (ஒ.5)

## பகலில் வீடு உடைத்து நகைகள், பணம் திருட்டு

### முள்ளியவளையில் சம்பவம்

முல்லைத்தீவு, பெப். 8

முல்லைத்தீவு முள்ளியவளை தண்ணீரூற்றுப் பகுதியில் பட்டப்பகலில் வீடு உடைத்து 8 பவுண் நகைகள் மற்றும் 20 ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டு ள்ளன என்று பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

சம்பவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதுபற்றி முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. விசாரணை நடக்கின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (து-19)

## கட்டுத்துவக்கு வெடித்து ஒருவர் காயம்

வவுனியா, பெப். 8

வவுனியா மகாகச்சகொடி பகுதியில் கட்டுதுவக்குவெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நேற்றுக்காலை காட்டுக்குச் சென்றபோதே, காட்டுவிலங்குகளுக்காக வைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு வெடித்தது என்று தெரிவிக்கப்பட்டது. கருணாதாச (வயது- 36) என்பவரே படுகாயமடைந்தார். பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (து-8,110)

# தமிழரின் காணி அபகரிப்பு அரசின் கொள்கையல்லவாம்



கொழும்பு, பெப். 8

தமிழ் மக்களின் காணியை அபகரித்து அதில் சிங்கள மக்களை குடியேற்றுவதற்கு ஆளுங் கட்சியிலுள்ள எந்தவொரு உறுப்பினரும் உடன்படமாட்டார்கள் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. சார்ள்ஸ் நிர்மலநாதன், வவுனியாவில் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்பட்டு, சிங்கள குடியேற்றத்தை அரங்கேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டியிருந்தார்.

இதற்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு கூறினார்.

தமிழர்களின் காணியை கையகப்படுத்தி அதில் சிங்கள மக்களை குடியேற்றுவது அரசின் கொள்கை கிடையாது. அதற்கு எந்தவொரு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் உடன்படமாட்டார்கள். அரசின் கொள்கையை எவராவது மீறினால் அது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு முறைப்பாடு செய்யுங்கள்' என்றார். (ஒ-5-44)



## முல்லை யேசுதாசன் நேற்றுக் காலமானார்

முல்லைத்தீவு, பெப். 8

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளரும், திரைப்பட நடிகருமான முல்லை யேசுதாசன் (சாமி) நேற்று உயிரிழந்தார்.

கள்ளப்பாட்டைச் சேர்ந்த முதுபெரும் கலைஞரான முல்லை யேசுதாசன், 1990 ஆண்டில் இந்தியாவுக்கு அகதியாகச் சென்றார். அங்கு திரைப்படத் துறையில் ஆர்வம் கொண்டவராகத் திரைப்படங்கள் உருவாக்குவதைக் கற்றுக்கொண்டார்.

மீண்டும் 1991 ஆம் ஆண்டு தாயகத்துக்குத் திரும்பிய இவர் திரைப்படத் துறையில் ஆர்வமுடன் பணியாற்றியுள்ளார். (க-19)

## பாடசாலை மாணவன் மருத்துவமனையில்



கிளிநொச்சி, பெப். 8

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் உயர்தரப் பிரிவு இறுதியாண்டில் கல்வி கற்கும் மாணவன் ஒருவர் தன்னைத் தாக்கியுள்ளார் என்றுகூறி கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்குச் சேர்ந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஆதரவாளர் என்று அடையாளப்படுத்தப்படும் திருநகர் பகுதியைச் சேர்ந்த இளைஞனே தன்னைத் தாக்கினார் என்று அந்த மாணவன் கூறுகின்றார்.

"தனக்கும் அந்த அரசியல்வாதிக்கும் இடையே அரசியல் ரீதியான முரண்பாடு உள்ளது. அதன் வெளிப்பாடாகவே தாக்குதல் நடத்தியுள்ளார்" என்று மாணவனின் தந்தை கூறுகின்றார். (கு-35)

## கூட்டணியுடன் கை கோருங்கள்

### சங்கரி அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 8

நாட்டுப் பற்றும் இனப் பற்றும், தமிழ் மொழிப் பற்றும் உள்ள அனைவரையும் வேற்றுமைகள் இருப்பின் அவற்றை மறந்து எம்முடன் வந்து ஒன்றிணையுமாறும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்வதாக, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முப்பது ஆண்டுகளாக பல துன்பங்களை அனுபவித்த பின்பும்கூட எமது மக்கள் இப்போதும் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். ஆனால், எம்மால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய தீர்வை பற்றி எவரும் அக்கறை கொள்ளாதமை எமது துரதிஷ்டமே.

இன்றைய புலம்பெயர் தமிழர்கள் இனப்பிரச்சினை தீர்வில் முக்கிய பங்கு வகிக்க முடியுமென தமிழர் விடுதலைக் கூட்டணி கருதுகிறது. அவர்கள் இலங்கைத் தமிழர்களின் அண்மைக்கால சரித்திரத்தை நன்கு கற்றறிந்துகொண்டு எத்தகைய பங்கு வகிக்கலாம் என்பதைத் தீர்மானிக்கலாம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களின் விருப்புக்கேற்பவே நடந்துள்ளதெனவும், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதாக இருப்பின் ஒரே அணியில் பொது வேலைத்திட்டத்தின் கீழ் இணைந்து செயற்படாவிட்டால் தீர்வு காண்பது கடினமானதாகும்.

இன்று நாம் என்ன செய்ய வேண்டும்? உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் சுயநலம் கருதாது பதவிகளுக்கு ஆசைப்படாது விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் செயற்பட வேண்டும்.

அடுத்ததாக சிலரின் தூண்டுதலாலோ அன்றி சுயநல நோக்குடன் எம்முடைய கட்சியை விட்டுப் பிரிந்தவர்கள் தந்தை செல்வா, அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், திருமதி அமிர்தலிங்கம் போன்ற தலைவர்களில் உண்மையான பற்றும் பாசமும் அவர்களுடைய லட்சியத்தில் நம்பிக்கையும் கொண்ட அத்தனை பேரையும் தயவுசெய்து மீண்டும் கட்சியுடன் இணைந்து, விட்ட பணியைத் தொடர வருமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

அதுமட்டுமன்றி நாட்டுப் பற்றும் இனப்பற்றும், தமிழ்மொழிப்பற்றும் உள்ள அனைவரையும் வேற்றுமைகள் இருப்பின் அவற்றை மறந்து எம்முடன் வந்து ஒன்றிணையுமாறும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் வேண்டுகின்றேன் - என்றுள்ளது. (ஒ.5)

## விளையாட்டு போட்டிகள்

கரணவாய், பெப். 8

இமையாணன் அ.த.க வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் இ.சிவசங்கர் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவன் அறக்கட்டளை நிதிய நிறுவுநர் வேலாயுதம் கணேஸ்வரன், சிறப்பு விருந்தினராக பழைய மாணவர் சங்க சுவிஸ் கிளைச் செயலாளர் இ.இராசகுமார் ஆகியோர் கலந்து கொள்வர்.

+++

வடமராட்சி, பெப். 8

வல்வெட்டித்துறை சிதம்பரக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் அ.பகீரதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக புத்தளம் தப்பேவா பிரதேச மருத்துவமனை மருத்துவர் பழனிவேல் சிறிதரன் கலந்து கொள்வார். (க-108)

## கழிவுநீரால் முரண்பட்ட திணைக்களங்கள்

யாழ்ப்பாணம், பெப். 8

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கால்வாய்களுக்குள் கழிவுநீர் கலக்கின்றது. இதைப் பராமரிக்கவேண்டிய பொறுப்பு உள்ளூராட்சித்திணைக்களங்களுக்கு உரியது. இவ்வாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவிக்க, அது தமக்குரிய பொறுப்பு அல்ல என்று உள்ளூராட்சி சபையினர் குறிப்பிட்டனர்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்ப்பாண மாவட்ட பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கால்வாய்களுக்குள் கழிவு நீர் விடப்படுகின்றது. இவற்றை உள்ளூராட்சி மன்றங்கள் பராமரிப்பதில்லை என்று தெரிவித்தார். அதற்குப் பதிலளித்த உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள், வீதியோடு சேர்ந்த கால்வாய்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினராலேயே பராமரிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், இல்லை உள்ளூராட்சி சபையினரே பராமரிக்க வேண்டும் என்று சுற்றறிக்கை கூட உள்ளது என்று குறிப்பிட்டனர்.

இரு தரப்பினரும் நீண்ட நேரம் மாறி மாறி விவாதத்தில் ஈடுபட்டனர். சில இடங்களில் உள்ளூராட்சி மன்றங்களுடன் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர் ஒப்பந்தம் கைச்சாத்திட்டு இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சி சபைகள் இந்தக் கால்வாய்களைப் பராமரிப்பதற்கு சட்டஏற்பாடுகள் எதுவுமில்லை என்று வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் குறிப்பிட்டார்.

கால்வாய்களை வருடத்தில் இரண்டு தடவைகள் நாம் பராமரிப்புச் செய்கின்றோம். வீதிகளைப் பாதுகாப்பதற்கே கால்வாய்கள் அமைக்கப்பட்டன. வீதிகளில் மழைநீர் தேங்கினால் வீதிக்குப் பாதிப்பு என்றுதான், மழைநீர் ஓடுவதற்கு கால்வாய்கள் அமைக்கப்பட்டன. அதில் கழிவு நீரை கொண்டு வந்து விடுவதாலேயே பிரச்சினை என்றுவீதிஅபிவிருத்தித்திணைக்களத்தினர் குறிப்பிட்டனர்.

இரண்டு திணைக்களங்களும் மக்கள் நலன் கருதி இணைந்து செயற்பட்டால் நல்லது என்று மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் தெரிவித்தார். (ஒ-5)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 8

சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் விக்ரோறியாக் கல்லூரியின் சிவபாதசுந்தரனார் கேட்போர் கூடத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது. கழக அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி கோரப்பட்டுள்ளது. (ஒ.5)

# திருக்கேதீச்சர வீதியில் தற்காலிகமாக அலங்கார வளைவு

## மன்னார் மேல்நீதிமன்று அனுமதி



மன்னார், பெப். 8

சிவராத்திரியை முன்னிட்டு, வரலாற்றுப் புகழ்மிக்க மன்னார் திருக்கேதீச்சரம் கோவில் வீதியில் தற்காலிக அலங்கார வளைவு அமைக்க மன்னார் மேல்நீதிமன்று அனுமதியளித்துள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி மஹாசிவராத்திரி நடைபெறவுள்ளது.

வழமைபோன்று இந்துக்களால் பெருமெடுப்பில் வழிபாடுகள், நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

வடக்கில் வரலாற்றுப் பிரசித்திபெற்ற தலங்களுள் திருக்கேதீச்சரமும் ஒன்று. கடந்த வருடம் சிவராத்திரிக்கு முதல்நாள் திருக்கேதீச்சர கோவில் வீதியிலுள்ள அலங்கார வளைவு கிறிஸ்தவ அருட்தந்தை தலைமையிலான குழுவினரால் அடித்துச் சரிக்கப்பட்டிருந்தது. அதனால் பெரும் குழப்பம் அங்கு ஏற்பட்டிருந்தது. இந்தச் சம்பவம் இந்துக்களின் மனதைப் புண்படுத்தியிருந்தது.

இந்த விவகாரத்தைப் பொலிஸார் கண்டுகொள்ளவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இந்தநிலையில் திருக்கேதீச்சர திருப்பணிச் சபையினர் அலங்கார வளைவு உடைத்தமைக்கு எதிராகப் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர். அந்த வழக்கு மன்னார் நீதிவான் மன்றில் விசாரணையில் உள்ளது.

தவிர, வளைவை உடைத்த தரப்பைச் சேர்ந்தவர் என்று கூறப்படும் ஒருவரும் நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். கோவில் திருப்பணிச் சபையினர் வீதியைச் சேதப்படுத்தியுள்ளனர் என்பதே அவருடைய வழக்கு. தவிர, அலங்கார வளைவு அமைக்கக்கூடாது என்று கோரி மன்னார் மேல்நீதிமன்றில் ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கிறிஸ்தவர்கள் சார்பில் மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் உட்பட 23 உறுப்பினர்களுக்கு எதிராகவும் திருக்கேதீச்சர திருப்பணிச் சபைச் செயலாளருக்கு எதிராகவும் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர். இந்த வழக்கு மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி சஹாப்தீன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

அதன்போது, தற்காலிகமாக ஒரு வாரத்துக்கு அலங்கார வீதி வளைவு அமைக்க அனுமதிக்குமாறு திருப்பணிச் சபையினர் கோரிக்கை விடுத்தனர். அதற்கு கிறிஸ்தவர்கள் சார்பில் முற்பட்ட சட்டத்தரணி யு.அர்ஜின் ஜோன்தாஸ் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். இருதரப்பு வாதங்களின் பின்னர் 5 நாள்களுக்கு மட்டும் அலங்கார வீதி வளைவு அமைக்க மேல்நீதிமன்று அனுமதி வழங்கியது. மதங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படுவதற்காக பொது இணக்கப்பாட்டுடன் எதிர்வரும் 19ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை திருக்கேதீச்சரம் சந்தியில் அலங்கார வீதி வளைவை அமைக்கலாம் என்று மன்னார் மேல்நீதிமன்று அனுமதி வழங்கியது.

வழக்கில் திருக்கேதீச்சர திருப்பணிச் சபையினர் சார்பில் சட்டத்தரணிகளான எஸ்.கே.புரந்தரன் ,தர்மராஜ் வினோதன், எஸ் புராதனி ஆகியோரும், மன்னார் பிரதேச சபை சார்பில் சட்டத்தரணி செ.டினேசனும் முன்னிலையாகியிருந்தனர். (த-213,105)

## அடிக்கல் நடும் விழா

யாழ்ப்பாணம்,பெப்.8

புன்னாலைக்கட்டுவன் உபதபால் அலுவலகத்துக்கான அடிக்கல் நடும் விழா இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு புன்னாலைக் கட்டுவன் வடக்கு துர்க்கா சனசமூக நிலையம் அருகில் தபால் அலுவலகத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள காணியில் நடைபெறவுள்ளது .

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும், குமரன் விளையாட்டுக்கழகத்தினதும் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தினூடாக கட்டம் அமைக்கப்படவுள்ளது.

(க-222)

## கலை அரங்கும் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம்,பெப்.8

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் மாதம் தோறும் விரிவுரையாளர் கே.ஆர்.கமலநாதனால் முன்னெடுக்கப்படும் முழுநிலாக் கலையரங்கும்கௌரவிப்பும் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.பீடாதிபதிசு.பரமானந்தம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், க.பொ.த. உயர்தரத்தில்(2019) மூன்று அதிவிசேட சித்திகளைப் பெற்று சட்டத்துறைக்குத் தெரிவான சுன்னாகம் வாழ்வகமாணவனைக்கௌரவிக்கும் நிகழ்வும், வாழ்வக மாணவர்களின் கலைத்திறன் வெளிப்பாடுகளும், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களின் ஆற்றுகைகளும் நடைபெறும். 'வாழும் போதே வாழ்த்தும்'' தொனிப்பொருளில் வாழ்வகத் தலைவர் 'ஆ. இரவீந்திரனை வாழ்த்தும் நிகழ்வு நடைபெறும். (க)

## போயா தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.8

யாழ்.சத்திய சாயி சேவா நிறுவனத்தில் போயா தின நிகழ்வுகள் இன்று சனிக்கிழமைஅதிகாலை 4.45 மணிக்கு நகரசங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகும். நிகழ்வில் சிறப்புரையை யாழ். மாவட்ட மேலதிக செயலர் மருதலிங்கம் பிரதீபன் ஆற்றுவார். (க)

## விருது வழங்கலும் சஞ்சிகை வெளியீடும்

யாழ்ப்பாணம்,பெப்.8

அகில இலங்கை சைவ மகா சபையின் அன்பே சிவம் விருது வழங்கலும், சஞ்சிகை வெளியீடும் தைப்பூச தினமான இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

சபையின் தலைவர் சிவத்திரு நா.சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், மகப்பேற்று மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி நமசிவாயம் சரவணபவ 'அன்பே சிவம்' விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை ஆதீனமுதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், தென்கயிலை ஆதீன முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார், சின்மயா மிசன் வடமாகாண வதிவிட ஆச்சாரியார் தவத்திரு சீதாகாசானந்தா சுவாமிகள் ஆகியோர் நிகழ்த்துவர்.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற்செல்வர்ஆறுதிருமுருகன், மானிடம் அறக்கட்டளை முன்னாள் தலைவர் சிவத்திரு இ.செல்வநாயகம் ஆகியோர் வாழ்த்துரை ஆற்றுவர். சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் வைத்திய கலாநிதி பரா. நந்தகுமார் தொடக்கவுரை ஆற்றுவார். சைவ மகா சபையின் பொருளாளர் அருள்.சிவானந்தன், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை தாதிய பரிபாலகர் சோ.இராசேந்திரன் ஆகியோர் பாராட்டுரை ஆற்றுவர்.

அன்பே சிவம் சஞ்சிகையின் முதற் பிரதியை பசுக்கள் இடபங்களைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் தொழிலதிபர் கு.கங்கைவேணியன் பெற்றுக்கொள்வா.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான தொழில்நுட்பப் பீடங்களின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் சி.சிறிசற்குணராசா, ஆசிரியகலாசாலை ஓய்வுநிலை விரிவுரையாளர் சி. குணசீலன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி வைத்திய கலாநிதி சு.ரவிராஜ், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.தேவநேசன், சுதேச மருத்துவ திணைக்கள வடமாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி சி.துரைரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வர். (க)

## நாளை மின்தடை

யாழ்ப்பாணம்,பெப்.8

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் நாளை ஞாயிற்றுக்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது. காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்ப்பாண மாவட்டத்தில் விக்ரோறியா வீதி, மின்சார நிலைய வீதி, மணிக்கூட்டு கோபுர வீதி, பஸார் வீதி, ஞானம்ஸ் விடுதி, லதுசியந் விடுதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், கமலேஸ்வரி, சிவராதா புடவையகம், றொப்பாஸ், அன்னைநாகா பூட் சிற்றி, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை அவசர நோயாளர் பிரிவு ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

## மென்வன்மைப் போட்டி

குருநகர்,பெப்.8

சுண்டுக்குழி மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக குழந்தை மருத்துவர் வைத்திய கலாநிதி கருணயன் அருளானந்தமும், அவரது பாரியார் வைத்திய கலாநிதி இன்பம் அருளானந்தமும் கலந்து கொள்வர். (க-51)

## தைப்பூச பூசைகள்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை தைப்பூச தின விசேட பூசைகள் காலை 8.30 மணிக்கு கிரியைகளுடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 1008 சங்காபிஷேகமும், சத்ரு சங்ம்கரா ஹோமமும், ஸ்ரீ சண்முகப் பெருமானுக்கு சண்முக அர்ச்சனையும் நடைபெறும். விசேட பூசைகள் நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

****

வவுனியா,பெப்.08

சிஸ்ரீநகர் சிஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்தில் தைப்பூசம்நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

சோமசிறிஸ்கந்தராஜ குருக்கள் தலைமையில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும் என்று ஆலயப் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

(க-159,110)

## அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம்,பெப்.8

கைதடி மேற்கு உதயநகர் அண்ணமார் ஆலய வசந்த மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும். அடியார்கள் ஆசாரசீலர்களாக வருகை தந்து நிகழ்வில் பங்கேற்குமாறு ஆலய நிர்வாகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (க-222)

## திருப்புகழ் முற்றோதல்

பளை,பெப்.8

விடத்தற்பளை அலங்கார வேலாயுத சுவாமி ஆலயத்தில் தைப்பூசத் திருநாளான இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு திருப்புகழ் முற்றோதல் நிகழ்வு ஆரம்பமாகும்.

அனைத்து அடியார்களும் திருப்புகழ் பாடி திருவருள் பெற்றுய்யுமாறு ஆலய பூசகர் சைவசமய குரு வீ.காசிநாதன் கேட்டுள்ளார். (க-159)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## திருந்திக் கொள்ளுங்கள் இனியாவது!

ஒரு நரியொன்று பொறியில் சிக்கி விட்டது. மிகுந்த கஷ்டப்பட்டு அது வெளியேறுகையில், அதன் வால் அறுந்துவிட்டது. வாலறுந்த நிலையில் காட்டுக்குள் போனால் சக நரிகள் கிண்டலடிக்கும். அதனால் என்ன செய்யலாம் என நரி யோசித்தது. அதற்கு ஒரு யோசனை உதித்தது.

காட்டின் மையத்தில் இருக்கும் உயர்ந்த மலையில் நின்று பெரிதாக ஊளையிட, அந்தச் சத்தம் கேட்டு முழு நரிக் கூட்டமும் அங்கு வந்துவிட்டது. அவற்றைப் பார்த்து வாலறுந்த நரி ,

“ நான் ஒரு ஞானியைப் பார்த்தேன். அவர் எனக்கு உலக அறிவு வரவேண்டுமானால், என் வாலை அறுக்க வேண்டு எனச் சொன்னார். நானும் வாலை அறுத்தேன். என்ன அதிசயம், எனக்கு உலகில் உள்ள எல்லா அறிவும் உடனேயே கிடைத்து விட்டது. நீங்களும் யாராவது அவ்வாறு உலக அறிவு பெற விரும்பினால் இப்படிச் செய்யலாம்” என்று கூறிவிட்டு, விடு விடென அப்பால் சென்றது.

கூட்டத்துக்கு வந்த பல நரிகள் இதனை நம்பவில்லை. ஆனால் ஒரு சில நரிகள் அதை நம்பி தங்கள் வாலை அறுத்துக் கொண்டன. ஆயினும் அவையும் தாங்கள் ஏமாந்ததை வெளியில் சொல்லக்கூடாது என்பதற்காக, முதல் நரி சொன்ன கதையைச் சொல்லி, தங்களுக்கும் உலக ஞானம் அத்தனையும் வந்துவிட்டதாகக் கதை பரப்பின, இந்தக் கதையை மெல்ல மெல்ல எல்லா நரிகளும் நம்பி அவையும் தங்கள் வாலை அறுத்துக் கொண்டன. பின்னர் அந்தக் காட்டுக்குள் ஒவ்வொரு முறையும் புதிய நரிக்கூட்டம் வரும் போது, அவையும் வாலை அறுத்தாலே தங்களோடு சேர்ப்போம் என , நிபந்தனை விதிக்கப்பட்டது. புதிதாக வந்தவையும் வாலை அறுத்து, உலக ஞானம் பெற்றுவிட்டதாக கதையைப் பரப்பத் தொடங்கின. அந்தக் காட்டில் நரிகளின் வாலறுப்பு இப்படியே வாழையடி வாழையாகத் தொடர்ந்ததாம்.

கிட்டத்தட்ட இந்தக் கதையில் வருகின்ற நரிகளைப் போலத்தான் பல்கலைக்கழத்தில் பகிடிவதை செய்யும் மாணவர்கள் இருக்கிறார்கள். யாரோ ஒரு சிலர் தங்கள் வக்கிரங்களை வெளிப்படுத்த கண்டுபிடித்த ஒரு சித்திரவதை முறையை, பகிடிவதை என்று பெயரிட்டு, அது இல்லாவிட்டால் பல்கலைக்கழகப் படிப்பு பூர்த்தியாகாது என்ற மாயையை உருவாக்கிவிட்டார்கள். அவ்வளவுதான், அதையே எல்லோரும் நம்பிக் கொண்டு தாங்கள் வாங்கிய வதையை அடுத்த வருடம் உள்நுழையும் புகுமுக மாணவர்கள் மீது கொடுக்க, அவர்களும் தங்களுக்கு அடுத்த பிரிவுக்கு கொடுக்க, ஒரு அஞ்சலோட்டம் போல அழிவற்று பகிடிவதை பல்கலையில் தொடர்கிறது.

“பகிடிவதை நல்லது, நட்பைப் பலப்படுத்துகிறது, உலகோடு இயைந்து வாழும் தன்மையைக் கொடுக்கிறது, கிணற்றுத்தவளைகளாக வரும் புதிய மாணவர்கள் பல்கலைச் சூழலுக்கு ஏற்ப தகவமைக்க உதவுகிறது” என்று எத்தனை முண்டுகளைக் கொடுத்தாலும், நியாயப்படுத்த முடியாத ஒரு செயலாகவே பகிடிவதை இருக்கிறது. வதை என்று பெயரிட்டுக் கொண்டு நல்ல ‘வதை’, கெட்ட ‘வதை’ என இனம்பிரிக்க முடியாது. அதுவும் இந்தமுறை இன்னும் தூக்கலாக ‘பாலியல்’ ரீதியாக துன்புறுத்தல் கொடுக்கப்பட்டிருக்கிறது. புகுமுக மாணவர்கள் என்றால் உடல்,பொருள், ஆவி எல்லாம் தமக்கு அர்ப்பணிக்கவேண்டும்என்ற ஆதிக்க’மிதப்பில்’சிரேஷ்ட மாணவர்கள் இருக்கின்றனர்.அந்த எண்ணமே மாணவிகளை இப்படிப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்த வைக்கின்றது. வழக்கம் போல இதனையும் விசாரித்து, 4 பேருக்கு தற்காலிக வகுப்புத்தடை விதிப்பதால் மட்டும் பிரச்சினை தீர்ந்து விடாது. குற்றம் செய்தவர்கள் பல்கலைக்கழகக் கல்வியை எக்காலத்திலும் தொடராவண்ணம் வெளியேற்றப்பட வேண்டும். அத்தோடு ,மக்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் வகுப்பெடுக்கும் பல்கலை மாணவர் ஒன்றியங்கள், முதலில் தங்கள் ஆளுகைக்குள் உள்ள மாணவர்களுக்கு பகிடிவதையை நிறுத்த கட்டளையிட வேண்டும்.

எம்மைத் திருத்தி விட்டுத்தான் சமூகத்தை திருத்த நாம் போகவேண்டும். திருந்துவார்களா? அல்லது திருத்தப்படுவார்களா?



# ‘கொரோனா’ வைரஸ் அச்சத்தால் சீனப் பொருள்கள் நிராகரிப்பு!

## சந்தையில் பெரும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்!!



கொழும்பு, பெப். 8

**கொரோனா வைரஸ் தொற்று அச்சத்தால், சீனாவிலிருந்து வரும் சரக்கு கப்பலிலுள்ள பொருள்களை இறக்குமதியாளர்கள் திருப்பி அனுப்ப முயற்சிக்கும் சம்பவங்கள் கொழும்புத் துறைமுகத்தில் பதிவாகியுள்ளன.**

சீனாவிலிருந்து தாம் இறக்குமதி செய்த பொருள்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்திருந்தாலும் அவற்றை நாட்டுக்குள் கொண்டுவருவதற்கு இறக்குமதியாளர்கள் தயக்கம் காட்டிவருகின்றனர்.
மேலும் சிலர் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பேச்சு நடத்தி பொருள்களை திருப்பியனுப்பியுள்ளனர்.
இந்த நிலை தொடருமானால் இலங்கை சந்தையில் சீனப் பொருள்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படலாம் என்றும், இது நாட்டின் பொருளாதாரத்திலும் பெரும் தாக்கத்தை செலுத்தக்கூடும் எனவும் பொருளாதார நிபுணர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.
‘கொரோனா’ வைரஸ் மனிதர்கள் மத்தியிலேயே பரவும் ஆபத்து கொண்டிருக்கிறது என்றும், அது பொருள்களின் ஊடாக பரவாது என்றும் சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
அதேவேளை, ‘கொரோனா’ வைரஸ் தொற்றையடுத்து இலங்கைக்குவரும் சீன சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் வீழ்ச்சியடைந்துள் ளது. இதனால் சுற்றுலாத்துறைக்கும் தாக்கம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,44)



## மாநகர வாகனங்களை வழிமறித்து கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 8
யாழ்ப்பாணம் காக்கைதீவு அராலி வீதி ஜே/85 வசந்தபுரம் பகுதி மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். குப்பைகள் கொண்டு சென்ற வாகனங்களையும் தடுத்து வைத்திருந்தனர். இதனால் அங்கு அசாதாரண நிலை ஏற்பட்டது.
தமது பகுதியில் நீண்ட காலமாக மிருக கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன. இது பற்றி யாழ்ப்பாண மாநகர சபைக்குத் தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றுகூறியே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
யாழ்ப்பாண மாநகரசபையின் கழிவகற்றும் உழவு இயந்திரங்கள் அனைத்தும் குறித்த போராட்டக்காரர்களால் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டன.
அந்த இடத்துக்குவந்த யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் யாழ்ப்பாண மாநகர சபையின் பொறியியலாளர்கள் குறித்த விடயம் தொடர்பில் அங்கு அவதானித்தனர்.
அங்கு போடப்பட்ட கழிவுகளை உடனடியாக அகற்றுவதாகவும் அந்த இடத்தில் சட்டவிரோதமாகக் குப்பை போடுவோரைக் கைது செய்வதற்காக உடனடியாக கண்காணிப்புக் கமரா பொருத்துவது என்றும் உறுதியளித்தனர்.
அதன் பின்னர் மக்கள் போராட்டத்தை விடுத்துக் கலைந்து சென்றனர். இதே வேளை நேற்று மாலையே கழிவுகள் அகற்றப்பட்டு கண்காணிப்புக் கமராக்கள் பூட்டப்பட்டுவிட்டதாக மாநகர சபையின் பிரதி மேயர் து. ஈசன் உதயனுக்குத் தெரிவித்தார். (ந-த-111,105)

## ஸஹ்ரானின் குண்டு காவிய வாகனம் மீட்பு

கொழும்பு, பெப். 8
ஏப்ரல் 21ஆம் திகதி ஈஸ்ரர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரி என்று சொல்லப்படும் ஸஹ்ரானின் பயிற்சி முகாமில் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் பொலேரோ ரக வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது.
மாவனெல்லையில் வைத்து குற்றப்புலனாய்வு அதிகாரிகளால் கெப் வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது.
வனாத்துவில்லு பயிற்சி முகாம் தொடர்பாக முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவல்களுக்கு அமையவே கெப் வாகனம் மீட்கப்பட்டுள்ளது.
கெப் வாகனம் வனாத்துவில்லு பயங்கரவாத முகாமிலிருந்து வெடி பொருள்களை வேறு இடங்களுக்கு கொண்டு செல்லவும் முகாமுக்குத் தேவையான மூலப் பொருள்களை கொண்டுவரவும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.
குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் இது குறித்த மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஒ.5)

## எழுத்துப் பரீட்சை

யாழ்ப்பாணம்.பெப்.8
மும்மொழிக் கற்றைநிலையத்தினால் நடத்தப்படும் 2018/2019கல்வி ஆண்டுக்குரிய B பிரிவு ஆங்கில மொழிக் கற்கை மாணவர்களுக்கான முதலாம் தவணை இறுதி எழுத்துப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 11 மணி வரை கற்கை நிலையப் பரீட்சை மண்டபத்தில் நடைபெறும். (க)

## எஸ்.ரி.எவ்வின் புதிய தளபதி

கொழும்பு. பெப். 8
பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையின் புதிய கட்டளைத் தளபதியாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் லயனல் குணதிலக நியமிக்கப்பட்டுள்ளார்.
பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையின் கட்டளை அதிகாரியாகச் செயற்பட்ட, பயங்கரவாதத் தடுப்பு, பிரபுக்கள் பாதுகாப்பு மற்றும் உளவுத் தகவல்கள் தொடர்பாக சிறப்புத் தேர்ச்சி பெற்ற அதிகாரியான மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் எம். ஆர். லத்தீப் கடந்த 4 ஆம் திகதியுடன் தனது 41 வருட கால பொலிஸ் சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.
நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை கூடிய தேசிய பொலிஸ் ஆணைக்குழு, பிரதிப் பொலிஸ்மா அதிபர் லயனல் குணதிலகவை அதிரடிப் படையின் புதிய கட்டளைத் தளபதியாகத் தெரிவு செய்துள்ளது. (ஒ.5)

# மரண அறிவித்தல்கள்

## மார்க்கண்டு ஆனந்தம்



புதுவீதி, கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு ஆனந்தம் கடந்த (05.02.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் கனகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பர்வதம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் ஆனந்தலக்ஷ்மி (கிளி - கனடா), தங்கராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வராசா (கனடா), கேமாவதி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான சுகிர்தா, சிறீபதி (U.K) மற்றும் சியாமளா (ஓய்வுபெற்ற ஆசிரியர் St.Benadict Vidiyalayam), புஸ்பலதா, தயாளசீலன் (U.K), யசோதா (U.K), லோகராஜா (இத்தாலி) ஆகியோரின் அன்புத்தாயாரும் அழகரட்ணம் (லோகீஸ் ஐஸ்கிறீம் உரிமையாளர்), இராமச்சந்திரன், ரவீந்திரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் J/St.John's College), ராணி (U.K), கவிதா (U.K) சிவானந்தன் (U.K), வத்சலா (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியாரும் தேனகா (D.O தென்மராட்சி D.S Office), சுஜீவன் (லோகீஸ் ஐஸ்கிறீம்), நிஷாந்தினி, இராகுலன் (Prontolanka Pvt Ltd) தனுஷா (U.K), கிருஷன் (U.K), தேஜஸ்வர் (ஆசிரியர் - J/St.John's College) , பிரகதீஸ்வர் (Service Executive - United Motors), லோகதீஸ்வர் (யாழ் பல்கலைக்கழகம் 4 ஆம் ஆண்டு கலைப்பீடம்), யுகதீஸ்வர், நிரோஷன் (U.K), நிதீஸ் (U.K) மிருதுளா (U.K), மிருணன் (U.K), ஷாருகா (U.K), கார்த்திகா (இத்தாலி), விஷ்ணுகா (இத்தாலி) ஷப்திக்கா (இத்தாலி), சுதர்சன் (உள மருத்துவ சமூக உத்தியோகத்தர்), பிரபாகாந்தன் (Green Homes Cons.PVT Ltd) ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் தமிஷ்ராவின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (09-02-2020) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் (15/3, புதுவீதி கொய்யாத்தோட்டம்) அவரது இல்லத்தில் நடைபெற்று 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் . இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**15/13, புதுவீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**021 222 0486**



## திருமதி புவனேஸ்வரி இராஜநாயகம்

யாழ். சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட புவனேஸ்வரி இராஜநாயகம் கடந்த (02-02-2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இந்திரை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான துரையப்பா இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், இராஜநாயகம் அவர்களின் பாசமிகு மனைவியும்,தர்சிகா அவர்களின் அன்புத் தாயாரும் கமலாதேவி (முத்து), வள்ளிப்பிள்ளை, பத்மநாதன்(சுவிஸ்), நடராசா(கனடா), கனகாம்பிகை (ஐக்கிய அமெரிக்கா), புண்ணியமூர்த்தி (ஐக்கிய அமெரிக்கா), மனோ(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமநாயகம், பாலசுப்பிரமணியம், விமலா, காலஞ்சென்ற குமாரசாமி, வைத்திலிங்கம், சற்குணவதி, சுசீலாதேவி, காலஞ்சென்ற சிவராசா, பாலராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சரோஜினிதேவி, கனகாம்பிகை, சந்திரகுமார் ஆகியோரின் அன்புச் சகலியும்,உதயகுமார்- ரிக்சிகா, சிறீஸ்கந்தராசா, ராகினி, லஜிந்தன், லக்சனா ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும் தினேஸ், நிமேஸ், நிரோஸ் ஆகியோரின் அன்பு பெரிய தாயாரும், ஜமுகன், ஜங்கரினி, பானுரதன்- திவ்யா, நீதன், கீதன், கபிலன்-செவிதா, கயூரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆத்தியா, நித்தியா, அபிவர்ஷன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (09-02-2020) ஞாயிற்றுக்கிழமை பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் சிறுப்பிட்டி காலயன் புலம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**+94 771382606** **தகவல்: குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னப்பெட்டை இராமன்



கைதடி தெற்கு கைதடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னப்பெட்டை இராமன் நேற்று (07.02.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுங்கிலியன் இராமனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கொத்தன் வெள்ளாச்சி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான சுங்கிலியன் இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகளும், கந்தசாமி (ஆதார வைத்தியசாலை -சாவகச்சேரி மேற் பார்வையாளர்), பரமசாமி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வைகுந்தநாயகி, சுமலினி (சுவிஸ்), ஆகியோரின் மாமியாரும் சுகன்யா, நிரோசன், விஜித்திரா, ஆகாஷ் (சுவிஸ்) அவனேஸ் (சுவிஸ்), ஆகியோரின் அன்பு பேர்த் தியும் காலஞ்சென்ற கறுவல், வெள்ளையன் சங்கரப்பிள்ளை மற்றும் பொன்னம்மா, செல்லம்மா, கதிரவன் ஆகியோரின் சகோதரியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2020) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊரியான் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

பிற்போடப்பட்டுள்ளது முல்லைத்தீவுபெப்.8 தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ,தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) மாவட்ட அலுவலகம் திறக்கப்படும் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது. முல்லைத்தீவு கொக்கிளாய் வீதியில், உண்ணாப்பிலவுப் பகுதியில் நாளை ஞாயிற்றுக்கிழமை திறக்கப்படவிருந்த, தமது அலுவலகத் திறப்பு நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளதாக அந்த இயக்கத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் உதயனுக்குத் தெரிவித்தார். (ந)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னுச்சாமி பாலஸ்ரீ



மலர்வு 11.10.1970 உதிர்வு 07.02.2020

யாழ் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலடியை பிறப்பிடமாகவும் கொல்லவிளாங்குளம் வவுனிக்குளத்தை வசிப்பிடமாகவும் தற்போது அதிகார் செல்லமுத்து வீதி, மானிப்பாய் தெற்கு, மானிப்பாயை தற்போது வசித்து வந்தவருமாகிய பொன்னுச்சாமி பாலஸ்ரீ நேற்று **(07.02.2020)** வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி நென்சலீன் தம்பதிகளின் அன்புப் புதல்வனும் செல்வமலர்வதியின் அன்புக் கணவரும் சந்திரமலர், பிரபா, ஜீவா, பிருந்தாபன், ஜெயவதனி, பிறேமச்சந்திரன், சுஜாத்தா ஆகியோரின் அன்புச் சகோதரனும் திவியாவின் பாசமிகு த்ந்தையும் துஷியந்தனின் (குவில்) மாமனாரும் வர்சனா, சஸ்விகன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 873 3091, 077 389 9847**

**தகவல்: குடும்பத்தினர்.**
**(துஷியந்தன் - மருமகன்)**

தோற்றம் 22 . 10 . 1937



மறைவு 06 . 02 . 2020

## செல்லத்துரை சிவசக்திவேல்

[இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்]

கந்தரோடையை பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிவசக்திவேல் கடந்த **(06.02.2020)** வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மகனும் அன்னபூரணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கஜனின் (லண்டன்) அன்புத் தந்தையும் சிவரூபியின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பவானி, பகீரதி, சாரதாதேவி, அம்பிகை, நிர்மலாதேவி, சண்முகதாஸ், செந்தில்வேல் ஆகியோரினதும் கதிர்காமசோதியின் அன்புச் சகோதரனும் சுவர்ணா, சரண்யா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(09.02.2020)** ஞாயிற்றுக்கிழமை முற்பகல் **9.00** மணிக்கு அவரது இல்லத்தில் (பெருமாற்கடவை பிள்ளையார் வீதி, அளவெட்டி) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்மனை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**தொடர்புகளுக்கு:- கஜன் (0044 771898 3115, 0094 77460 1619)**

# மாணவர்மையக் கல்விக்கு மாறுவோம்

# ஜனாதிபதி கோத்தா தெரிவிப்பு



கொழும்பு, பெப்.8

ஆசிரியர்மைய மற்றும் பரீட்சைமையக் கல்வி முறைமையிலிருந்து, மாணவர் மைய கல்வி முறைமைக்கு மாற வேண்டிய காலம் உருவாகியிருப்பதாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

கொழும்பு ஆனந்தா கல்லூரியின் புதிய 07 மாடிக்கட்டிடம் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவால் நேற்று திறந்து வைக்கப்பட்டது. கட்டிடத்தை மாணவர்களிடம் கையளித்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

பாடசாலை வாழ்க்கையில் பெற்றோர்களின் மூலம் பிள்ளைகளுக்குத் தேவையற்ற அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக் கூடாது. எமக்கு தேவையாக இருப்பது பரீட்சைகளுக்கு தோற்றி வெற்றி பெறுவதற்காக மட்டும் பிள்ளைகளை தயார்படுத்துவதல்ல, நாட்டின் பொருளாதாரத்துக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் செயற்திறனாக பங்களிக்கக்கூடிய ஒரு முழுமையான பிரஜையை உருவாக்குவதே ஆகும்.

பல்கலைக்கழகங்களுக்கு வருடாந்தம் அதிகளவு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. சிறந்த தரம் வாய்ந்த மூன்றாம் நிலை கல்வி முறைமையை உருவாக்குவதே எனது முக்கிய நோக்கம்.

21ஆம் நூற்றாண்டு அறிவின் நூற்றாண்டாக அடையாளப்படுத்தப்படுகின்றது. இது இலங்கைக்குள்ள ஒரு முக்கிய சந்தர்ப்பமாகும். உற்பத்தி கைத்தொழிலுக்கான வரையறுக்கப்பட்ட வாய்ப்புகளைக் கொண்டுள்ள எமக்கு, அதிர்ஷ்டவசமாக கற்ற தொழிற்படையொன்று உள்ளது. அதிலிருந்து, அதிகபட்ச பயனை பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் சியாமோபாலி மகாநிக்காயவின் மல்வத்தை பீட அனுநாயக்க தேரர் சங்கைக்குரிய நியங்கொட விஜத்த சிறி தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினர், சபாநாயகர் கரு ஜயசூரிய, அமைச்சர்களான டளஸ் அழகப்பெரும, பந்துல குணவர்தன, பிரசன்ன ரணதுங்க, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, மேல் மாகாண ஆளுநர் மருத்துவ கலாநிதி சீத்தா அரம்பேபொல, நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்லூரியின் அதிபர் எஸ்.எம்.கீர்த்திரத்ன உள்ளிட்ட ஆசிரியர்கள் மற்றும் கல்லூரியின் பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ந)

## அவகாசத்தால்...

ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வுகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு கடந்த ஆண்டு இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்பட்டது. எதிர்வரும் மார்ச் மாதத்துடன் முதலாவது ஆண்டு நிறைவடைகின்றது. இது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வாய்மொழி மூல அறிக்கையை சமர்பிக்கவுள்ளார்.

இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்றும், தீர்மானத்திலிருந்து விலகப் போவதாகவும் இலங்கை அரசு அறிவித்துள்ளது. இலங்கை அரசின் ஜனாதிபதியும் பகிரங்கமாக அதை வெளிப்படுத்தியுள்ளார்.

இணங்கி ஏற்றுக் கொண்ட தீர்மானத்தை கடந்த ஓராண்டாகவும் அவர்கள் நடைமுறைப்படுத்தவில்லை. தற்போது விலகப் போவதாகவும், நடைமுறைப்படுத்தப் போவதில்லை என்றும் அறிவித்துள்ளார்கள். இவ்வாறானதொரு சூழலில் இலங்கை அரசுக்கு மீண்டும் கால அவகாசம் வழங்காமல், இந்த விடயத்தை வேறு பொறிமுறைக்கு அமைய பாதுகாப்புச் சபைக்கு எடுத்துச் செல்ல வேண்டும். இதுவே பொருத்தமான தருணம் என்றார். (ஒ,5)

## நள்ளிரவு...

னர். வீட்டிலிருந்தவர்கள் உறக்கத்தில் இருந்தபோது கூரையைப் பிரித்து உள் நுழைந்த கொள்ளையர்கள் சிலர், வீட் ஏனைய கொள்ளையர்கள் வீட்டுக்குள் நுழைந்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

வீட்டிலிருந்தவரையும், அவரது மனைவியையும், மகளையும் கூரிய ஆயுதங்களைக் காட்டி மிரட்டி, அவர்களின் வாய்களில் துணியை அடைந்து அச்சுறுத்திய கொள்ளையர்கள் வீட்டைச் சல்லடையிட்டுத் தேடி நகைகளைக் கொள்ளையிட்டுள்ளனர். வீட்டிலிருந்த கைபேசிகளையும் அபகரித்துக் கொண்டு, வாகனம் ஒன்றில் கொள்ளையர்கள் தப்பிச் சென்றனர். தாம் கொண்டு வந்த ஆயுதம் ஒன்றைத் தவறி விட்டுப் புறப்பட்ட கொள்ளையர்கள் மீண்டும் வந்து எடுத்துச் சென்றனர் என்று கூறப்படுகின்றது.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாகச் சாவகச்சேரிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அவர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். தடயவியல் பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-131,9)


## டில்லியில்...

சென்னை, பெப்.8

மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் குழுவினர் நேற்று மாலை இந்தியா சென்றடைந்தனர்.

புதுடில்லியில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. புதுடில்லியில் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான குழுவினர் அந்த நாட்டுப் பிரதமர் நரேந்திர மோடி, வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோரைச் சந்திப்பர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஏ)

NSC
புதியதோர் உதயம்
NORTHERN SPORTS COLLEGE
4 வயதிலிருந்து பயிற்சிகள்
எமது நிறுவனமானது இன்றிலிருந்து (08.02.2020) உள்ளக விளையாட்டுக்களுக்கான பயிற்சிகளை ஆரம்பிக்கின்றது.
• Table Tennis • Caram • Chess
• Batminton • Karate • Silampu
• Tennis • Kik boxing • Yoga
• Body Shapeup work out (உடல் நிறை குறைதல்)
இன்றையதினம் பயிற்சியில் இணைபவர்களுக்கு அனுமதி இலவசம்.
ஆரம்பம் பி.ப 3.30
48/3, கைதடி வீதி. மருதனார்மடம்.
076 062 7416, 077 968 7602, 077 799 9323, 077 675 1646

76 ஆவது பிறந்த தின நல்வாழ்த்துக்கள்
எழுபத்தாறாவது பிறந்தநாள் காணும்
கந்தமுருகேசனார் வீதி, தென்புலோலி
உயர்திரு.க.சி.சிவசுப்பிரமணியம்
அவர்கள் இனிதே மாண்புடன் வாழ்க!
பல்லாண்டுகாலம் வளமுடன் வாழ்க!


இன்று (08.02.2020) சனிக்கிழமை பிறந்தநாளைக் கொண்டாடும் பிரபல கல்விமான் திரு.க.சி.சிவசுப்பிரமணியம் அவர்கள் தளராத செல்வமும், தாழ்வில்லா வாழ்க்கையும் நிறைவான ஆயுளும் பெற்றுப் பல்லாண்டுகாலம் இந்த மண்ணில் மாண்புடன் வாழ்ந்திட எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சி நிற்கின்றோம்.
தனது கற்பித்தல் பணிமூலம் இலங்கையில் உள்ளவர்களால் மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள பெயர்பெற்ற அறிஞர்களாலும் நன்றி உணர்வோடு இன்றும் பேசப்பட்டுவரும் எங்கள் பேராசான் திரு.க.சி.சிவசுப்பிரமணியம் அவர்கள் 1944 ஆம் ஆண்டு மாசி மாதம் எட்டாம் திகதி தைப்பூசத் திருநாளில் கந்தமுருகேசனார் வீதி, தென்புலோலியில் பிறந்தார். அவர் சிறு வயதில் இருந்தே கல்வியில் மிகப்பெரிய ஆர்வத்தைக் கொண்டிருந்தார். அவருடைய பத்தொன்பதாவது வயதில் பேரறிஞர் கந்தமுருகேசனாரின் "தமிழகம்" என்ற திண்ணைப் பள்ளியில் அவரின் விருப்பத்துக்குரிய மாணவனாகப் படித்து சிறுவயதிலேயே பண்டிதர் பட்டம்பெற்ற பெருமையைப் பெற்றார். அவர் தனது இருபத்தைந்தாவது அகவையில் கலைப்பட்டதாரி ஆனார்.
அவர் ஆங்கிலம், பிரெஞ், இலத்தீன் ஆகிய மொழிகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றார். அவர் குறைந்தது மூன்று மணித்தியாலம் தொடர்ச்சியாக மாணவ, மாணவிகளுக்கு அவர்களுடைய கல்வி முன்னேற்றத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்த மொழிகளைக் கற்பித்து வந்தார். கற்பித்து வருகின்றார். அவருடைய கற்பித்தலால் பல மாணவ மாணவிகள் பெரும் பயன் அடைந்திருக்கிறார்கள். பல வைத்திய நிபுணர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அவரிடம் வந்து தங்கள் சந்தேகங்களைச் சொல்லி அதற்கான சரியான, தெளிவான விளக்கங்களையும் பெற்றுச் செல்கிறார்கள்.
அவர் அவருடைய கற்பித்தல் பணியில் மேலும் சிறப்புற்றோங்க திருமால் திருவருளை இறைஞ்சுகின்றோம்.
அவர் உடல் நலத்தோடும் ஏனைய சகல வளங்களோடும் அவருடைய கல்விப்பணியைத் தொடர்ந்து சிறப்புடன் செய்ய இறைவன் திருவருள் புரிவாராக!
வாழ்க வளமுடனும், நலமுடனும்!
அன்பு மகள் பிரியதர்சினி குடும்பத்தினர்,
உறவினர், நண்பர்கள், மாணவ மாணவிகள்.
021 226 0277

## 25ஆவது ஆண்டு நினைவலைகள்



அமரர்
**ஏரம்பு சோதிலிங்கம்**
(மண்டைதீவு)

தலைவர்:-
**மதி ஒளி ச.ச. நிலையம்**
**பண்டிதர் நூல் நிலையம்**
**இணக்க சபை உறுப்பினர்**

புகழ் பூத்த சோதி என்னும் நாம் சொன்னால்
மண்டைதீவு என்னும் பெயர் துலங்கிடுமே.
வீரத்தின் விளை நிலமே வெற்றித்திருமகனே
மானிடரால் வெல்ல முடியாத வீரமறவனை
வென்றுவிட்டான் காலனவன் கணப்பொழுதிலே
இருபத்தைந்து ஆண்டானாலும் நாம்
மறவோம் வாழ் நாளிலே

இல.27/1, கருவேலடிலேன்,
கொக்குவில்.
**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19 . 03 . 1937



மறைவு
08 . 02 . 2019

**அமரர் கிருஷ்ணபிள்ளை கந்தசாமி**
(ஓய்வுநிலை உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு
ஒன்று மறைந்ததையா எம் உள்ளங்களில்
என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

23/4, புதிய செங்குந்த வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
(CS/31099)
(11,17)
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



**இராசரத்தினம் பாலகிருஷ்ணன்**
('பாலா' சினிமா உரிமையாளர்)

சாவகச்சேரி வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் பாலகிருஷ்ணன் நேற்று (07.02.2020) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் - தங்கம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், பாலகுமார், மஞ்சுளாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/ மீசாலை வீரசிங்கம் மத்தியகல்லூரி), இராசேந்திரம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், இந்திராதேவி, மகேசன் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/ மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்), குமுதநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2020) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:- சகோதரர்கள்**
**இ.பாலகுமார், இ.இராசேந்திரம்**

(J/11505)(11,17)
**077 691 3281**

# சு.கவின் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளும் மொட்டு

**தணிகா நுண்கலைக்கல்லூரி**
**&**
**சாந்தா சிறுவர் விளையாட்டுக் கழகம்**

**தைப்பூசத்தினை முன்னிட்டு புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**
கர்நாடக சங்கீதம், நடனம், சித்திரம், ஓகன் மற்றும்
**தரம் 1 - 5 வரையான மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்கள் ஆரம்பம் பி.ப 3 மணி.**
எமது சாந்தா சிறுவர் விளையாட்டுக் கழகத்தினால் கரம், மேசைப்பந்தாட்டம், சதுரங்கம் ஆகிய விளையாட்டுக்கள் இன்று தொடக்கம் நடைபெறும்.
**ஆரம்பம் :- 5.30**
**077 762 4475**

## வாடகைக்கான கடைகள் உண்டு

**இலக்கம் 10, செம்மா தெரு (Jumma Mosque Lane)** வில் **அமையவிருக்கும்**
**கடைத்தொகுதியில் கடைகள்**
**தேவைப்படுவோர்** நேரில் தொடர்புகொள்ளவும்
**வியாபார தன்மைகள் : புடைவை, அழகுசாதனம் , ரெயிலறிங், போன்விற்பனை, சிற்றுண்டி.**
தொடர்பு முகவரி: **54, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.**
**075 597 2565**
(CS/31095)(13,17)

## 45ஆம் நாள் நினைவாக

பிறப்பு
30 ... 04 ... 1995



இறப்பு
26 ... 12 ... 2019

**அமரர் கண்ணன் ஜேம்சன்**

திங்கள் பல கடந்தும் தேயாது உன் நினைவு
எங்கள் குல விளக்கே எரிகின்றோம் உனை பிரிந்து
காலன் அவன் செய்த கடும்சூழ்ச்சி பலித்ததுவோ
வாழும் ஜேம்சன் தனை வாவென்று அழைத்ததுவோ
மறையும் காலமதில் மாறாத உன் நினைவில்
இறையை உனக்காய் வேண்டி இந்நாளில் பணிகின்றோம்.

மானிப்பாய் வீதி,
மருதனார்மடம்.
**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

விண்ணில்
24 . 11 . 1962



மண்ணில்
09 . 01 . 2020

**அமரர் ச.அன்ரன் இம்மனுவேல்**

தந்தையாய் தலை தடவி
தாரமாய் வழி நடத்தி
பணிகளை முடித்து விட்டு
இளைப்பாறச் சென்றுவிட்டாய்

ஒருமாதம் கடந்தபோதும்
துணையாளன் உம் பிரிவை
மனம் ஏற்க மறுக்குதப்பா
உன் முகம் காண ஏங்குதப்பா

இடைநடுவில் சென்றாலும்
இறுதிவரை நீங்காமல்
நிழலாக எமைத் தொடர்வாய்
நினைவெல்லாம் நிறைந்திருப்பாய்

வான் வீட்டில் குடி புகுந்து
இறைபதத்தில் உன் ஆன்மா
அமைதியில் இளைப்பாற
இறையருளை வேண்டுகிறோம்

979/1, வளன்புரம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
(ANE/ 1101)
(11,17)
பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**
**077 341 5667**

கொழும்பு, பெப். 8

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் சொற்போர் தொடுத்து வருகின்றனர். இதற்குப் பதிலடி எதுவும் கொடுக்காமல் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மௌனம் காத்து வருகின்றனர்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தலைமையிலான அரசியல் கூட்டணியில் இணைத் தலைமை பதவியை மைத்திரிக்கு வழங்க முடியாது என்றும், பொதுத் தேர்தலில் அந்தக் கட்சி உறுப்பினர்களுக்கு 30 சதவீத ஆசன ஒதுக்கீட்டை வழங்க முடியாது எனவும் மொட்டு கட்சிக்காரர்கள் இடித்துரைத்து வருகின்றனர்.

2019ஆம் ஆண்டு நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின்போது ஜனாதிபதி வேட்பாளர் கோத்தாபய ராஜபக்சவுக்கு நேசக்கரம் நீட்டிய சுதந்திரக் கட்சி, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையிலும் கைச்சாத்திட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுச் சின்னத்தில் போட்டியிடுவதற்கும், பொதுத்தேர்தலின்போது கதிரைச் சின்னத்தில் களமிறங்குவதற்கும் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது. கூட்டணியில் மைத்திரிக்கு உயர் பதவி ஒன்றை வழங்குவதற்கும் பச்சைக் கொடி காட்டப்பட்டிருந்தது.

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னர் சுதந்திரக் கட்சியை ஓரங்கட்டும் வகையிலேயே மொட்டுக்கட்சி காரர்களின் நடவடிக்கைகள் அமைந்தன. நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கும்வேளையில் 'மொட்டு' சின்னத்திலேயே போட்டியிடுவோம். அதனை விட்டுக்கொடுக்க முடியாது என்று அறிவித்து வருகின்றனர். இதனால் சுதந்திரக்கட்சிக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

'தங்களுக்கு மக்கள் செல்வாக்கு இருக்கின்றது என்று கூறும் சுதந்திரக் கட்சி பொதுத்தேர்தலில் தனித்து போட்டியிட்டு அந்தப் பலத்தை காட்ட வேண்டும். அதன் பின்னர் எங்களுடன் கூட்டணி அமைக்கலாம்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் கனக ஹேரத் தெரிவித்தார்.

'பொலன்னறுவை மாவட்டத்தில் சுதந்திரக் கட்சிக்கு இடமளிக்கமாட்டோம். அந்தக் கட்சியினர் தனித்துப் போட்டியிட்டால் நாடு முழுவதும் நான்கு ஆசனங்களைக்கூட கைப்பற்ற முடியாது' என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் ரணசிங்க குறிப்பிட்டார். (ஒ,5,44)

---


*ரஞ்சன்...*

ளது.

சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ரஞ்சன் ராமநாயக்க நாடாளுமன்றில் சமர்ப்பித்த இறுவட்டுக்களில் தேசிய பாதுகாப்பு மற்றும் பொய்யான விடயங்களை தவிர்த்து ஏனைய இறுவட்டுக்களை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டது.

இறுவட்டுக்களில் உள்ள விடயங்களை தெரிந்து கொள்ளவேண்டும் என்பதால் அவற்றை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தார். (எ-44)



# ஓராண்டு நினைவஞ்சலி

## அமரர் எம்.ஐ.றமீன் கிறிஸ்ரி

(உரிமையாளர் பிரதான வீதி தனு எலக்றிக்கல்ஸ்,
கொழும்புத்துறை சுஜந்தன் மரக்காலை, பிரபல கட்டட ஒப்பந்தகாரர்
றொசாறியன் சனசமூக மீளுருவாக்குனர்களில் ஒருவர்)

**தோற்றம்**
**17.07.1957**

**மறைவு**
**09.02.2019**



"நல்லபோராட்டத்தில் ஈடுபட்டேன். ஓட்டத்தை முடித்துக்கொண்டேன்.
விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்

(2 திமொ: 4:7)

ஓராண்டு கடந்ததே! பிரிவின் காயங்கள் ஆறவில்லை!
உலகில் நீர் வாழ்ந்த காலம் சிறிதெனினும்
ஊரார்போற்றிட உறவுகள் வாழ்த்திட வாழ்ந்தீரே!
பாசத்திற்குரிய தந்தையாக, பிரமாணிக்கமுள்ள கணவராக
நேர்மையுடன் கடமையும் கொண்ட பணியாளனாக
கரிசனையும் இரக்கமும் நிறைந்த நண்பனாக
சமூக சமய சேவை ஆர்வலராக எம் உள்ளத்தில் நிறைந்தவரே!
அன்பான உம் முகதரிசனம் தேடுதே எம் ஈரவிழிகள்
பண்பான அப்பாவே! உம் அன்பான வார்த்தைகள்
கட்டுக்கோப்பான வாழ்வு முறைகள் என்றும் நிழலாடுதே
உம் ஊன் உடல் பிரிந்தாலும் நீங்கா நினைவுகளுடன்
நீர் இறைவனில் அமைதிபெற இரந்து வேண்டுகின்றோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (08.02.2020) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் இணைந்து செபிக்கவும் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**28/2, ஆனந்தன் வடலி வீதி,**
**கொழும்புத்துறை.**

(cs 3244) (13.17)

**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## திருமதி தம்பிப்பிள்ளை மகேஸ்வரி

யாழ்.புங்குடுதீவு, 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பெருமாள் கோயிலடி, யாழ்பாடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிப்பிள்ளை மகேஸ்வரி 06.02.2020 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (வர்த்தகர் சிறி முருகன் ஸ்ரோர், தெரணியகல) - பரமனாட்சி தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - காமாட்சி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - சர்வலோகலட்சுமி அவர்களின் மருமகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா மரகதம் தம்பதிகளின் பெறாமகளும், காலஞ்சென்ற செல்லையா தம்பிப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற அரசாங்க அச்சக உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், பத்மராஜா (சிவா - கனடா), தமிழ்விழி (சுவாகா - கனடா), பத்மரூபன் (காண்டீபன் -கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் பரமேஸ்வரன், விக்கினேஸ்வரன் (விக்கினேஸ்வரா ஹாட் வெயார், கொழும்பு - 12, நியூ குவாலிற்றி பக்டறி - பேலியகொட) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், . மகாதேவனின் உடன் பிறவாச் சகோதரியும், அரசபாலினி (கவிதா - கனடா), நகுலேந்திரன் (நகுலன் -கனடா), துஷ்யந்தி (துளசி - கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான நடராஜா, மகேஸ்வரி, ஐயாத்துரை, அன்னம்மா, மாணிக்கம், தையல்நாயகி (நோனா) மற்றும் ராஜசுலோசனா, விஜயராணி (ஓய்வுநிலை கணக்காளர் - தேசிய வீடமைப்பு அதிகாரசபை), பவானி (சோதி) ஆகியோரின் மைத்துனியும், அகரன், பிரவீன், அதினா, ஜர்ஷனா, ஹரிஷனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் இன்று (08.02.2020) சனிக்கிழமை நண்பகல் 12 மணியிலிருந்து இன்பம் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (09.02.2020) ஞாயிற்றுக்கிழமை இன்பம் மலர்ச்சாலையில் (70, மானிப்பாய் வீதி, ஆலடிச்சந்தி, ஓட்டுமடம்) இறுதிக் கிரியைகள் நடைபெற்று பிற்பகல் ஒருமணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



அன்னை மடியில்
29.03.1944

ஆண்டவன் அடியில்
06.02.2020

**தகவல்:- குடும்பத்தினர்.**

(CS 31095) (11,17)

**077 476 5992, 0041 697 04189, 077 392 6839**

# தனித் தாயக பல்லவியை ஆரம்பித்தார் ரம்புக்வெல



## பண்டத்தரிப்பு பரிஸ் ப.நோ.கூ.சங்கம் (வ - து)

### பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தற்காலிக உற்பத்தி பகுதி களஞ்சியப் பொறுப்பாளர் - 01**

**சம்பளத்திட்டம் :** 14590 - 17290
130x10 - 140x10

**தகைமைகள் :** 108/81 இன் படி

அ) கூட்டுறவு பணியாளர் 13ஆவது சம்பளத்திட்ட களஞ்சியப் பொறுப்பாளர் அல்லது கொள்வனவு உத்தியோகத்தர் அல்லது சில்லறை களஞ்சிய மேற்பார்வையாளர் அல்லது சில்லறை களஞ்சிய முகாமையாளர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 14ஆவது ம்பளத்திட்ட அப்படிப்பட்ட பதவி ஒன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு பணியாளர் (உ/த) சான்றிதழ் அல்லது க.பொ.த (உ/த) மூன்று பாடங்களில் சித்தி

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் (சா/த) சான்றிதழ் அல்லது க.பொ.த (சா/த) எண்கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட நான்கு பாடங்களில் திறமை சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் களஞ்சியப் பொறுப்பாளர் பதவி ஒன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

**வயதெல்லை : 18 - 45**
(கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.)

**விண்ணப்ப முடிவுதிகதி : 17.02.2020**

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தி **பொதுமுகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம் பண்டத்தரிப்பு** என்ற முகவரிக்கு **17.02.2020**ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(in.12490) (13.17)

## பண்டத்தரிப்பு பரிஸ் ப.நோ.கூ.சங்கம் (வ - து)

### பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தற்காலிக கிளை முகாமையாளர் வெற்றிடம் - 01**

**சம்பளத்திட்டம்** 14230 - 16730
120x10 - 130x10

**தகைமைகள்:**

அ) கூட்டுறவு பணியாளர் 14ஆவது சம்பளத்திட்டத்தில் சம்மந்தப்பட்ட துறையிலான பதவியில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 15ஆவது சம்பளத் திட்டத்தில் சம்மந்தப்பட்ட துறையிலான பதவியில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சா/த) பத்திரம் / க.பொ.த (சா/த) இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம் / தூய கணிதம். சிங்களம் / தமிழ் மொழி என்பவற்றினை உள்ளடக்கியதாக நான்கு பாடங்களில் திறமை சித்தியுடன் கூடிய ஆறு பாடங்களிலான சித்தியும். சம்மந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

**வயதெல்லை : 18 - 45**
(கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.)

**விண்ணப்ப முடிவுதிகதி : 17.02.2020**

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தி **பொதுமுகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம் பண்டத்தரிப்பு** என்ற முகவரிக்கு **17.02.2020** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(in.12491) (13.17)



கொழும்பு, பெப்.8
போரின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியாமல் போன தனி தாயக கோட்பாட்டை பேனாவின் ஊடாக பெற்றுக்கொள்ள கூட்டமைப்பு முயற்சிக்கின்றது என்று அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (எ)



**காணி தேவை**
யாழ் நகரை அண்டிய பகுதியில்
வீடு கட்டுவதற்கு உகந்த 1-2 பரப்பு காணி
தேவை.
**தொடர்பு -077 365 5947**

**மணமக்கள்**
**சூரியன் திருமணசேவை**
எங்களிடம் உள்நாட்டு வெளிநாட்டு அரச, தனியார்துறை பட்டதாரி ஆண், பெண் ஜாதகக்குறிப்புக்கள் உண்டு.
**சூரியன் திருமணசேவை**
**561, K.K.S. வீதி, மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம்**

**வேலையாள் தேவை**
யாழ்ப்பாணத்தில் உள்ள வீடு ஒன்றிற்கு முழு நேரமாகவோ அல்லது பகுதி நேரமாகவோ குழந்தையை பராமரிக்கக் கூடிய பெண் ஒருவர் தேவை.
**சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.**
**தொடர்பு:- 077 245 3990**

A member of the IDOL family
**UV Water Solution**
water science technologies
Right solution for water issues
நீர் தொடர்பான சகல பிரச்சினைகளுக்கான தீர்வுகளுக்கு
**T.P: +94775092737**

## அருள் மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்



## தைப்பூச மஞ்சத்திருவிழா

### சிறப்புப் பொங்கல் பால்குடப் பவனி இன்று 08.02.2020 காலை 6.00

- காலம் **08.02.2020** சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அன்று காலை **6.00**மணிக்கு பால்குடப்பவனி மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி ஆலயத்தை வந்தடையும்.
- காலை **10.00 மணிக்கு** மாபெரும் பொங்கல் நிகழ்வு ஆரம்பமாகி **4.00 மணிக்கு** நிறைவடையும். மதியம் அன்னதானம் நடைபெறும்
- இரவு **6.00 மணிக்கு** வசந்தமண்டபபூசையும் **7.00மணிக்கு** உலகப்பெருமஞ்சம் வீதியுலாவும் பாரம்பரிய கலைகலாசார நிகழ்வுகளும் இடம்பெறும்.

பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்ப்பதால் அடியவர்களின் வசதி கருதி பாதுகாப்பு ஏற்பாடுகள். வாகனபாது காப்பு வசதிகள். தாகசாந்திநிலையங்கள் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

.................... விளம்பர அனுசரணையாளர்கள் ....................

**Pb Mobile Phone Shop**
Kit Card, Sim Card, Unlock, Mobile Phone Services, Phone Cover, Battery Charger and all Phone Accessories
**No.381/1, K.K.S. Road, Chunnakam**
banu724@gmail.com
T.P:- 0776636619, 0214545135

**S.V.T கோபுரம், சகானா**
**அரிசி ஆலை**
குழுமாட்டுச் சந்தி,
நெளுக்குளம், வவுனியா.

**VITHUNA REST INN**
60,Jumma Mosque Lane, Grand Bazaar, Jaffna.

## வசந்த...

2009ஆம் ஆண்டுகளில் கொழும்பு, வத்தளை, கொட்டாஞ்சேனை மற்றும் தெகிவளைப் பகுதிகளில் 5 மாணவர்கள் உட்பட 11 பேரை கப்பம் பெறுவதற்காக வெள்ளை வான்களில் கடத்திச் சென்று தடுத்து வைத்திருந்து கொலை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்ட கடற்படைத் தளபதியான அட்மிரல் ஒப் த ப்லீட் வசந்த கரன்னாகொட, கடற்படை ஊடகப் பேச்சாளர் தசநாயக்க உட்பட 12 கடற்படையினருக்கு எதிராக மேல் நீதிமன்ற நீதிபதிகள் சம்பா ஜானகி ராஜரத்னத்தின் தலைமையின் கீழ் மேல் நீதிமன்ற நீதிபதிகளான அமல் ராஜகருணா, நவரத்ன மாரசிங்க ஆகியோர் உள்ளடங்கிய சிறப்பு "ட்ரயல் அட்பார்" நீதிமன்றில் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

14 எதிராளிகளுக்கும் அழைப்பாணை அனுப்பப்பட்டு கடந்த மாதம் 24ஆம் திகதி வழக்கு நீதிமன்றில் அழைக்கப்பட்டபோது 14 எதிரிகளில் 13 எதிரிகள் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர். 14ஆவது எதிரியாக பெயர் குறிப்பிடப்பட்டிருந்த முன்னாள் கடற்படைத் தளபதியான அட்மிரல் ஒப் த ப்லீட் வசந்த கரன்னகொட நீதிமன்றில் முன்னிலையாகத நிலையில் மீண்டும் 14ஆம் எதிரிக்கு பொலிஸ் மா அதிபர் ஊடாக நீதிமன்றால் அழைப்பாணை அனுப்பப்பட்டு வழக்கு பெப்ரவரி மாதம் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது

வழக்கு நேற்று அழைக்கப்பட்டபோது 14ஆவது எதிரியாக பெயர் குறிப்பிடப்பட்டிருந்த முன்னாள் கடற்படைத் தளபதியான அட்மிரல் ஒப் த ப்லீட் வசந்த கரன்னகொட நீதிமன்றில் முன்னிலையாகவில்லை.

அதனையடுத்து நீதிமன்றம், பொலிஸாரிடம் ஏன் அழைப்பாணை 14ஆம் எதிரியிடம் பாரமளிக்கவில்லையென கேள்வி எழுப்பியது. நீதிமன்ற அழைப்பாணையை பாரம்கொடுப்பதற்காக இரண்டு மூன்று தடவை 14ஆவது எதிரியாக பெயர் குறிப்பிடப்பட்டிருந்த முன்னாள் கடற்படைத் தளபதியான அட்மிரல் ஒப் த ப்லீட் வசந்த கரன்னாகொடவின் இல்லத்துக்குச் சென்றதாகவும் 14ஆவது எதிரி அவரது இல்லத்தில் இல்லாமையால் அழைப்பாணையை பாரமளிக்க முடியவில்லையென பொலிஸார் தெரிவித்ததையடுத்து நீதிமன்றம்; பொலிஸ்மா அதிபர் மற்றும் கடற்படைத் தளபதி ஊடாக மீளவும் அழைப்பாணையை பாரமளிக்கும்படி உத்தரவிட்டு வழக்கை எதிர்வரும் 24 திகதிக்கு ஒத்திவைத்தது.

இந்த வழக்கில் அரச தரப்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சரத் ஜயமான்னவும் எதிரிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி அனில்சில்வாவும், காணாமல் போன 11 பேரின் பெற்றோர், உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி அச்சலாவின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவும் முன்னிலையாகினர். (ஒ.5)

## தரம் 4...

யில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மந்திகை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

பாடசாலையின் உப அதிபரே மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தினார் என்று மாணவர்களின் உறவினர்கள் கூறுகின்றனர். பாடசாலை விளையாட்டுப் போட்டிப் பயிற்சிகள் நடைபெற்று வந்த நிலையில், மாணவர்கள் வகுப்பறையில் விளையாட்டில் ஈடுபட்டனர் என்று தெரிவித்தே மாணவர்கள் தாக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக கல்வி அதிகாரிகள் மற்றும் சிறுவர் நன்நடத்தைத் திணைக்கள அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்றும், அவர்கள் இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-105)

## கோப்...

டத் தொடர் 2019 ஆம் ஆண்டி டிசம்பர் 2ஆம் திகதி முடிவுக்கு கொண்டுவரப்பட முன்னரும் இவர் அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தலைவராக செயற்பட்டிருந்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுக் கூடிய அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் கூட்டத்தில் அமைச்சர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, சுசில் பிரேமஜயந்த மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான அஜித் பி பெரேரா, அசோக் அபேசிங்க, டி.வி. சாணக மற்றும் கலாநிதி ஹர்ஷ டி. சில்வா ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

கோப்குழுவில் 16 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். ரஞ்சன் ராமநாயக்கவும் இந்தக் குழுவில் இடம்பெற்றிருக்கிறார்.

அதேவேளை, அரச கணக்குகள் பற்றிய குழுவின் (கோபா) தலைவராக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன மீண்டும் நேற்று ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்னவின் பெயரை நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில முன்மொழிந்ததுடன், நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி வழிமொழிந்தார். நாடாளுமன்றக் கூட்டத்தொடர் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 2ஆம் திகதி முடிவுக்குக் கொண்டுவரப்பட முன்னரும் இவர் அரச கணக்குகள் பற்றிய குழுவின் தலைவராக செயற்பட்டிருந்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று கூடிய அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி, இராஜாங்க அமைச்சர்களான துமிந்த திசாநாயக்க, சந்திம வீரக்கொடி, நாடாளுமன்ற உறுப்பினர்களான உதய பிரபாத் கம்மன்பில, அலிசாஹிர் மௌலானா, டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் விஜயபால ஹெட்டியாராச்சி ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (எ-44,24)

## பாலியல்...

மாணவர் நலச்சேவை உதவிப் பதிவாளர், மாணவர்கள் ஒழுக்காற்று உத்தியோகத்தர்கள், மாணவர் ஆலோசகர்கள், மூத்த மாணவர் ஆலோசகர்கள் அடங்கிய குழு அமைத்து சம்பவ இடத்துக்கு நேரில் சென்று விசாரணை நடத்துதல், மாணவிகளுக்கு பாலியல் ரீதியான துன்புறுத்தல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் குறுந்தகவல்கள், வட்ஸ்அப் தகவல்கள், அலைபேசி உரையாடல்கள் அடங்கிய தரவுகளை பொலிஸாரின் இணையவழிக் குற்றங்கள் பிரிவு (Sri Lankan Police Cyber crime unit) ஊடாக விசாரணை நடத்தல் மற்றும் மாணவர் ஒன்றியம் உடனடியாக புதுமுக மாணவர் வரவேற்பு நிகழ்வை நடத்த ஒழுங்கு செய்தல் ஆகிய முடிவுகள் அவர்களால் எடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் பாலியல் ரீதியிலான வக்கிரத்துடன் கூடிய பகிடி வதை தொடர்பாக இணையத்தளங்களில் தகவல்கள் **வெளியாகியிருந்தன. யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்துக்குத்** தெரிவான மாணவி ஒருவர் பகிடி வதை காரணமாக தற்கொலைக்கு முயன்றார் என்றும், ஜனாதிபதி, உயர்கல்வி அமைச்சர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் மட்டத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த விடயங்கள் தொடர்பாகப் பல மட்டங்களில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன

### பல்கலையில் கூட்டம்

அதையடுத்து யாழ்ப்பாண பல்கலைக்கழக ஒழுக்காற்று உத்தியோகத்தர்கள், முறைப்பாட்டு அதிகாரி, பிரதி முறைப்பாட்டு அதிகாரிகள், மாணவ ஆலோசகர்கள், மூத்த மாணவ ஆலோசகர்கள், மாணவர் நலச் சேவைகள் உதவிப் பதிவாளர் உள்பட மாணவர் ஒழுக்கத்துடன் தொடர்புபட்ட அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கி நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் யாழ்ப்பாணத்திலுள்ள பிரதான வளாகத்தில் கூட்டமொன்று நடைபெற்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மேற்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தின் பின்னர் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்று நேற்றுக் கிளிநொச்சி வளாகத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த விடயத்தில் யாழ்ப்பாண பல்கலைக் கழக நிர்வாகம் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பையும் ஊக்கங்களை வழங்குவோம் என மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

### ஆளுநர், கல்வி அமைச்சு விசாரணை

அதேவேளை, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடம்பெறுவதாகக் கூறப்படும் பகிடிவதை குறித்து வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ்.எம். சார்ள்ஸ் தனிப்பட்ட முறையில் விசாரணைகளை முன்னெடுத்திருக்கிறார். அவர் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்குச் சென்று இந்தவிடயங்கள் தொடர்பில் நேரில் ஆராய்வார் என்று தெரியவருகின்றது.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்கென உயர் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் அதிகாரிகள் குழு ஒன்று வரும் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு வருகை தரவுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

### மனித உரிமை ஆணைக்குழுவும் விசாரணை

இந்தப் பகிடிவதைக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தால் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் தொடர்பான அறிக்கையை வழங்குமாறு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்துக்குக் கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலக இணைப்பாளர் ரீ.கனகராஜ். (எ-20)

## வலையில்...

கிளிநொச்சியைச் சேர்ந்த அருணாச்சலம் பரமேஸ்வரன் (வயது-31) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

இரணைமடுக் குளத்தில் வலை வீசி மீன் பிடித்தபோது அந்த வலையில் முதலை ஒன்று அகப்பட்டுள்ளது. வலையில் அகப்பட்ட முதலையை விடுவிக்க பரமேஸ்வரன் முயன்றுள்ளார்.

அப்போது முதலை திடீரெனப் பாய்ந்து அவரது இது கைகளையும் கடித்து இழுத்துள்ளது. தடுமாறிய அவர் குளத்துக்குள் விழுந்துள்ளார். பின்னர் ஒருவாறு முதலையுடன் போராடி விடுபட்டு அவர் கரையில் ஏறியுள்ளார். படுகாயமடைந்த அவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார். (எ-105)

ராசி அதிர்ஷ்டம்
திகதி 07.02.2020 | வெற்றி வாரம் 2762 | வர்ணம் கரு நீலம்
கன்னி
வெற்றி இலக்கங்கள் 02 38 53 56
சனிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3, 048, 626/=
08.02.2020ம் திகதி சனிக் கிழமை இளம் நீலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 876
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2020.02.07
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,000,000/-
வெற்றி இலக்கங்கள் 17 33 37 52
ஆங்கில எழுத்து B
அபிவிருத்தி லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1122
சீட்டிழுப்பு திகதி 2020.02.06 வியாழக்கிழமை
N 22 36 62 72
8 5 1 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 94,763,436/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 321
சீட்டிழுப்பு திகதி 07.02.2020 சிவப்பு
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 20 63 67
விதி எண் 09
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 51, 440, 372/=
12.02.2020 ம் திகதி புதன் கிழமை நீலம் நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
011 333 546-47 www.dlb.lk

# நலம் அளிக்கும் தைப்பூசம்

இரா.நிஷாந்தன்





இந்து மக்களின் வாழ்வியலில் பஞ்சாங்கம் முக்கிய இடம்பெறுகின்றது. அந்தப் பஞ்சாங்கத்தில் இடம்பெறும் வாரம், திதி, நட்சத்திரம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சுப நிகழ்வுகள், விரதங்கள், பண்டிகைகள் என அனைத்தும் நிகழ்த்தப்படுகின்றன. அந்த வகையில் தை மாதத்தின் (தமிழ் மாதம்) பூச நட்சத்திரம் பௌர்ணமி திதியுடன் கூடி வருகின்ற நாள் தைப்பூசம் எனப்படுகின்றது.

அந்த வகையில் இறை வழிபாட்டுக்கு உகந்த நாளாக இந்த நாள் அமைந்தாலும் முருகப் பெருமானை வழிபடுவதற்கு மிகவும் சிறப்புப் பொருந்திய நாளாக இந்த நாள் கருதப்படுகின்றது. மேலும் இந்து மக்கள் பலசுப நிகழ்வுகளை இந்த நாளில் ஆரம்பிக்கின்றமையை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

**தைப் பூச நாளில் அரங்கேறிய சிறப்புக்கள்**

தைப்பூச நன்நாளில் பல சிறப்புக்கள் நிகழ்ந்தன என நம் புராண மற்றும் சமய இலக்கியங்கள் சான்று பகிருகின்றன. அந்த வகையில், இன்றைய நாளில்தான் இந்த உலகம் தோன்றியதாக நம்பப்படுகின்றது. மேலும் சிவபெருமான் உமாதேவியாருடன் தில்லையில் ஆனந்த தாண்டவம் புரிந்த நாளாகவும் இந்த நாள் அறியப்படுகின்றது. தவிர வருணன், அக்கினி, வாயு முதலிய தேவர்கள் சிவபெருமானிடம் வரம்பெற்று சக்தி அதிகம் பெற்றவர்களானதும் இந்நாளிலேயாகும். முருகப்பெருமான் தாய், பார்வதி தேவியிடம் இருந்து அசுரர் அழிவிற்காக வேலாயுதத்தை கரங்களில் பெற்ற நாளும் இதுவாகும். வள்ளலார் இராமலிங்க அடிகளார் தைப்பூச நாளிலேதான் ஒளிமயமாக மாறினார் எனவும் கருதப்படுகின்றது. தேவர்களின் குருவாகிய பிரகஸ்பதிக்குரிய நட்சத்திரமாக பூசம் விளங்குவதால் இந்த நாளில் குருவழிபாடு சிறப்புறுகின்றது.

**தைப் பூச நாளில் செய்யப்படுபவை**

தைப் பூச நாளில் தொட்டதெல்லாம் துலங்கும் என்பது முதுமொழியாகும். அதற்கமைவாக இந்த நாளில் பல சுப நிகழ்வுகளில் மக்கள் ஈடுபடுகின்றமையை வழக்கமாக கொண்டுள்ளனர். அந்த வகையில், வயலில் புதிர் எடுத்தல் செயற்பாடு முக்கியம் பெறுகின்றது. தவிர குழந்தைகளுக்கு காது குத்துதல், வித்தியாரம்பம் செய்தல், மேலும் புதிய வியாபாரங்களை ஆரம்பித்தல், திருமணப் பேச்சுக்கள் மற்றும் திருமண நிச்சயார்த்தம் செய்தல் என பல செயற்பாடுகள் இந்த நாளில் முன்னெடுக்கப்படுகின்றன.

**தைப்பூச நாளில் இறை வழிபாடு**

தைப் பூச நன்னாளில் இறை வழிபாடு செய்வது சிறப்புக்குரியதாகும்.

இந்த நாளில் சிவபெருமான் மற்றும் முருகப்பெருமான் ஆகியோரை விரதமிருந்து வழிபாடியற்றுவது நன்மையளிப்பதாகும். இன்றைய நாளில் முருகப் பெருமானை விரதமிருந்து பாற்காவடி மற்றும் பாற்செம்பு போன்ற நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் செயற்பாடுகளையும் கண்ணுற முடியும்.

# உலகம் தோன்றிய நாளான தைப்பூசத்தின் சிறப்புக்கள்

வசந்தராணி சண்முகம்



தைப்பூச நன்னாள் சிவசக்தி ஐக்கியத்தையும் மேம்பாட்டையும் விளக்கும் புனிதமான ஒரு பெருநாளாகும். தை மாதம் உத்தராயண காலத்தில் ஆரம்பம் உத்தராயணம் தேவர்களின் பகற்பொழுதென்பதால் தைமாதம் அவர்களது காலைப் பொழுதாகும்.

சிவாக்சமான சூரியன் மகர ராசியில் இருக்க சக்தி அம்சமான சந்திரன் கடகராசியில் (பூசநட்சத்திரம்) ஆட்சி பெற்றிருக்க சூரிய சந்திரர்கள் பூமிக்கு இருபுறமும் நேர்கோட்டில் நிற்றல் தைப்பூசத்துடன் இணைந்த பௌர்ணமியில் நிகழும்.

உலகசிருஷ்டி ஆரம்பமானது இந்தத் தினத்திலேதான். ஆண்டவன் முதலில் ஜலத்தையே படைத்தார்.

அதிலிருந்து பிரமாண்டம் உருவானது. இதனை நினைவூட்டப் பல ஆலயங்களில் இந்தத் தினத்தில் தெப்போற்சவம் நடைபெறுவதுண்டு.

சிவசக்தி ஐக்கியமான முருகப் பெருமான் மாட்சிமை பொறும் தினமாகவும் இது அமைகிறது. முருகன் ஆலயங்களில் அபிஷேகம் திருவிழா முதலியன நிகழ்த்தப்படுகின்றன. முருகனை வேண்டிப் பலர் இந்த நாளில் விரதமிருப்பர். வாயுபகவானும், வருணதேவனும் அக்கினி தேவனும் ஒரு சமயம் தமது வலிமையைப் பற்றிப் பெருமை பேசித் தம்முள் போட்டியிட்டனர். அப்போது அவர்களருகில் ஒரு சிறு துரும்பு காணப்படவே வாயுபகவான் அதனை அசைக்க முயன்று தோற்றார். அக்கினி தேவன் எரிக்க முயன்று தோற்றார். வருணபகவான் அதனை நனைக்க முயன்று தோற்றார். மூவரும் இது கண்டுதிகைத்து அசைவற்று நின்றனர். அப்பொழுது நாரத முனிவர் அங்கு தோன்றி எல்லோருக்கும் மேலான பரம்பொருள் சக்தியைப் பற்றி எடுத்துரைத்து அவர்களது கர்வத்தையடக்கினார். தைப்பூச நன்னாளில் அவர்களது அருட்சக்தி அதிகரிக்க அருள் செய்வதாக ஆண்டவன் வாக்களித்தார்.

பதஞ்சலி, வியாக்கிரபாதர் முதலானோர் தரிசிக்க சிவபிரான் ஆனந்தத் தாண்டவமாடியதும் தைப்பூசநாளிலே தான். இப்புனித நன்னாளில் யாவரும் அசௌகரியம் நீங்கி ஆரோக்கியமும் ஆற்றலும் பெறுவர். தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற வாக்கியத்துக்கிணங்கத் தை பிறந்த சில நாளில் இத்தினமும் தோன்றிப் புத்துணர்ச்சியூட்டி மணவாழ்வில் மகிழ்ச்சியையும் சகல மங்கலங்களையும் ஊற்றுகிறது.

பெண்பிள்ளைகளுக்கு மூக்குக்குத்தல் மற்றும் நற்காரியங்களை நாள்காரியமாக ஆரம்பித்தல் திருமணத்துக்குப் பெண் பார்த்தல் முதலியவற்றுக்கு இத்தினத்தை தேர்ந்தெடுப்பர். தைப்பூசநாள் விரதகட்டுப்பாடுகள் குறைந்த வழிபட்டுத் திருவிழா. இது இனிய ஒரு கொண்டாட்டமாக மலர்கிறது.



# இன்றைய நாள்

**மேடம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். உங்களின் தனித்திறமை நண்பர்களால் பாராட்டப்படும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். பணவரவுடன் நன்மையும் அதிகரிக்கும்.

**இடபம்:** பிரச்சினைகளை பிறரிடம் சொல்லாமல் இருப்பது நன்மை தரும். தொழில், வியாபார வளர்ச்சிக்கு கூடுதல் உழைப்பு அவசியம். சேமிப்பு பணம் அவசர செலவுக்கு பயன்படும்.

**மிதுனம்** உங்களுக்கு நல்லது செய்யும் நபரைசந்திப்பீர்கள். அன்றாடபணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி புதிய இலக்கை எட்டும். தாராள பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** எதிர்வரும் பிரச்னைகளை எளிதாக எதிர்கொள்வீர்கள். முக்கியப் பணிகளில் கவனம் தேவை. பண வரவு சீரான அளவில் கிடைக்கும். வாகனத்தில் மிதவேகத்தை பின்பற்றுவது நல்லது.

**சிம்மம்:** அதிக உற்சாகமுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி எளிதாக நிறைவேறும். ஆதாய பணவரவு கிடைக்கும். நீண்ட நாள்களாக வாங்க விரும்பிய பொருளை வாங்குவீர்கள்.

**கன்னி:** எதிலும் முன்யோசனையுடன் செயல்படுவீர்கள். முக்கிய பணிகள் சிறப்பாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்திகரமாகும்.

**துலாம்:** திட்டமிட்ட பணியில் சிறு மாற்றம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை பாதுகாப்பது நல்லது. சராசரி பணவரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** சிலர் உங்களை ஏளனமாக பேசும் சூழ்நிலை உருவாகும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு படிப்படியாக நிறைவேறும். முக்கிய செலவுக்காக சிறு கடன் பெறுவீர்கள்.

**தனுசு:** மனதில் அதிக நற்சிந்தனை உண்டாகும். புத்துணர்வுடன் பணிபுரிந்து நிலுவைப்பணிகளை எளிதாக முடிப்பீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான உதவி கிடைக்கும்.

**மகரம்:** உங்களின் அறிவுத் திறனை கண்டு சிலர் பொறாமையுடன் பேசுவர். சொந்தப் பணியில் கவனம் தேவை. தொழில், வியாபாரம் செழிக்க புதிய யுக்தி பயன்படும்.

**கும்பம்:** சங்கடமான சூழ்நிலை ஏற்பட்டாலும் அதிலிருந்து எளிதாக விடுபடுவீர்கள். பொறுமையுடன் செயல்படுவது நல்லது. குடும்பத் தேவை அதிகரிக்கும்.

**மீனம்:** எவருக்கும் வாக்குறுதி தராமல் இருப்பது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் உள்ள தடைகளைச் சரிசெய்வது நல்லது. அளவான பணவரவு கிடைக்கும்.



## கொரோனா அச்சம்

# 5,400 பயணிகள் கடல் கைதிகள்!

டோக்கியோ, பெப். 8

சீனாவில் கொரோனா வைரஸின் தாக்கம் மிகையாக அதிகரித்ததை அடுத்து, தனது நாட்டுக்குள் பிரவேசிக்க இருந்த உல்லாசக் கப்பலை நடுக் கடலில் தனிமைப்படுத்தியுள்ளது ஜப்பான்.

ஹொங்கொங்கில் இருந்து உல்லாசப் பயணிகள் 5400 பேரை ஏற்றிக்கொண்டு ஜப்பான் நோக்கி வந்த கப்பலில் இருந்த சிலருக்கு கொரோனா தாக்கம் இருப்பது உறுதி செய்யப்பட்டதை அடுத்தே இந்த அதிரடி நடவடிக்கையை ஜப்பான் மேற்கொண்டுள்ளது. இந்தக் கப்பலை 14 நாள்கள் தனிமைப்படுத்தி வைக்க ஜப்பான் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

83 வயதுடைய சீனத்துப் பயணியொருவருக்கு கொரோனா,வைரஸ் இருந்ததை அடுத்து ஓரிரு நாள்களிலேயே அது 10 பேருக்குப் பரவியது என்றும், பின்னர் 81 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் ஜப்பான் குறிப்பிடுகின்றது. கொரோனா, ஜப்பானுக்குள் ஊடுருவாமல் தடுப்பதற்கு இந்த நடவடிக்கை மிகமிக அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளது ஜப்பான் அரசு. (ம)


## ஆண்களுக்கு 7 மாதம் மகப்பேற்று விடுமுறை!

### பின்லாந்து அதிரடி

புதிதாக தந்தையாகும் ஆண்களுக்குத் தாய்மார்களைப் போலவே 7 மாத காலம் வரை குழந்தை பராமரிப்பு விடுப்பு வழங்க உள்ளதாக பின்லாந்து அரசு அறிவித்துள்ளது.

உலக நாடுகள் அனைத்திலும் பெண்களுக்கு மகப்பேறு விடுப்பு வழங்கப்படுகிறது. சுவீடன், நோர்வே, ஐஸ்லாந்து; ஹங்கேரி, எஸ்டோனியா போன்ற ஐரோப்பிய நாடுகளில் தந்தையர்களுக்கும் ஊதியத்துடன் குழந்தை பராமரிப்பு விடுப்பு வழங்கப்படுகிறது. ஊதியக்கொள்கையில் ஒரு சில கட்டுப்பாடுகளுடன் வழங்கப்படும். இந்த தந்தையர் விடுப்பு 4 வாரங்கள், 3 வாரங்கள், 2 வாரங்கள் என ஒவ்வொரு நாட்டிலும் வேறுபடுகிறது.

பின்லாந்து நாட்டில் ஏற்கனவே தந்தையர்களுக்கு 2 மாதம் 14 நாள்கள் வரை குழந்தை பராமரிப்பு விடுப்பு ஊதியத்துடன் வழங்கப்படுகிறது. இந்நிலையில், குழந்தை பராமரிப்பு விடுப்புக் காலத்தை மேலும் நீடிப்பதற்கான திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. புதிதாகத் தந்தையாகின்றவர்கள் 7 மாதங்கள் வரையில் ஊதியத்துடன் விடுமுறையைப் பெறமுடியும். (ம)



# கொரோனா பலி 636!

பீஜிங், பெப். 8

சீனாவின் மத்திய மாகாணமான ஹூபேயில் உருவான உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் பாதிப்புக்கு சீனா முழுதும் பலியானவர்களின் எண்ணிக்கை 636ஆக அதிகரித்துள்ளது, மேலும் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 30,000 ஆக அதிகரித்துள்ளது என்று சீனாவின் தேசிய சுகாதார ஆணையம் தெரிவித்துள்ளது. வைரஸ் தொற்றில் பாதிக்கப்பட்ட 30,000 பேர்களில் சுமார் 4,800 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருக்கின்றனர் என்று சீன சுகாதார ஆணையம் மேலும் தெரிவித்தது. (ம)

# உயிருக்கு உலை வைத்த மூன்றாவது கர்ப்பம்

பாரிஸ், பெப்.8

தனதுமனைவிமூன்றாவது முறையாகக் கர்ப்பம் தரித்தால் ஆத்திரமடைந்த கணவர், மனைவியைக் குத்திக் கொலை செய்துள்ளார். இந்தச் சம்பவம் பிரான்ஸ் நாட்டில் நடந்துள்ளது. அழகுக் கலை நிபுணரான டோஸ் சாண்டோஸுக்கும், மார்செலோ அரோஜாவுக்கும் இடையே சில ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் நடந்தது. அவர்களுக்கு இப்போது ஒரு ஆண் குழந்தையும், பெண் குழந்தையும் உள்ளனர்.

பொருளாதார நிலமைகளால் மூன்றாவது குழந்தை வேண்டாம் என்று அரோஜா, மனைவிக்குக் கூறியுள்ளார். ஆனால் அதைக் கருத்தில் எடுக்காத சாண்டோஸ் மூன்றாவது முறையாகக் கர்ப்பம் தரித்துள்ளார். அதை அறிந்த அரோஜோ மனைவியுடன் வாக்குவாதம் நடத்தியுள்ளார். வாக்குவாதம் முற்றியதை அடுத்து சாண்டோஸின் கழுத்தை அறுத்துக் கொலை செய்துள்ளார் அரோஜா.

அதையடுத்து அரோஜா கைது செய்யப்பட்டுள்ளார். அந்த நாட்டுப் பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டுவருகின்றனர். (எ)



## மென்பந்து துடுப்பாட்டத் தொடரில்

# மகுடம் சூடியது இளந்தாரகை

யாழ்ப்பாணம்,பெப்.8

கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டுப் போட்டி வரிசையில் ஆண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டத் தொடரில் இளந்தாரகை விள்ளயாட்டுக் கழக அணி தங்கப் பதக்கத்தை தனதாக்கிக் கொண்டது.

இளந்தாரகை விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஆண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் இளந்தாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடி இளந்தாரகை விளையாட்டுக் கழக அணி 8 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது.

அணி சார்பில் றொபேட் 21 ஓட்டங்களையும்,தர்சன் 18 ஓட்டங்களையும், அதிகபாட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் செந்தாளன் 2இலக்குகளை வீழ்த்தினார்.

62 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தடிய பரந்தன் இளைஞர்வட்டம் விளையாட்டுக்கழக அணி 8 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 56 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அணி சார்பில் கீதன் 27 ஓட்டங்களையும், வைசன் 10 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் நிகேஸ் தலா 2 இலக்குகளை வீழ்த்தினார். (23)





## யுத் – வை.எஸ்.சி. இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம்,பெப்.8

அண்ணாசிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் 21 வயதுப் பிரிவினருக்கான மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் அல்வாய் யுத் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரவெட்டி வை.எஸ்.சி. விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

## ஷிவம் துபேக்கு கூடுதல் வாய்ப்பு வழங்க வேண்டும்

### யுவராஜ் சிங் கருத்து

நியூசிலாந்துக்கு எதிரான இறுதி ரி-20 போட்டியில் 34 ரன்கள் விட்டுக் கொடுத்து விமர்சனத்துக்குள்ளான ஷிவம் துபேக்கு இன்னும் வாய்ப்புகள் வழங்க வேண்டும் என யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்தில் விளையாடி வரும் இந்திய அணியில் வேகப்பந்து வீச்சு, ஆல்ரவுண்டர்ஷிவம்துபேரி-20 போட்டி யில் இடம் பிடித்து விளையாடினார்.

ஐந்தாவது போட்டியில் அவர் ஓரே ஓவரில் 34 ரன்கள் விட்டுக்கொடுத்து விமர்சனத்துக்கு உள்ளானார். இந்த நிலையில் தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவதற்காக ஷிவம் துபேவுக்கு இன்னும் வாய்ப்புகள் வழங்க வேண்டும் என முன்னாள்வீரர் யுவராஜ் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஷிவம் துபேக்கு சிறப்பான திறமை இருப்பதாக நினைக்கிறேன். ஆனால் அவருக்கு நாம் இன்னும் கூடுதல் வாய்ப்பு வழங்க வேண்டும். நாம் அவரக்கு கூடுதலாக நேரம் கொடுத்தால், தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும் வகையில் எதிர்கால வீரராக அவரை நாம் பார்க்கலாம்-என்றார்.

## ஜி.பி.எஸ்ஸின் ஹொக்கி சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், பெப்.8

கல்வியங்காடு ஞான பாஸ்கரோதய சங்கத்தால், தனது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அமரர் கந்தையா வேலாயுதபிள்ளை நினைவுக் கிண்ணத்துக்கான ஹொக்கிச் சுற்றுப் போட்டி நடத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. பங்குபற்ற விரும்பும் அணிகள் எதிர்வரும் 20ஆம் திகதி மாலை 6 மணிக்கு முன்னர், ஹொக்கிச் சங்கத்தின் உப தலைவரும், ஞான பாஸ்கரோதய சங்கத்தின் விளையாட்டுச் செயலருமாகிய பா.நேசரூபனிடம் விவரங்களைப் பதிவு செய்ய முடியும்.

போட்டிகள் எதிர்வரும் 22ஆம் மற்றும் 23ஆம் திகதிகளில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். அனைத்துப் போட்டிகளும் அணிக்கு 11பேர் கொண்டதாக விலகல் முறையிலான போட்டியாக நடத்தப்படும். (ஒ.5)

## இன்றைய ஆட்டங்கள்

நல்லூர் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டுப் போட்டி வரிசையில் இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு ஆண், பெண்களுக்கான இருபாலருக்குமான கடற்கரை கபடிப் போட்டிகள் மற்றும் கடற்கரை கரப்பந்தாட்ட போட்டிகள் மணியந்தோட்டம் ஐக்கிய விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (23)

◆ ◆ ◆

யாழ்ப்பாண மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுன் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மின் ஒளியில் நடத்தும் தாச்சி சுற்றுத் தொடரின் விலகல் முறையிலான ஆட்டம் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகின்றது.

இதில் இரவு 7.30 மணியளவில் இடம்பெறும் ஆட்டத்தில் நவாலி தென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி திருக்குடும்பம் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

◆ ◆ ◆

முல்லைத்தீவு மாவட்ட கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையில் நடத்தும் முல்லையின் மன்னர்கள் கால்பந்தாட்டத் தொடரின் சுப்பர் 8 ஆட்டங்கள் இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அலைஓசை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.


மாலை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

◆ ◆ ◆

கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழகமும் சனசமூகநிலையமும் வருடந்தோறும் நடத்தும் அணிக்கு 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட விக்கிரம், ராஜன்,கங்கு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை காலை இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூநிலைய அணி மோதவுள்ளது. மதியம் இடம்பெறும் ஆட்டத்தில் திருநெல்வேலி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஓல்கோல்டஸ் வி.கஅணி மோதவுள்ளது. (23)

# தொடரை தக்க வைக்குமா இந்திய அணி?




இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி இன்று காலை 7.30 மணிக்கு ஒக்லாந்தில் இடம்பெறவுள்ளது.

இந்திய அணி நியூசிலாந்துக்குச் சுற்றுகப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்குமிடையில் இடம்பெற்ற 5 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை இந்திய அணி 5:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது. 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் முதலாவது போட்டியில் நியூசிலாந்து அணி அபார வெற்றி பெற்றது. இந்த நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

இந்திய அணியைப் பொறுத்த வரையில் துடுப்பாட்டத்தில் பலமாக விளங்கினாலும் பந்து வீச்சைப் பொறுத்த வரையில் சொதப்பிய வண்ணமே இருக்கின்றனர். கடந்த போட்டியில் 347 ரன்களை இந்திய அணி குவித்த போதிலும் நியூசிலாந்து அணி அதனை இலகுவாக விரட்டி அடித்தனர்.

இந்திய அணியில் கடந்த போட்டியில் முகமது ஷமி, ஜடேஜா பந்து வீச்சும் எடுபடவில்லை. இதனால் பந்து வீச்சில் மாற்றம் கொண்டு வர வாய்ப்பு உள்ளது.

நாளைய போட்டியில் தோற்றால் இந்தியா தொடரை இழக்க வேண்டிய நிலை ஏற்படும். இதனால் வெற்றிக்காக இந்திய அணி போராட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

நியூசிலாந்து அணி துடுப்பாட்டத்தில் ரோஸ் டெய்லர் அணிக்கு மிகப் பெரும் பலம். அவர் முதல் ஆட்டத்தில் சதம் அடித்து வெற்றிக்கு காரணமாக இருந்தார். இதேபோல் ஹென்றி நிகோல்ஸ்; டாம் லாதம் ஆகியோரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இருந்தனர். பந்து வீச்சிலும் டிம் சவுத்தி, பென்னட், சான்ட்னர், சோதி ஆகியோர் அணிக்கு முதுகெலும்பாகக் காணப்படுகின்றனர்.

நியூசிலாந்து அணியைப் பொறுத்த வரையில் ரி-20 தொடரை இழந்ததற்கு பதிலடி கொடுக்கும் முனைப்பில் ஆடி வருகின்றது. இதனால் இன்றைய போட்டி மிக விறுவிறுப்பாகக் காணப்படும்.

இரு அணிகளும் நாளை மோதுவது 109ஆவது போட்டியாகும். இதுவரை நடந்த 108 போட்டிகளில் இந்தியா 55 முறையும், நியூசிலாந்து 47 முறையும் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தோல்வி தாக்கத்தை ஏற்படுத்தவில்லை

## நிக்கோலஸ் தெரிவிப்பு

இந்தியாவுக்கு எதிரான முதல் ஒருநாநள் போட்டியில் 78 ரன்கள் குவித்த ஹென்றி நிக்கோல்ஸ், ரி-20 போட்டியின் தோல்வி தாக்கத்தை ஏற்படுத்தவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

ஹமில்டனில் நடந்த இந்தியாவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி அபார வெற்றி பெற்றது. இதில் ஹென்றி நிகோல்ஸ் 78 ரன் குவித்திருந்தார்.

இது குறித்து ஹென்றிநிகோல்ஸ் தெரிவிக்கையில்:

இந்தியாவுக்கு எதிரான 20 ஓவர் தொடரை 5:0 என்ற கணக்கில் முழுமையாக இழந்தோம். ஆனால் அதன் தாக்கம் ஒரு நாள்போட்டி அணியில் இல்லை. ஒரு நாள் போட்டிக்காக நாங்கள் அணியாக இங்கு கைகோர்த்த போது, முந்தைய தோல்வி குறித்து சிந்தித்து வருத்தப்படவில்லை. எனவே எனக்கு எந்த நெருக்கடியும் இல்லை. சிறிய மைதானம், பெரிய இலக்கு. அதை எட்ட முடிந்தது இனிமையான அனுபவமாகும். ஒரு நாள் போட்டியில் நாங்கள் துரத்தியடித்த மிகப்பெரிய ஸ்கோர் இது தான். இதில் எனது பங்களிப்பும் இருந்தது மகிழ்ச்சியே.

கேன் வில்லியம்சன் இல்லாத நிலையில் 4ஆவது வரிசையில் ராஸ் டெய்லரின் பங்களிப்பு முக்கியமானதாக அமைந்தது. தனது அனுபவத்தின் மூலம் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ரன் குவிப்பு மட்டுமல்ல, அவருடன் இணைந்து ஆடும் போது வழங்கும் ஆலோசனையும் பேட்டிங்குக்கு உதவுகிறது.

டாம் லாதம் சூழ்நிலைக்கு தகுந்தபடி விளையாடினார். சுழற்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவின் பந்து வீச்சை அடித்து நொறுக்கி அவருக்கும் மற்ற சுழற்பந்து வீச்சாளர்களுக்கும் நெருக்கடியை உருவாக்கினார் - என்றார்.






# சுழற்பந்தை அடித்து நொருக்குவோம்

## மார்ட்டின் குப்தில் கர்ச்சிப்பு

முதல் போட்டியில் இந்தியாவின் சுழற்பந்து வீச்சை விளாசியதுதான் வெற்றிக்கு காரணம், இன்றும் அந்த யுக்தி தொடரும் என மார்ட்டின் குப்தில் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து - இந்திய அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஹமில்டனில் நடைபெற்றது. இதில் நியூசிலாந்து வெற்றியைப் பதிவு செய்தது.

'ஸ்வீப் ஷாட்ஸ்' மூலம் இந்திய சுழற்பந்து வீச்சை விளாசினார்கள். குல்தீப் யாதவ் மற்றும் ஜடேஜா 148 ரன்கள் விட்டுக்கொடுத்தனர். நியூசிலாந்தின் வெற்றிக்கு இதுதான் முக்கிய காரணமாக என்று கூறிய மார்ட்டின் குப்தில், இன்றைய போட்டியிலும் இந்திய சுழற்பந்து வீச்சை விளாசுவோம் என்று அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஹமில்டனில் நாங்கள் இந்திய சுழற்பந்து வீச்சாளர்களை எதிர்கொண்ட விதம், எங்களது சிறப்பானதில் ஒன்று என நினைக்கிறேன். இந்த நம்பிக்கையுடன் இந்த தொடரில் நாங்கள் முன்னோக்கி செல்ல முடியும்.

இந்திய அணியை எளிதாக வீழ்த்த முடியும் என்று நான் நினைக்கவில்லை. அவர்கள் உலகத்தரம் வாய்ந்த வீரர்கள். அவர்கள் அணியில் பேட்டிங் மற்றும் பந்து வீச்சில் மேட்ச் வின்னர் வீரர்களை பெற்றுள்ளனர். ஆகவே, இந்தியாவுக்கு எதிரான தொடரை வெல்ல வேண்டும் என்றால் மிகச்சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும். இன்றை ஆட்டத்தில் எங்களுடைய சிறப்பான ஆட்டம் வெளிப்படும் என்று நம்புகிறேன்- என்றார்.



இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையில் இடம்பெற்று வரும் 2ஆவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்கா அணி துடுப்பெடுத்தாடி வருகின்ற போது அடிக்கடி மழை பெய்ததால் போட்டி பாதிப்படைந்த வண்ணம் இருந்தது.

கோபா டெல் ரே தொடர்:

# பார்சிலோனா, ரியல் மட்ரிட் காலிறுதியுடன் வெளியேற்றம்

ஸ்பெயினில் நடைபெற்று வரும் கோபா டெல் ரே கால்பந்து தொடரின் காலிறுதியில் பார்சிலோனா, ரியல் மட்ரிட் அணிகள் அதிர்ச்சித் தோல்வியடைந்தன.

ஸ்பெயின் நாட்டில் முன்னணி கால்பந்து அணிகளுக்கு இடையில் நடைபெற்று வரும் லா லிகா கால்பந்து லீக்கில் விளையாடும் முன்னணி அணிகளும், அதேபோல் 2ஆம் நிலை மற்றும் 3ஆம் நிலை லீக்கில் சிறப்பாக விளையாடும் அணிகளையும் சேர்த்து ஆண்டுதோறும் கோபா டெல் ரே தொடர் நடைபெற்று வருகின்றது.

நேற்று இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் பார்சிலோனா - அத்லெடிக் பில்போ அணிகள் மோதின. முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் எதுவித கோல்களையும் பெறவில்லை. இரண்டாம் பாதி ஆட்டத்தில் 90வது நிமிடத்தில் அத்லெடிக் பில்போ அணி வீரர் ஒரு கோலைப் போட அந்த அணி 1:0 என பார்சிலோனாவை வீழ்த்தி அடுத்து சுற்றுக்குள் நுழைந்தது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் ரியல் மட்ரிட் - ரிய் சோசிடாட் அணிகள் மோதின. இதில் ரியல் மட்ரிட் அணிக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் விளையாடிய ரியல் சோசிடாட் அணி 22, 54 மற்றும் 56ஆவது நிமிடங்களில் கோல் அடித்து ரியல் மட்ரிட் அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தது.

அதன்பின் ரியல் மட்ரிட் ஆக்ரோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 59ஆவது நிமிடத்தில் மார்சிலோ ஒரு கோல் அடித்தார். அதற்குப் பதிலடி கொடுக்கம் முகமாக 69ஆவது நிமிடத்தில் ரியல் சோசிடாட் அணி மீண்டும் கோல் ஒன்றை போட்டது. மட்ரிட் அணி மீண்டும் 81, 93ஆவது நிமிடங்களில் இரு கோல்களைப் போட்டு அசத்த இறுதியில் சோசிடாட் அணி 4:3 என்ற கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

ஸ்பெயின் நாட்டின் முன்னணி இரண்டு அணிகள் காலிறுதியோடு வெளியேறியது ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.





இந்தியாவுக்கு எதிரான போட்டியில்


# இன்று களமிறங்கும் 'டவர்' பந்து வீச்சாளர்

ஆறு அடி எட்டு அங்குலம் உயரம் கொண்ட நியூசிலாந்தின் மிகவும் உயரமான வேகப்பந்து வீச்சாளரான கைல் ஜேமிசன் இந்தியாவுக்கு எதிராக இன்றைய போட்டியில் அறிமுகம் ஆகிறார்.

நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் கைல் ஜேமிசன் ஆறு அடி எட்டு அங்குலம் உயரம் கொண்டவர்.

அணிகளுக்கு இடையில் நடைபெற்ற மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் சிறப்பாக பந்து வீசினார். இதனால் இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கான நியூசிலாந்து அணியில் இடம் கிடைத்தது.

ஹமில்டனில் நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில்



கிரிக்கெட்டில் விளையாடுவதில் இவர்தான் உயரமான நபர். இதனால் இவரை 'டவர்' பந்து வீச்சாளர் என்று அழைக்கின்றனர்.

வேகப்பந்து வீச்சாளரான இவர் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இறுதி இரண்டு டெஸ்ட் போட்டிக்கான நியூசிலாந்து அணியில் இடம் பிடித்திருந்தார். ஆனால் ஆடும் லெவன் அணியில் இடம் கிடைக்கவில்லை.

இந்தியா ஏ நியூசிலாந்து ஏ இவர் களமிறங்கவில்லை.

நியூசிலாந்து அணியில் இடம் பிடித்திருந்த இஷ் சோதி நேற்று ஆரம்பமாகிய நியூசிலாந்து 'ஏ' இந்தியா 'ஏ' இடையிலான டெஸ்ட் போட்டியில் விளையாட விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதனால் கைல் ஜேமிசன் இன்று ஆக்லாந்தில் நடைபெறும் போட்டியில் அறிமுகம் ஆவார் என்று நியூசிலாந்து பயிற்சிளார் ஷேன் ஜர்கென்சன் தெரிவித்துள்ளார்.

# 233 ரன்களில் சுருண்டது வங்கதேச அணி

New Bright Educatoin Centre
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(தண்ணீர்த்தாங்கி அருகில்)
யாழ் நகரின் முன்னணி ஆசிரியர்களின் தனித்துவமான வழிகாட்டலில்
வர்த்தகப்பிரிவு
A/L 2020, A/L 2021, A/L 2022
பொருளியல் :- திரு.V.ஜெகதீஸ்
வணிகக்கல்வி :- திரு.S.K.பாலசுபேஷ்
கணக்கீடு :- MR.BALAKAJAN
புதிய பிரிவுகள் ஆரம்பம்
08.02.2020 சனி மதியம் 12 மணி
T.P: 077 024 8414

ராவல்பிண்டியில் நேற்று ஆரம்பமான பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் வேகப்பந்து வீச்சை தாக்குப் பிடிக்க முடியாமல் பங்களாதேஷ் அணி 233 ரன்னில் ஆல்அவுட் ஆனது.

பங்களாதேஷ் அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்குமிடையிலான 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் முதலாவது டெஸ்ட் போட்டி நேற்று ராவல்பிண்டியில் ஆரம்பமானது. டாஸ் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் பங்களாதேஷ் அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. அதன்படி பங்களாதேஷின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக தமிம் இக்பால், சாய்ஃப் ஹசன் களமிறங்கினர். அணி 3 ரன்னைப் பெற்ற போது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரும் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினர்.

அதன்பின் 3ஆவது விக்கெட்டுக்கு நஜ்முல் ஹொசைன் ஷான்டோ உடன் கேப்டன் மொமினுல் ஹக் இணைந்து அணியை சரிவில் இருந்து மீட்டனர். எனினும் அணி 233 ரன்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பாகிஸ்தான் அணி தரப்பில் வேகப்பந்து வீச்சாளர் ஷாஹீன் ஷா அப்ரிடி 4 விக்கெட்டுக்களையும், முகமது அப்பாஸ் மற்றும் ஹாரிஸ் சோஹைல் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் சரித்தனர்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 20

# சஞ்சீவி

Registered as a Newspaper

"மண்ணுக்குள் தேடுக காணாமல் போனோரையென
மண்டைக்குள் மண்ணோடு செப்பிய விமலே- விண்ணுக்குள்
விரைந்தோடி மறைந்தாலும் தமிழ்ச் சாபம் உனை
கரைந்தோடிக் கவிழ்த்திடுமே ஓர் நாள்

ஈழக்கவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2051 தை :25 சனிக்கிழமை (08.02.2020) சிகரம் : 3

## பாலியல் + வதை – பகிடி = பகிடிவதை




## துகிலுரியப்படும் யாழ். பல்கலைக்கழகம்!

○ ஔண்யன் + எஸ்.லக்ஷ்மி

"அடி..!
"வே####
"என்னடி செய்யிறாய் "
"####"
"ஒண்டும் இல்லாம போட்டோ அனுப்படி"
"இல்லை எண்டா, நீ யுனிவர்சிட்டிக்கு எப்பிடி வாறாய் எண்டு பாப்பம்"
"வீடியோ கோல் பண்ணு"
"பாத் ரூம்ல போய் வீடியோ கோல் பண்ணு"

ஏதோ ஆபாசப் படத்தில் வருகின்ற வசனங்களோ அல்லது சில வருடங்களுக்கு முன்னர் உயிர் குடிக்கும் மரண விளையாட்டான 'ப்ளூவேலில்' சொல்லப்பட்ட உத்தரவுகளோ இவை என நினைத்தால், செருப்பை எடுத்து உங்களது முகத்திலேயே அடித்துக் கொள்ளுங்கள். நாளைய எதிர்காலத் தூண்கள் எனச் சொல்லப்படும் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர்களில் (சீனியர்) ஒருவர் , புகுமுக மாணவி ஒருவருக்கு நள்ளிரவு 11.45 மணியளவில் அனுப்பிய 'வட்ஸப்' தகவல்கள் இவை. அத்தோடு விடவில்லை அந்த சீனியர். பல முறை வீடியோ கோல் பண்ணி, குறித்த மாணவியை உளவியல் ரீதியாக இம்சித்துள்ளார். அவர் மட்டுமல்ல, அதே வழியில் இன்னும்சிலரும்கொடுத்த தொல்லை தாங்க முடியாமல், அந்த மாணவி தற்கொலைக்கு முயன்ற வேளை, வீட்டுக்காரர்கள் அதைக் கண்டறிந்து தடுத்ததால், ஒரு உயிர் தப்பிப் பிழைத்தது. ஒரு வேளை அவர் தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்திருந்தால் அது பத்தோடு பதினொன் றாக, ஒரு சாதாரண தற்கொலைச் செய்தியாக கடக்கப்பட்டிருக்கும். எனினும், அவர் தப்பித்ததால், அவரது குடும்பத்தார், ஒரு முடிவோடு களமிறங்கி, தங்கள் மகளுக்கு எவரெல்லாம் 'ராக்கிங்' என்ற பெயரில் தொல்லை கொடுத்தார்கள் என தொலைபேசி இலக்கங்களோடு ஆதாரபூர்வமாக உரிய தரப்புகளிடம் சமர்ப்பிக்க, இந்த விவகாரம் பொதுவெளிக்கு வந்து, பெரும் அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது. கடந்த சில நாட்களாக மக்களின் பிரதான பேசுபொருள், இந்த 'பாலியல் ராக்கிங்' தான். இப்போது விசாரணைகள் முடுக்கி விடப்பட்டு, புகுமுக பெண் மாணவிகளுக்கு பாலியல் ராக்கிங் கொடுத்த மாணவர்கள் யாரென இனங்கண்டு, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் முயற்சிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவத்தின் பின்னணியில் மீண்டும் ராக்கிங்( பகிடிவதை) பற்றிய கதையாடல்கள் பரவலாக சமூக வலைத்தளங்களிலும், ஊடகங்களிலும், பொதுமக்களிடம் மேலெழுந்துள்ளன.

பல்கலைக்கழ்கத்தை நோக்கி வருகின்ற புதிய மாணவர்களை, அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் உபசரித்து வரவேற்பதென்பது ஒரு கலாசாரம். அது அறிவும், பண்பும் நிறைந்ததொரு சமூகத்தின் பாரம்பரிய விழுமியச் செயற்பாடுகளில் ஒன்று.

அதற்காக அவர்களின் அச்சத்தையும், கூச்சத்தையும் போக்குவதற்காகப் பகிடியாக 'வதை' செய்து வரவேற்கிறோம் என்ற போர்வையில், இம்சித்து வரவேற்பதென்பதை ஒரு ஆரோக்கியமான செயற்பாடாக நாம் அங்கீகரிக்க முடியாது. அது அறிவற்ற செயற்பாடு என்பதோடு , அதனை எந்தவித்திலும் நாகரீகமானதொரு சமூகத்தின் நடத்தையுமாகக் கொள்ள முடியாது. அத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் எவராயிருப்பினும், அவர்கள் பல்கலைக்கழகக் கல்விக்குத் தகுதியற்றவர்கள் என்றே கருதலாம். அப்படிப்பட்ட வக்கிர, குரூர மனப்பாங்குள்ளவர்கள் உடனடியாக மனநோய் வைத்தியர் மூலம் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டபின்னரே கல்வியைத் தொடர அனுமதிக்கப்படவேண்டும்.

ராக்கிங்/ பகிடிவதை தொடர்பாக சகல பல்கலைக்கழகங்களும் தமது சட்ட திட்டங்களை மாற்றியமைக்க வேண்டிய அவசியத்தைக் மேலே சொல்லப்பட்ட யாழ். பல்கலைக் கழக கிளிநொச்சி வளாக மாணவர்களின் அநாகரீகமான பகிடி வதைச் சம்பவம் நிரூபித்துள்ளது. அது தொடர்பாக வெளிவருகின்ற செய்திகள் முழு உலகத்தையும் குறிப்பாக சமூக ஒழுக்கங்களில் அதீத கவனமெடுப்பவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் சமூகத்தை அதிர்ச்சியிலாழ்த்தியுள்ளது. அது மட்டுமல்லாமல் "இவர்களா, எதிர்காலத்தில் எமது சமூகத்தை வழி நடத்தப் போகிறவர்கள்? இவர்களா, எமது நம்பிக்கைக்குரிய பாதுகாவலர்கள்?" என்று அவர்களை நோக்கித் தொடர் கேள்விகளையும் எழுப்ப வைக்கின்றது.

முன்னரெல்லாம் ராக்கிங் என்றால் நேரடியாகத்தான் வதைத்தார்கள். அதன்பின்னர் வீடு சென்றால் கொஞ்சமாவது புகுமுக மாணவர்கள் நிம்மதியாக இருக்கலாம். ஆனால் இப்போது தான் வட்ஸப், வைபர் என்று வந்துவிட்டனவே.

அதிலும் புகுந்து விளையாடி 24 மணிநேரமும் புகுமுக மாணவர்களை 'ராக்கிங்'என்ற வளையத்துக்குள் வைத்திருந்து, வகை வகையாக வதைப்பதிலேயே குறியாக இருக்கிறார்கள். சாதாரண பகிடி என்ற எல்லையைத் தாண்டி, பாலியல் ரீதியிலான துன்புறுத்தல்களும் இந்த வட்ஸப், வைபர் குழுமங்கள் மூலம் நடந்தேறி வருகின்றன. புகுமுக மாணவர்களின் விபரங்கள் வெளியானவுடனேயே , சீனியர்கள், மோப்பநாய்களாக மாறி, அவ்ர்களின் தொலைபேசி இலக்கங்களை எப்படியோ கண்டுபிடித்து, தங்கள் இலக்கங்களையும் இணைத்து ஒரு வட்ஸப் குழுமத்தை உருவாக்கி விடுவார்கள். அந்தக் குழுமங்கள் சில, பல கட்டளைக் கொண்டவையாக இருக்கும். அந்தக் கட்டளைகளே புகுமுக மாணவர்களுக்கான பாலபாடங்கள்.

(03ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

10  13ஐ ஒழிப்பதே கோத்தாவின் நோக்கம்!

 19 கொடிகளில் இல்லை சுதந்திரம்

கொலையாளிகளே! 12  நாய் பிடிக்கும் கவனம்!

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்



# திரடி அரங்கு





## சித்தர் சிலைகளில் சாதியா?

போன வாரம், காரைநகர் மாணிக்கவாசகர் அன்னதான சபைக்கு 'பூட்டுப்' போட்ட விவகாரத்தின் பின்னணியில் ஒரு சிலை வைக்கும் சம்பவம் ஒளிந்திருப்பதாகச் சொன்னோமல்லவா.
இந்த வாரம் அது பற்றிக் கொஞ்சம் ஆராயலாம்.
காரைநகருக்கென தனியான பிரதேச செயலகம், பிரதேச சபை என்பன உருவாக்கப்படுவதற்கு முன்னின்று உழைத்தவர் முன்னாள் அமைச்சரான மகேஸ்வரன். அவருக்கு ஒரு சிலையை பிரதேச சபைக்கு முன்பாக நிறுவ அவரது சகோதரர் ஒருவர், ஆசைப்பட்டிருந்தார். அது பற்றி பிரதேச சபைக்கும் தெரியப்படுத்தினார். ஆனால் மகேஸ்வரனின் சிலையை அங்கு வைக்க, காரைநகரின் ஒரு சாரார் எதிர்ப்புத் தெரிவித்தனர். இருப்பினும் , தமக்கெனத் தனியான பிரதேச சபையை உருவாக்கிய நன்றிக்கடனுக்காக, அந்த எதிர்ப்புகளைத் தாண்டி, காரைநகர் பிரதேச சபையின் நிர்வாக்மு, அதிகாரிகளும் எடுத்த முயற்சியின் பயனாக, மகேஸ்வரனின் சிலையை வைப்பதற்கான உயர்மட்டத்தின் அனுமதி விரைவில் கிடைக்கவுள்ளது.
இதே சமயத்தில்தான் , காரைநகரில் உள்ள ஈழத்துச் சிதம்பரத்துக்கு முன்னால் உள்ள காணி ஒன்றில், யோகர்சாமி, பாபுஜி ஆகிய சித்தர்களுக்கு சிலை வைக்க இன்னொரு தரப்பினர் முயற்சிகளை எடுத்தனர். அப்போதுதான், வெடித்தது சர்ச்சை!
அவ்விரு சித்தர்களுக்கும் சிலை வைக்கக்கூடாது என கோயில் நிர்வாகத்தின் ஒரு பகுதியினர் போர்க்கொடி தூக்கினர். வேற்றுமதத்தைச் சேர்ந்தவர்களுக்கு சிலை வைத்தாலாவது, அதை எதிர்ப்பதில் ஒரு நியாயம் கற்பிக்கலாம். ஆனால் யோகர் சாமியும், மற்றையவரும் சைவசமயத்தைச் சேர்ந்தவர்கள். கோயிலும் சைவக்கோயில். அப்படியானால் ஏன் இந்த எதிர்ப்பு? என சித்தர்களுக்குச் சிலை வைக்கப் புறப்பட்டவர்களுக்குப் புரியவில்லை. பின்னர் ஒருவாறு, 'சுழியோடி' அந்த எதிர்ப்புக்கான காரணத்தைக் கண்டு பிடித்தார்கள்.
சித்தர்களின் 'சாதியே' அங்கு சிலை வைக்க , கோயில் நிர்வாகத்தின் ஒரு தரப்புக்குத் பிரச்சினையாக இருக்கிறதாம். சாமியார்களில் கூட சாதி பார்க்கும் இந்தக் குழுவில், மகேஸ்வரனுக்குச் சிலை வைக்க விண்ணப்பித்தவரும் உள்ளடக்கம். அவரது தூண்டுதலாலேயே, சித்தர்களுக்குச் சிலை வைக்க நினைத்த தரப்பினர் அங்கம் வகிக்கும் மாணிக்கவாசகர் அன்னதான சபைக்கு திடீர்த் தடை விதிக்கப்பட்டதாக மக்கள் சொல்கிறார்கள்.
இப்போது எமக்குக் கிடைத்த இன்னொரு தகவலின்படி, சித்தர்களின் சிலையை வைக்கத் தடை போட்ட தம்பி, தன் அண்ணனுக்கு ( மகேஸ்வரனுக்கு) சிலை வைப்பதை அனுமதிக்கக் கூடாதென பிரதேச சபை முடிவெடுத்து விட்டதாம். அதனால் மகேஸ்வரனின் சிலைக்கு இப்போதைக்கு அனுமதி கிடைப்பது கஷ்டமே.

## இருக்குது குழப்பம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தமுறை நாடாளுமன்றத் தேர்தலில், வடக்கு, கிழக்குக்கு வெளியேயும் போட்டியிடும் என்று ஒரு அறிவிப்பைச் சில வாரங்களுக்கு முன்னர் வெளியிட்டிருந்தது. அதை மனோகணேசன் உடனடியாகவே எதிர்த்து, "கூட்டமைப்பு, தானும் கெட்டு, எங்கள் வாக்கையும் கெடுக்கப் போகின்றது"" என்று புலம்பியிருந்தார்.
ஏனெனில் , வடக்கு, கிழக்குக்கு வெளியே என்றால், தமிழர்களின் வாக்கு வங்கி அதிகமாக உள்ள இடம் கொழும்புதான். மனோகணேசனின் வாக்கு வங்கியும் கொழும்பை மையமாகக் கொண்டதே. இதனால் கூட்டமைப்பு கொழும்பில் போட்டியிட்டால், மனோகணேசனின் வாக்குகளும் பிரிபட்டு, அவருக்கு ஆசனம் இல்லாமல் போகும் சந்தர்ப்பமே அதிகம். அதேவேளை கூட்டமைப்பாலும் அங்கு போட்டியிட்டு, நேரடியாக வெற்றிபெறுவதற்கான சூழல் இல்லை. வேண்டுமானால் தேசியப்பட்டியல் ஆசனத்துக்கான வாக்குகளைக் கொஞ்சம் அதிகமாகப் பொறுக்கமுடியும்.
இந்த நிலையில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும், தமிழரசுக் கட்சியின் பல எம்.பிக்களும், வடக்கு கிழக்கைத் தாண்டி போட்டியிடக் கூடாது என்பதில் உறுதியாக நிற்கின்றனர். ஆனால் தமிழரசுக் கட்சியின் தலைவிதியைத் தீர்மானிப்ப வராகக் கருதிக் கொள்ளும் ஒருவரே, "வடக்கு-கிழக்கு வெளியாலும் போட்டி போட வேணும்" என்று சம்பந்தருக்கு சும்மா மந்திரம் போட்டுக் கொண்டிருக்கிறாராம். ஆனால் அப்படிப் போட்டி போட்டியிட்டால் இருக்கும் மானமும் கொழும்பில் போய்விடும் என்பதால், அதைத் தடுத்தே தீருவது என்று பங்காளிகளும் நிற்பதால், " எங்கே போட்டியிடுவது?" என்ற விடயத்துக்காகவும் 'வீட்டுக்குள்' குழப்பங்கள் வரத்தான் போகின்றன போலும்.

\- மின்னல்



# சிறுவர் சுடர்

## விடுகதைகளும் விடைகளும்

1. நோயின்றி நாளும் மெலிவாள், கோள் சொல்லி நாளும் கழிவாள் அவள் யார்?
   நாட்காட்டியின் தாள்
2. மழைக்காலம் வந்தாலே மகராசிக்குச் சங்கீதம் தான் அவள் யார்?
   தவளை
3. அரைசாண் மனிதனுக்கு வயிறு நிறைய் முட்டை கள் அவன் யார்?
   வெண்டைக்காய்
4. சிவப்புப் பைக்குள் சில்லறைகள். அது என்ன?
   மிளகாய்
5. உலகமெங்கும் சுற்றும் அவனை, ஒருவரும் கண்டதில்லை. அவன் யார்?
   காற்று
6. அக்கா தங்கை உறவுண்டு, அருகருகே வீடு உண்டு, கிட்டக்கிட்ட வந்தாலும், தொட்டுக் கொள்ள மாட்டார்கள் அவர்கள் யார்?
   கண்கள்
7. வந்தால் கொடுக்கும், வராவிட்டால் கெடுக்கும் அது என்ன?
   மழை



## பிஞ்சு தூரிகை



**சிறுவர் சுடர்** வாசகர்கள் என்றால் சும்மாவா? உங்கள் திறமைக்கு சவால்விட பல போட்டிகளை நடத்த உள்ளோம். இந்தப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறும் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்படும். அனைத்து குட்டீஸ்க்கும் வாழ்த்துக்கள். தொடர்ந்து போட்டிகளில் பங்கேற்று அசத்துங்கள்.

**சஞ்சீவி சிறுவர் சுடர்** வாசகர்களுக்கான ஓவியப்போட்டி ஒவ்வொரு பிரிவுக்கும் வேறுபட்ட தொனிப் பொருளில் நடத்தப்படவுள்ளது.
3 முதல் 6 வயதுவரையுள்ள பிரிவுக்கு

என்ற தொனிப்பொருளிலும்,
7 முதல் 12 வயதுவரையுள்ள பிரிவுக்கு

என்ற தொனிப்பொருளிலும்,
13 முதல் 15 வயது வரையுள்ள பிரிவுக்கு


'இனியொரு விதி செய்வோம்'

என்ற தொனிப் பொருளிலும் ஓவியப் போட்டி இடம்பெறும். போட்டியாளர்கள் வெள்ளை A4 தாளில் வரைந்து அனுப்ப முடியும். மூன்று பிரிவுக ளி லும் தேர்ந்தெடுக்கப்படும் வெற்றியாளர்களுக்கு பல பரிசுகள் காத்திருக்கின்றன.

*அனுப்ப வேண்டிய முகவரி:*
உதயன் சஞ்சீவி
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
*மின்னஞ்சல் முகவரி: uthayansanjeevi@gmail.com*

### இலகுவாகவும் எளிமையாகவும் வரையக் கற்றுக்கொள்வோம்





## பேணிப்பந்து / சிரட்டைப்பந்து/ பிள்ளையார் பந்து/ ரின் போல்

**சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை விரும்பி விளையாடும் கிராமிய விளையாட்டுக்களில் இதுவும் ஒன்றாகும்.**

- அணிகள் இரண்டாகப் பிரிந்து விளையாடுவர்.
- ஒரு அணியில் மூன்று பேருக்கு மேற்பட்டோராவது இருக்க வேண்டும்.
- சிரட்டைகள்/பேணிகள் சிலவற்றை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்க வேண்டும்.
- ஒரு அணியைச் சேர்ந்தவர்கள் பந்தால் எறிந்து அடுக்கி இருந்த சிரட்டைகள் / பேணிகளைக் கலைக்க வேண்டும். எதிரணியைச் சேர்ந்தவர்கள் அதனை முழுமையாக மீண்டும் அடுக்க வேண்டும்.
- அடுக்கும் அணியினரை எதிர் அணியினர் அடுக்க விடாது பந்தால் எறிந்து தடுக்க வேண்டும். அவ்வாறு பந்தை எறியும் போது பந்து அவர்கள் மீது பட்டால் அவர்கள் ஆட்டமிழந்தவர்களாகக் கருதப்பட்டு விளையாட்டை விட்டு வெளியேற்றப்படுவர்.
- அடுக்கும் அணியினர் பந்து படுவதிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.
- பெரும்பாலும் இந்த விளையாட்டு வெறும் வயல்களிலும் வெற்று நிலங்களிலும் விளையாடப்படும். இந்த விளையாட்டால் உடலுக்கும் உள்ளத்துக்கும் சுறுசுறுப்பு, புத்துணர்ச்சி என்பவை ஏற்பட்டுவதுடன் ஒற்றுமையும் மன மகிழ்வும் மேலோங்கும்.

## பாலியல் + வதை – பகிடி = பகிடிவதை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- எவர் எப்படிக் கேட்டாலும் உங்கட சீனியர்ஸின் ( சிரேஷ்ட மாணவர்களின்) பெயரைச் சொல்லக்கூடாது.
- எல்லாமே எங்கட விருப்பத்தோட தான் செய்தம் என்று சொல்ல வேண்டும்.
- ராக்கிங் பிரச்சினையில் மாட்டிவிட்டீர்களானால், நீங்கள் ஆதாரத்துக்காக இழுபட வேண்டி வரும்.
- அப்போது எம்மை மாட்டிவிட்டவர் எவரென்று எமக்குத் தெரியவரும். அதற்குப் பிறகு எம்மை மாட்டி விட்டவர் இங்கு படிக்க ஏலுமா? ஆகவே கவனமாக இருக்கவும்.
- இந்தக் குருப்பில் இல்லாத ஜூனியர்ஸ் ( புதுமுக மாண வர்கள்) யாராவது இருந்தால், அவர்களின் தொலை பேசி இலக்கங்களை 'பேர்சனலா' அனுப்புங்கோ.
- தினமும் இந்தக் குழுவில் போடப்படும் 'மெசெஜ்' எல்லாத்தையும் அழியுங்கள்.
- சீனியர்ஸைக் ( சிரேஷ்ட மாணவர்களைக்) காட்டிக் கொடுக்காமல் இருங்கள்.

இவையே அந்தக் கட்டளைகளில் சில . இதன் பின்னரே தங்கள் வதைகளைப் பகிடி என்ற பெயரில் அரங்கேற்றி, வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்வார்கள்.

வதை என்பது பகிடியாகச் செய்ய முடியாததொன்று. வதை என்றாலே அதனை அனுபவிப்பவர்களுக்கு உள்ளும், புறமும் வலியையும், வேதனையையும் உண்டுபண்ணக் கூடியது. அவை மனவடுக்களாக இருந்து ஒருவரின் வாழ்க்கையையே முற்றாக நாசம் செய்யக் கூடியவை. அத்தகைய செயலுக்குப் பகிடிவதை எனப் பெயரிட்டவன் ஒரு கொடூரமான மனப்போக்குடையவனாகவே இருக்க வேண்டும். மற்றவர்களை நிர்வாணமாக்கிப் பார்ப்பதை பகிடிவதை என எமது சமூகம் ஒத்துக் கொள்ளுமாயின், அந்தச் சமூக உறுப்பினர்களும் கட்டயமாக உளவளச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களே!

தற்போது அரங்கேறி இருக்கும் இந்த அசிங்கமான செயற்பாடுகளை செய்த மாணவர்கள் ஒட்டு மொத்தமாகத் தாம் படித்த பாடசாலையின் பெயருக்கும், அதில் அவர்களைக் கற்பித்த ஆசிரியர்களுக்கும், தம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றோருக்கும் ஒரு நிரந்தர தலைக் குனிவை ஏற்படுத்தியவர்கள் என்ற வட்டத்துக்குள் உள்ளடக்கப்படவே செய்வர். ஒரு பெண்ணை நிர்வாணமாகப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் பகிடிவதையின் போது ஏற்படுவதல்ல. அவன் அதனை ஒரு நீண்டகால ஆசையாகத் தேக்கி வைத்து, அதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்ததாகவே கருதலாம். இந்தக் கூரூர மனவோட்டம் கொண்ட ஒருவனைத் தனது கணவனாக ஒருபெண் ஏற்றுக் கொள்வாளேயானால் அவள் எதிர்நோக்கவிருக்கும் விளைவுகள் அவளது மகிழ்சிகரமான வாழ்க்கைக்கு அடித்தளமாக அமையாது.

அது மட்டுமல்லாமல் கடந்த காலங்களிலும் இது போன்ற கேவலமான செயற்பாடுகள் பகிடிவதை என்ற போர்வையில் முன்னெடுக்கப்பட்டு அவை சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் இனங்காணப்பட்டனர். ஆனால் இதுவரை அவர்கள் எவ்வித தண்டனைகளுக்கும் உட்படுத்தப் படவில்லை எனவும் , அதுவே இந்த வகையான இழிசெயல்கள் தொடர்வதற்கு உந்துதலாக இருப்பதாகவும் பல்கலைக் கழக வட்டாரத்தில் இருக்கின்ற சமூகப் பொறுப்பு மிக்கவர்கள் விசனிக்கின்றனர். இப்படியான மன்னிக்க முடியாத குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள்மீது பல்கலைக் கழக நிர்வாகமும், அரசும் காட்டும் மெத்தனப் போக்கானது, ஒரு நாட்டைச் சீரழிக்கவே செய்யும்.

இப்போது சந்தி சிரிக்கும் 'பாலியல்' ராக்கிங் விவகாரத்தை கல்விசார் சமூகம் , பல்கலைக் கழக நிர்வாகம், பல்கலைக் கழக மாணவர் அமைப்புகள் போன்றவை எந்த வகையில் கையாளப் போகின்றன என்பதிலேயே பல்கலைக் கழகம் மீதான எதிர்காலக் கௌரவமும் , நம்பிக்கையும் தங்கியுள்ளது.

"எமது பல்கலைக் கழக மாணவர்கள் அமைப்பு நினைத்தால் இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்தலாம், அவர்களை அவ்வாறு செயற்பட விடாதவாறு அவர்கள் பின்னணியில் உள்ள அரசியல் என்ன என்று ஆராயப்பட வேண்டும்" என்கிறார் ஒரு மூத்த ஊடகவியலாளர்.

ஆனால் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தை வழி நடத்தலாம் என்று நம்பிக்கையோடு புறப்பட்டவர்கள் பல்கலைக்கழக மாணவர் அமைப்பினர். கடந்த ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில், தமிழ் சமூகத்தின் நலனுக்காக பொது அமைப்புகளின் இணைப்பில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அவர்களால் ஏன் இது போன்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவர்கள் எண்ணினால் இதனை எந்தவித வலியும் இல்லாது கட்டுப்படுத்தலாம். அதிகாரம் மற்றும் சட்டம் என்ற பிடிக்குள் சென்று இவ்வாறான செயற்பாடுகளை பிறர் கையாள வழிவகுத்தால் மாணவ அமைப்புகளில் மீது மக்கள் கொண்ட நம்பிக்கை குறையலாம். எதிர்காலத்தில் சமூகம் சார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கவோ அல்லது அவ்வாறான நிகழ்வில் பங்குபற்றவோ அவர்கள் அழைக்கப்படுவார்களா? என்றும் அப்படி அழைக்கப்பட்டாலும் முறையான கௌரவம் அவர்களுக்குக் கிடைக்குமா? என்றெல்லாம் எண்ணத் தோன்றுகிறது.

யாழ். பல்கலைக் கழகம் போன்றதொரு கல்வி நிறுவனம் குட்டிச்சுவராவதால் நஷ்டமடையப் போவது ஒட்டு மொத்த தமிழ்ச் சமூகமே. எமது கலை, கலாசார, பண்பாடு ஆகிவற்றின் வெளிப்பாடாக இருக்கின்றதொரு பெரும் சொத்தின் மதிப்பை, இவை போன்ற அற்பத்தனங்களால் குறைக்கப்போகிறோமா? இன்று பல்கலையில், கல்வி கற்பவர்கள் உங்கள் பிள்ளைகள். அவர்கள் இந்த நாட்டின் தலைமைத்துவத்தை ஏற்கப்போகிற, நாளைய தலைவர்கள். என வே இது பற்றிச் சிந்திக்க வேண்டியவர்கள் நாங்களும்தான்! சிந்திப்போமா?

# ட்ரம்புக்கு சிம்மசொப்பனமான நான்சி பெலோசி!



ஆர்.பிரகாஷ்

அமெரிக்காவில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்புக்கு சிம்மசொப்பனமாக ஒருவர் உள்ளார் என்றால் அது "நான்சி பெலோசி" யாகத்தான் இருக்க முடியும். அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பதவியேற்றது முதல் அவரினதும் ஒட்டுமொத்தக் குடியரசுக் கட்சியினதும் குடுமியைத் தன்பிடியில் வைத்துள்ளார் ஜனநாயக் கட்சியின் மூத்த தலைவரும், அமெரிக்க நாடாளுமன்றத்தின் சபாநாயகருமான நான்சி பெலோசி. அமெரிக்க நாடாளுமன்றத்தில் கடந்த நான்காம் திகதியன்று ட்ரம்ப் உரையாற்றினார். ட்ரம்பை வரவேற்கும் விதமாக சம்பிரதாயமான முறையில் அவருடன் கைகுலுக்க முயன்றார் நான்சி பெலோசி. எனினும் ட்ரம்ப் கைகொடுக்காமல் அலட்சியத்துடன் தமது உரையை ஆரம்பித்தார். ட்ரம்ப் உரை யாற்றி முடித்த கையுடன் அவரது உரையின் நகல்களை கிழித்து எறிந்தார் நான்சி. அமெரிக்க அதிபரின் உரையின் நகல்கள் நாடாளுமன்றத்தில் வைத்து அவரின் கண் முன்னாலேயே கிழித்தெறியப்படுவது அமெரிக்க வரலாற்றில் இதுவே முதல் தடவை. இதையடுத்து நான்சி தொடர்பான பேச்சுக்களும் தேடல்களும் சட்டென எகிற ஆரம்பித்துள்ளன.

### யார் இந்த நான்சி?

அமெரிக்க நாடாளுமன்றத்தின் சபாநாயகராக நான்சி பதவியேற்றிருப்பது இது இரண்டாவது முறை. சபாநாயகராக இரண்டாவது முறை பதவியேற்றிருக்கும் ஒரே உறுப்பினர், அமெரிக்க அரசமைப்பின் உயர்பதவியில் இருக்கும் ஒரே பெண் உறுப்பினர் உள்ளிட்ட பல பெருமைகள் இவருக்குண்டு. எலினார் ரூஸ்வெல்ட், ஹிலாரி கிளிங்டன், மிச்செல் ஒபாமா, மெலனியா ட்ரம்ப் என வெள்ளை மாளிகையின் முதல்பெண்களை மட்டுமே அறிந்த உலகத்துக்கு, நான்சி பெலோசி அறியாத முகம் தான்.

உலகஉலா

பெலோசி அமெரிக்காவின் ஈராக் கொள்கையைப் பகிரங்கமாக எதிர்த்தவர். தற்போதைய அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ராணுவத்தில் மூன்றாம் பாலி னத்தவர்கள் இடம்பெறுவதற்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றிய போது, அதை எதிர்த்தவர். ட்ரம்ப்பின் தூய்மைவாதத்துக்கு எதிராகத் தொடர்ந்து குரலெழுப்பி வருபவர். பெண்ணியவாதி. தேர்தலில் வெற்றி பெறுவதற்கு, ட்ரம்ப் ரஷ்யாவின் உதவியை நாடினார் என்கிற குற்றச்சாட்டை அமெரிக்க நாடாளுமன்ற அவையில் முன்வைத்தவர். ட்ரம்ப்பின் யதேச்சாதிகாரத்தை எவருமே எதிர்த்துக் குரலெழுப்ப முடியாமல் இருந்த நிலையில், அதிகாரத்தில் இருக்கும் வலுவான பெண்ணாக நான்சி பெலோசி பல விடயங்களில் சாதித்திருந்தார். அதன் தொடர்ச்சியாக அவர், ட்ரம்பின் பதவியைப் பறிக்கும் தீர்மா னத்தையும் அண்மையில் கொண்டுவந்தார்.

### பதவி பறிப்புத் தீர்மானம்

ஜனநாயகக் கட்சியின் அதிபர் வேட்பாளராக இவ்வருட இறுதியில் போட்டியிட உள்ளார் ஜோ பிடன். இதனால் ஜோ பிடனின் மகனுக்கு உக்ரைன் எரிவாயு நிறுவனத்தில் உள்ள வர்த்தகத் தொடர்பு குறித்து விசாரணை நடத்துமாறு உக்ரைன் அரசிடம் ட்ரம்ப் கேட்டுக் கொண்டதாகக் கூறப்படுகிறது.


மேலும், இந்த விசாரணையை நடத்தி முடிக்கும்வரை, உக்ரைனுக்கு அமெரிக்காவின் நிதியுதவியையும் நிறுத்தி வைத்ததாக ட்ரம்ப் மீது குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதன் மூலம் அமெரிக்க அரசியலமைப்புச் சட்டம், தேசியப் பாதுகாப்பு, அதிபர் தேர்தலுக்கான நம்பகத்தன்மை உள்ளிட்டவற்றுக்கு ட்ரம்ப் ஆபத்து விளைவித்து விட்டார் என்றும், அமெரிக்க தேச இறையாண்மைக்குத் துரோகம் இழைத்து விட்டார் என்றும் ஜனநாயகக் கட்சி குற்றம் சாட்டியது. இதையடுத்து ட்ரம்ப்பை பதவியை விட்டு நீக்கத்திட்டமிட்டு, அதன் முதல் கட்டமாக பிரதிநிதிகள் சபையில் பதவி நீக்கக்கோரும் தீர்மானம் கடந்த டிசெம்பர் மாதம் தாக்கல் செய்யப்பட்டது. இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக 230 பேரும், எதிராக 197 பேரும் வாக்களித்தனர். இதனைத் தொடர்ந்து ட்ரம்ப்புக்கு எதிரான தீர்மானம் பிரதிநிதிகள் சபையில் நிறைவேறியது. மேலும், நாடாளுமன்ற நடவடிக்கைகளை ட்ரம்ப் தடுத்தார் என்ற இரண்டாவது தீர்மானத்துக்கு ஆதரவாக 229 பேரும், எதிராக 198 பேரும் வாக்களித்தனர். இதனைத் தொடர்ந்து ட்ரம்ப்புக்கு எதிரான இரண்டாவது தீர்மானம் பிரதி நிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில் ட்ரம்ப்பை பதவியை விட்டு விலக்கும் தீர்மானம், செனட் சபையில் தற்போது தாக்கல் செய்யப்பட்டது. இதில் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்குத் தடையாக இருத்தல் ஆகிய இரு தீர்மானங்களும் முறையே 52-48, 53-47 என்ற வாக்குகளின் அடிப்படையில் செனட் சபையில் தோல்வி அடைந்தன.

செனட் சபையில் ட்ரம்புக்கு, அதாவது குடியரசுக் கட்சிக்குப் பெரும்பான்மை இருந்ததால் ட்ரம்பின் தலைதப்பும் என்ற பொது வான அபிப்பிராயம் இயல்பாகவே இருந்தது. இதனால் ட்ரம்ப் அதிபராகத் தொடர்வதென்பதில் ஆச்சரியப்படுவதுக்கு ஒன்றுமில்லை. ஆனால் கோலியாத்தை எதிர்க்கும் தாவீதைப் போன்று ட்ரம்ப்பை எதிர்க்கும் நான்சி நிச்சயம் ஆச்சரியப்பட வைக்கும் ஒருவரே.

# மௌன மொழி

2 இற்கான கவிதைகள்



“சோடி எருது
கொண்டு போகும் சின்னத்தம்பியே
சோழ தமிழன் பண்பாடு நீ
கொண்டு போகின்றாய் சின்னத்தம்பியே
கயிற்றை (பண்பாடு) நீ
கைவிட்டு விடாதே சின்னத்தம்பியே
கைவிட்டு விடாதே சின்னத்தம்பியே”

**மாதகல் மயூரன்**

---

உழவுக்காக உயிர் நீத்த அப்பனின்
அடிச்சுவடுகள் அர்த்தமின்றி மாயமுன்
உலகம் மதிக்கத் தவறும் உழவை
கற்கும் வயதில் கையிற் கொண்டு
ஏருடன் புறப்பட்ட பாலகனின்
பசி தீருமோ இல்லையோ!
கொண்ட கொள்கையின் உறுதியால்
நிச்சயம் உலகின் தாகம் தீர்ந்துவிடும்

**சுவிற்றிகா சுதாகரன்**
யா/வயாவிளான் மத்திய கல்லூரி.

---

**வண்டி இழுக்கும் எருது
உண்டி கொடுக்கும் உழுது
தொண்டு புரியுது எருது
கண்டு நீயும் பழகு
குறைகள் இல்லா விலங்கினம் மீது
அன்பைக் கொஞ்சம் காட்டுங்களேன்
அவனியில் வாழும் மனிதர்களே!**

**பி.கிருசாந்தி**
741 பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

---

மண்ணிற் தெரியும் வானம்
தண்ணீரின் பெருமையைக் கூறும்
இன்றைய காளைகளை மேய்க்க
நாளைய வாலிபன் விரட்டிச் செல்ல
துவிச்சக்கரமும் உதவிடும்
புவி போற்றும் நல் வாழ்வுக்கு
சலியாத மனப்பாங்கு தான்
சரியான வழிகாட்டி!

**க.நாகராசா**, சாவகச்சேரி.

---

**உணர்விழந்து...
உறவிழந்து...
சுற்றமிழந்து...
எனது கல்வியையுமிழந்து!
இன்று
மாடு மேய்த்து
சகோதரியை படிப்பிக்க..
ஆசிக்கிறேன்.**

**லோ.கெனடி**
வவுனியா

---

ஏடு தனை எடுத்து
எழுத்தாணி தனைத் தொடுத்து
பள்ளி செல்லும் பருவப்
பாலகன் ஏன் இங்கு?

வேக வைக்கும் வெயிலிலே
வியர்வை தனைத் துடைத்தே
விவசாயம் செய்யும் இவனை ஒரு
வள்ளல் எனத் துதிப்போமே!

**சரண்யா முரளிதரன்**
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

---

**சைக்கிளில் சந்தோசமாகச் சென்று
ஏர் பூட்டி உழுத காலமடா அது
இயந்திரம் பூட்டி இன்பத்தை
தொலைத்த காலமடா இது.**

**அடக்கமாய் அன்பாக ஆளுக்கு
ஆறுதலாக இன்பத்துடன் இருந்த காலம் அது
அவசர மனித வேக மனிதகாலம் இது
மீண்டும் வருமா பசுமையான வாழ்வு?**

**யோ. தாட்சாயினி,**
சுதந்திரபுரம், கொலணி.

---

சின்னவன் வண்டி மிதித்து
பாதை காட்ட
மாடுகள் முன்னே சென்று
மண் நோக்க
வானம் பொய்க்க கூடாதென
உள்ளம் கேட்க
நம்பிக்கை ஒளி தெரிகிறது!

**சிவரம்யா**

---

## பரிசு பெறும் கவிதை

ஏடு தூக்கும் கைகள்
ஏர் மேய்ப்பதைப் பார்த்து
ஏழையென எண்ணாதீர்
எதிர்கால விவசாயி இவன்!

அடுத்த சந்ததிக்கு
அடிசில் தனை இட்டு
அவர்தம் உயிர் காக்கப் போகும்
ஆண்டவன் இவனையா!

**யோ.புகழினி**
யா/வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை

---

**கட்டவிழ்த்த பந்தங்களால்
கடன்பட்ட கருதாங்கியின்
சுமை தீர்க்க வெளிவந்த மொட்டு
அரும்பும் தருணம் வடம் கொண்டு
எட்டாத ஈருருளியில்
எட்டி மிதித்து காளையுடன்
கொண்ட வியர்வை தீரும் வரை
அலையும் காலம் முடிவிலியோ........!**

**சு.சுதர்ஜனா**
புன்னாலைக்கட்டுவன்

---

*அதிகாலைப் பொழுதின் வானின் போர்வைக்குள்
இரு கால்களின் முயற்சியில் நகரும்
இரு சக்கரங்களின் நடுவே
இளம் சிட்டின் பிஞ்சுக் கரங்களில்
ஓங்கி நிற்கும் மரத்தின் சிறு பகுதியை ஆயுதமாக்கி
பசுக்களினை இயங்க வைக்கின்றான் எனினும்
பார்வை விம்பத்தை தகர்த்தெறிந்து
சிந்தனைக் கடலை விரிவு படுத்தி செல்கின்றது
அச் சிட்டின் அன்பு*

**ப.அபிசா**, யாழ்ப்பாணம்

---

ஓ...! காளைகளே...
நீங்கள் எங்கு
அலைந்து சென்றாலும்
ஒரே விதி தான்
உங்களுக்கும் எங்களுக்கும்
ஏழைத் தமிழனின்
காளை அல்லவா நீங்கள்
நிச்சயம் கிடையாது
நம் நாட்டில் சுதந்திரம்!

**கி.திவாகரன்**
யா/ இந்துக் கல்லூரி

---

உந்தித் தள்ளும் துவிச்சக்கரவண்டி
மாட்டை விரட்ட கையில் தடி
சிதறி ஓடும் மாட்டின் கயிறு
வியர்வைத் துளிகளின் வெற்றுடம்பு
விளையாடவில்லை போராடுகிறான்
ஓடும் மாடும் உந்தும் வண்டியும்
சமநிலை பேண தடுமாறும் பிஞ்சு நாளை
முயன்று வெல்வான்!

**திருமதி மேரி மெக்டலீன்
ஜெயக்கெனடி**
வவுனியா.

---

எம்மைப் பயன்படுத்தி
நிலத்தினை வளமாக்கி
உச்ச பயனைப் பெற்று
பூமியிலே உயிர் வாழ்ந்து

உலகத்தினையே உருமாற்ற
ஈருந்துருளிதனை மிதித்தவனாக
அழைத்துச் செல்கின்றான்
எமக்குத் தெரியாமலே

**சேரரூபன்
அருள்மதி,**
உடுவில்.

---

**ஏர் எடுத்து உழவு செய்து
ஏற்றம் கண்ட எம்பூமி
பசிப்பிணியை போக்கி வரும்
நம்ம ஊர் விவசாயி
தன் வீட்டு ஆவினத்தை
பசியாற மேய விட்டு
இன்பம் காணும்
உன்னத காளை இவன்**

**க.செல்வமலர்,**
சிறுவர் இல்லம், திருநெல்வேலி.


---

உருள்வது உன் சைக்கிள் சக்கரம் என்றாய் நீ
அது உன் காலச்சக்கரம் என்கிறேன் நான்
மை வடிக்கத் தேடப்படுகின்றன உந்தன் கரங்கள்
நீயோ சுமக்கிறாய் உன் குடும்பப் பாரங்கள்
மாடு மேய்க்கும் உனக்கு எப்படிச் சொல்வேனடா
கால்போன போக்கில் போவது மாடல்ல
உன் எதிர்காலமென்று....!

**ச.வைஷாலினி**, நல்லூர்.

---

# மௌன மொழி 3




**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்: 14.02.2020**

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *uthayansanjeevi@gmail.com*

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌன மொழி பகுதியில் பிரசுரமாகும்.



# இப்போது சூத்திரம் என்றாலே பாத்ரூமுக்குள் ஓடுகிறார்கள்...!

## வித்துவான் பதில்கள்



1. பிரியத்துக்குரிய வித்துவானே!
மிக நீண்ட காலத்துக்குப் பிறகு வந்திருக்கிறீர்கள். எங்கே போயிருந்தீர்கள் ?

*க. கஸ்தூரி , உரும்பிராய்.*

**ஒரு பெரிய அஞ்ஞானவாசம்தான். ஞானத்தை தேடிப் போயிருந்தேன். ஞானம் என்பது என் மனைவியும் இல்லை; தனித்தீவு வாங்கிப்போக நான் நித்தியானந்தா சுவாமியும் இல்லை.**

2. வித்தூஸ், பந்தைச் சேதப்படுத்தல் என்றால் என்ன?

*ச.கணேஸ், உடுப்பிட்டி.*

**இதை ஆங்கிலத்தில் 'ball tempering' என்று சொல்வார்கள். புதுப்பந்து நல்ல 'சைனிங்கா' இருக்கும். (நீங்களும் பார்த்திருப்பீர்களே ) அதனால் அது நன்றாகத் திரும்பும் ( swing ஆகும்). ஆனால் 40, 50 ஓவர்களின் பின் பந்து தேய்ந்து விடும்( இதையும் அறிந்திருப்பீர்கள் ). எந்த வகையிலும் swing ஆகாது.**
**இப்போது பந்தின் ஒரு பக்கத்தைத் தேய்ப்பதன் மூலம் பந்தை reverse swing ஆகச் செய்யலாம். இதற்காக பந்தை நகத்தினாலோ அல்லது வேறு பொருள்களினாலோ தேய்த்து செயற்கையான மாற்றத்தை ஏற்படுத்துவது தான் பந் தைச் சேதப்படுத்துதல் ஆகும்.**
**போட்டிருக்கும் ஜீன்ஸின் 'சிப்பில்' தேய்த்துக்கூடப் பந்தைச் சேதப்படுத்தியிருக்கிறார்கள் என்றால் பாருங்களேன். என்னைப் பொறுத்தவரை எந்த விளையாட்டிலும் பந்தைச் சேதப்படுத்தாமல் விளையாட வேண்டும்.**

3. முன்பெல்லாம் தமிழாசிரியர்கள் இலக்கணத்தை சூத்திரங்களைச் சொல்லி விளங்க வைத்தார்கள். இப்போது அப்படி இல்லையே? ஏன் வித்து ?

*சா .வசந்தன், ஸ்கந்தபுரம்.*

**முன்பெல்லாம் மாணவர்களும் சூத்திரங்களைப் பாடமாக்கி இலக்கணத்தை விளங்கிக்கொண்டார்கள். இப்போது சூத்திரம் என்றாலே பாத்ரூமுக்குள் ஓடுகிறார்கள் என்றால் ...... போகிற அளவுக்குப் பயப்பிடுகிறார்கள்.**

4. ஹாய் வித்ஸ்!
என் அயல் வீட்டுப் பெண் என்னைக் கண்டாலே மூக்கின்மேல் விரலை வைக்கிறாள். நான் அந்த அளவுக்கு அழகாக இருக்கிறேன் என்றுதானே இதற்கு அர்த்தம்?

*க.தவரூபன், நெல்லியடி.*

**முதலில் நீங்கள் குளித்து எத்தனை நாள்கள் என்று சொல்லுங்கள்?**

5. டியர் வித்துவான்,
ஊருக்கே நீதி சொன்ன ஆலயங்கள் இப்போது நீதி மன்றை நாடுகின்றனவே, என்ன காரணம் ?

*செ. காளிதாசன், கரவெட்டி.*

**தெய்வங்கள் உயிர்ப்போடு இருந்த காலத்தில் மனிதர்கள் நீதிநெறியில் நடக்க ஆலயங்கள் வழிகாட்டின. மனிதர்கள் மட்டுமே உயிர்ப்போடு இருக்கும் காலத்தில் மனிதர்கள்தான் தெய்வங்களுக்கு நீதி கூறுகின்றனர்.**

6. வித்தண்ணா, நான் கல்வியில் டிப்ளோமா செய்கிறேன். விரிவுரையாளர் 'கரிக்குளம்' ,'கரிக்குளம்' என்று அடிக்கடி சொல்கிறாரே ! அப்படி என்றால் என்ன ?

*த. துஷ்யந்தி, ஏழாலை.*

**கரிக்குளமும் கனகராஜன் குளம் மாதிரித்தான் ஒரு குளமாக இருக்கும் போல.**

7. வித்தூ, மைத்திரி குதிரை வண்டியில் வந்து அசத்தினார் என்று பார்த்தால் இப்போது கோத்தாபாயவும் ஓட்டோவில் வந்து கலக்குகிறார். நாடு எளிமையையும் பழமையையும் நோக்கிச் செல்கிறதா?

*ப. நேதாஜி, நல்லூர்*

**புதுசுதானே? கொஞ்சக்காலம் கூட்டட்டும் பார்க்கலாம்.**

8. வித்துவானே! வைஃபுக்கும், வைப்புக்கும் என்ன வித்தியாசம்?

*பு.நிஷாகர், அச்சுவேலி*

**சட்டப்படி வைத்திருந்தா வைஃபு .**
**சட்டபூர்வமில்லாமல் 'வைத்திருந்தா' வைப்பு.**


9. பொதுபலசேனாவைக் கலைக்கப்போறாங்களாம். எமது பிரதேசத்திலும் வன்முறைக் குழுக்களைக் காணவில்லை.இவை எல்லாம் எவற்றைக் குறிக்கின்றன வித்துவானே?

*தா.சக்திகிரிவன், பூநகரி*



**''எப்போதெல்லாம் தர்மம் அழிந்து அதர்மம் மேலோங்குகிறதோ அப்போதெல்லாம் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட யுகம்தோறும் நான் அவதரிப்பேன்'' என்றார் கிருஷ்ணபரமாத்மா. அப்ப கிருஷ்ணாவதாரம் நிகழவேண்டும் என்றால் என்ன நடக்க வேண்டும்? அதர்மம் மேலோங்க வேண்டும். இப்போதுதான் கிருஷ்ணாவதாரம் முடிந்து விட்டதே. இனிச் சிசுபாலர்கள் எதற்கு? கம்சர்கள் எதற்கு ?**

ஊருக்கே நீதி
சொன்ன ஆலயங்கள்
இப்போது நீதிமன்றை
நாடுகின்றனவே
என்ன காரணம் ?





## இந்த வார ஜோக்

ஒரு யானை குளத்தில் குளித்துக் கொண்டிருந்தது. அப்போது அங்கே வந்த எலி "நான் குளிக்க வேண்டும். நீ வெளியே வா" என்று யானையிடம் கூறியது.

அதற்கு யானையோ "இந்தப் பெரிய குளத்தில் எவ்வளவு இடம் இருக்கிறது, நீ அப்பாற் போய்க் குளி" என்று கூறியது.

எலி மீண்டும் யானையை வெளியே வரும்படி கேட்டது.

அப்போது யானை "இந்தப் பெரிய உடலைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்து நீ குளித்து முடித்த பின்பு நான் மீண்டும் போய்க் குளிப்பது கஸ்டம், நீ எங்காவது போய்க் குளி" என்றது.

அப்போதும் எலி கேட்காமல் யானையை வெளியே வரும்படி நச்சரித்தது.

எலியின் நச்சரிப்புத் தாங்க முடியாத யானை வெளியே வந்து "நீ போய்க் குளித்து விட்டு வா" என்று எலியிடம் கூறியது.

அதற்கு எலி " இல்லை நீயே போய்க் குளி, நான் பின்னர் குளித்துக் கொள்கிறேன்" என்றது.

அதைக் கேட்ட யானைக்கு கோபம் வந்தது, "என்ன விளையாட்டுக் காட்டுகிறாயா?, எதற்கு என்னை வெளியே வரச் சொன்னாய்" எனக் கேட்டது.

அதற்கு எலி "ஒரு சின்னச் சந்தேகத்தைத் தீர்க்க வேண்டியிருந்தது, இனி நீ போய்க் குளிக்கலாம்" எனக் கூறியது.

"என்ன சந்தேகம்......?"

"நேற்றுக் குளித்து விட்டு குளக்கரையில் எனது காற்சட்டையைத் தோய்த்துப் போட்டேன், காணவில்லை, அது தான் நீ போட்டிருக்கிறாயா எனப் பார்த்தேன்" என்றது எலி.

சஞ்சீவி சிறுகதை

# சாருமதியின் வீடு

○ தாட்சாயணி

அந்த முற்றத்தில் இப்போது பாதச்சுவடுகள்அதிகரிக்கின்றன..
புதிய,புதிய சுவடுகள்...
யார்,யாரோ...? எவர், எவரோ...?
அந்த வீடு முன்னெப்போதும் காணாத பலபேரைத் தன் அறைகளுக்குள் அனுமதிக்கிறது.
இன்னும் கொஞ்ச நாள்கள் தான். அதற்குப் பிறகு அந்த வீட்டின் மீதான எனது நெருக்கம் விலக வேண்டியது தான். இது வரைக்கும் அதனோடிருந்த ஒட்டுறவு கழன்று வெறும் ஏக்கப் பெருமூச்சுக்களோடு அதைத் தாண்டிப் போக வேண்டியதுதான்.
எனக்கே இந்த அவதி என்றால்... சாருமதிக்கு...? சாருமதி இங்கு இல்லை. அவள் இப்போது இங்கு இல்லாமலிருப்பதே நல்லது. எப்போதாவது அவள் திரும்பி வருவாள் என்ற நிலையும் இனி இல்லாமலாகும். இனி,எந்த ஒரு காலத்திலும்,அவள் இங்கு வரப் பிரியப்படமாட்டாள்.



எப்போதாவது வந்திருக்கலாம். வராமல் விட்டுவிட்டு இனி ஏங்குவதில் அர்த்தமொன்றுமில்லை. சாருமதியின் வீடு எப்படியெல்லாம் இருந்தது அப்போது.

வாயிலின் இரண்டு பக்கமும் சரிந்து, வீட்டை நோக்கிச் செல்லும் பச்சைச் செடிகள் மூன்றடிக்கு அழகாகக் கத்தரிக்கப்பட்டிருக்கும். புல்வேலி போல் பசுமை. முன் படலைக்குக் குடை பிடிப்பது போல் 'ஜாம்' மரம். குறுணல் குறுணலாக சிவந்த பழங்களையும் கூடவே சில குருவிகளையும் கொண்டிருக்கும். அது பின்வளவில் ஒரு பெரு நெல்லி நின்றது. சாருமதியின் அம்மா பெரிய நீண்ட கொக்கத்தடி தந்து நெல்லிக்காய் பறித்த ஞாபகம் நெஞ்சின் ஓரத்தில் பதுங்கியிருக்கின்றது.

சிறுவயதில் சாருமதி பள்ளிக்கு வரும்போது நெல்லிக்காய் கொண்டு வருவாள். எங்கள் வீட்டுப்பக்கம் வேறெங்கிலும் பெரிய நெல்லி இருந்ததில்லை. அவள் ஒன்றொன்றாய் ஒவ்வொருவருக்கும் நெல்லிக்காய் பகிர்ந்து தருவாள். இன்னொன்று... இன்னொன்று... என்று கேட்டு அவளது நெல்லிக்காய்களுக்காகவே நான் அவளோடு சிநேகமாயிருக்கிறேன்.

அவள் எனக்கு நெருக்கமான சிநேகிதி என்றில்லை. அவள் என்னூர்க்காரி என்பதால், சிறு வயதில் ஆரம்பித்த நட்பு. அவ்வளவுதான். அவளுக்கு நெருக்கமாக அஞ்சுவும், யாழியும் ஒட்டிக் கொண்டு திரிந்தார்கள். எனக்குப் பானு நெருக்கமாயிருந்தாள். சாருமதி எனக்கு சாதாரணமான ஒரு வகுப்புத் தோழி, அவ்வளவே.

ஆனால்,ஒரு நெல்லிக்காய்க் காலத்தில் அவளோடு என் உறவு முறிந்து போனது. அது அவளது தோழிகளதும் என் தோழியினதும் போட்டியினால் ஏற்பட்டதாயிருக்கலாம்.

ஒவ்வொருமுறையும் பெரிய நெல்லிக்காயில் எனக்குள்ள விருப்பம் உணர்ந்து, கொண்டு வந்து தருவாள் அவள். அந்த நெல்லிக்காய்ப் பரிமாற்றம் எல்லாவித நட்புக்களை விடவும், அபரிதமானதாயிருந்தது. ஆனால், அந்தமுறை அஞ்சுவும் யாழியும் என்மீதிருந்த சாருவின் அன்புரிமையைப் பறித்து விட முனைந்தனர். அதிகூடிய நட்புக்களாகத் தாங்கள் இருக்கும்போது, அவள் எப்படி முதல் நெல்லிக்காயை என்னிடம் தரலாம் என்பதாகத்தான் தொடங்கிற்று அது.
சாரு அதற்குப் பதில் சொல்லமாட்டாமல் திணறினாள். எத்தனை புதிய நட்புக்கள் வந்தாலும் இளமையிலே ஆரம்பித்த நட்பை அவள் எப்படி உடைத்துவிடமுடியும்? அதற்குள் பானு குமுறிவிட்டாள். "நெல்லிக்காய் வேண்டுமானால் சந்தையில் வாங்கிக் கொள்ளலாம். இதற்குப் போய் ஒரு நட்புத் தேவையா...? "என்று உருவேற்றினாள் அவள். அதற்குப் பிறகு சாருமதியும்,நானும் பேசிக்கொள்வதில்லை. அஞ்சுவோடும் யாழியோடும் பானு முறுகிக்கொண்டாள். நெல்லிக்காயில் அவர்களுக்கு விருப்பம் அதிகமில்லாவிட்டாலும், நெல்லிக்காய்க் காலங்களில் என் கண்களில் படும்படி கன்னங்களை உப்ப வைத்துக் கொண்டு செல்வதை, நான் கண்டும் காணாத மாதிரிச் சென்றிருக்கிறேன். இதெல்லாம், பத்தாம் வகுப்பில் நாங்கள் படிக்கும் போது நடந்தது. பிறகு, இரண்டு வருடங்கள் நாம் ஒருவரடொருவர் பேசிக் கொள்ளாமலேயே கழிந்தது.அம்மா சாருமதி வீட்டுக்குப் போகின்ற வேளைகளில் சாருவின் அம்மா பை நிறைய நெல்லிக்காய்களைக் கொடுத்து விட்டிருப்பாள். அம்மாவுக்கும் சாருவின் அம்மாவுக்கும் நாம் பேசிக் கொள்ளாதது குறித்து நிறைய வருத்தம் இருந்தாலும், காலப்போக்கில் எல்லாம் சரியாகி விடும் என்று நினைத்துக் கொண்டார்கள்.

சின்ன வயதில் நான் பெரும்பாலும் அங்கு தான் விளையாடி வளர்ந்தேன். அவள் வீட்டு முற்றம், அதில் சரித்து வெட்டப்பட்டிருந்த பச்சைநிற அடர்ந்த குறுவேலிகளுக்கிடையே ஒளித்து விளையாடுவோம். இரண்டு அண்ணன்கள் அவளுக்கு. அவர்களது நண்பர்களால் அவளது வீடு அமர்க்களப்படும். சிறுவயதில் அவர்களோடு சேர்ந்து நானும் சாருவும் விளையாடியிருக்கிறோம். வளர்ந்த பிறகு பையன்கள் நிற்கும் வீடு எனும் நினைப்பு என் குடும்பத்தைச் சலனப்படுத்தியது. அதன் விளைவாக நான் அங்கு போவது ஓரளவு மட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்து வந்தது. அவளோடு கதைக்காமல் விட்ட பிறகு,அந்த வீடு எனக்கு முற்றிலும் அந்நியமானது போலிருந்தது. ரியூஷனுக்கு அவளது வீட்டைத் தாண்டித் தான் போய் வரவேண்டியிருந்தது.
அவளது அண்ணன்கள் படலையின் 'ஜாம்' மரத்துக்குக் கீழ் யாரேனும் நண்பர்களோடு கலகலத்துக் கொண்டிருப்பார்கள். அவளும் நானும் ஒற்றை ஒற்றையாக வந்து கொண்டிருப்போம்.
சில வேளைகளில் அவள் முன்னால்...
சில வேளைகளில் நான் முன்னால்...
அவளது பெரியண்ணா எங்களைக் கிண்டலடித்துச் சிரிப்பான். அவளானால்,வீட்டில் அவனோடு அது குறித்து மல்லுக்கட்ட முடியும். என்னால் அது முடியாது. தலையைக் குனிந்துகொண்டு வந்துவிடுவேன். காலம் அப்போது கரும்புகைகளால் நிரம்பியிருந்தது. அடிக்கடி குண்டுகள் வந்து வீழத் தொடங்கியிருந்தன.

கொஞ்ச நாளில் அவளது அம்மா தன்னுடைய பேரிலிருந்த ஆறு பரப்புக் காணியை விற்பதற்காக ஓடித் திரிந்தாள். நெடுநாள் அலைச்சலின் பின்னர் காணியை விற்றுத் தன்னுடைய ஆண்பிள்ளைகளைக் கொழும்புக்கு அனுப்பிவிட்டாள். அவர்களும் அதற்குப் பிறகு ஒன்றொன்றாய் ஏதேதோ தேசங்களுக்குப் போனதாயறிந்தேன்.

நாங்கள் 'ஏ.எல்'லுக்கு வந்தோம். அஞ்சுவும் யாழியும் பட்டணத்துப் பாடசாலைக்குப் படிக்கப் போனார்கள். பானுவோ கலைப் பிரிவில் சேர்ந்து கொண்டாள். நானும் சாருவும் விஞ்ஞானப்பிரிவில் ஒன்றிணைந்தோம். பழைய நட்புகள் விலகப் புதுப்புது நட்புகள் சேர்ந்தன. ஆனால் எங்களுக்கிடையிலான இடைவெளி அப்படியே தானிருந்தது. ஏனோ, என்னாலும் அவளோடு பேச முடியவில்லை. அவளும் என்னோடு வலிந்து பேசவில்லை.
அஞ்சுவும்,யாழியும் பிரிந்து போனபின் அவள் ஒருநாளும் நெல்லிக்காய் கொண்டு வரவுமில்லை. அம்மாவிடம் அவள் அம்மா கொடுத்தது போக மீதி நெல்லிக்காய்களை அவளின் அம்மா சந்தைக்குக் கொடுத்தனுப்புவதாகப் பிறகு அறிந்தேன்.

அடுத்த இரு வருடங்களுக்கு நாங்கள் பட்டுக்கொள்ளாமல் பழகிக் கொண்டோம். அவளுக்கு அதிகமாக நண்பர்கள் இருந்தார்கள். இரண்டு அண்ணன்கள் இருந்ததாலோ என்னவோ அவள் ஆண்பிள்ளைகளோடு மிகவும் இயல்பாகப் பேசுவாள். அது யார் கண்ணைக் குத்தியதோ தெரியவில்லை. எங்களுக்கு முதல் வகுப்பில் படித்த 'சேந்தனோடு' அவள் கதைப்பதாக என் வகுப்புப் பெண்கள் கிசுகிசுத்தார்கள். அவள் இயல்பாகக் கதைத்ததை அவர்கள் தப்பாக அர்த்தப்படுத்திக் கொண்டார்களோ...? அல்லது 'சேந்தனை ' அவளுக்குப் பிடித்துக்கொண்டதோ? அது அவளுக்கு மட் டுமே தெரிந்த ரகசியமாக இருக்கலாம்.

சிலவேளை அஞ்சுவும் யாழியும் கூட அவளோடு தொடர்பில் இருந்திருப்பின் அதை அறிந்திருக்கலாம். அதைப்பற்றி அவளிடம் கேட்பதற்குரிய எந்த உரிமையும் என்னிடத்தில் இல்லை. உயர்தரப் பரீட்சை எழுதி மறுமொழி வந்து இரண்டாம் தடவைக்கு நாங்கள் முயற்சி செய்து கொண்டிருந்த காலகட்டம் அது.
அப்போதுதான் அவள் சீக்கிரத்திலேயே போய் விடப் போகிறாள் என்றார்கள். அவள் அம்மாவுக்கு உடம்பு முடியாமல் போய் கடைக்குட்டிப் பெண்ணான அவளுக்கு ஒரு கல்யாணத்தைச் செய்து பார்த்துவிட வேண்டுமென்ற எண்ணம் வந்தபோது அவளுக்கு வயது வெறுமே இருபதுதான். அண்ணன்கள் அவளுக்கு வெளிநாட்டில் மாப்பிள்ளை பார்த்தார்கள். அப்போது போக்குவரத்து சிக்கல்பட்டுக் கொண்டிருந்த காலம். வடக்கைத் தாண்டுவதென்பதே பெரும்பாடாகவிருந்தது. அவளுக்குக் கல்யாணம் முற்றாகிற்றென்று அவளது அம்மா எனது சித்தியிடம் சொல்லியிருந்த செய்தி என் காதிற்கும் கசிந்து வந்தது.
"இப்பவாவது ஒருக்கால் போட்டுவா..." அம்மாவின் குரலில் சாருமதி மீதிருந்த பரிவு எட்டிப்பார்த்தது. நெடுநெடுவென்று நீண்ட நாட்களின் பின்னரான ஒரு மாலைப்பொழுதில் அவளது வீட்டுக்கு மறுபடியும் சென்றிருந்தேன். சிரித்தபடியே வாசலுக்கு வந்தாள் . எனக்கு அவளைப் பார்க்கத் துக்கம் ஒரு பாறை போல தொண்டைக்குள் அழுத்தியது. என்ன மனநிலையோடு அவளை அணுகுவதென்று தெரியவில்லை. இறுகிப்போன மௌனத்துடனிருந்தேன். ஒருவேளை அவள் உண்மையிலேயே 'சேந்தனைக்' காதலித்து, தாய்க்காக இந்தக் கல்யாணத்தை ஏற்றிருக்கின்றாள் என்றால் அதற்காக நான் சந்தோஷப்பட முடியாது.

(18ஆம் பக்கம் பார்க்க)



# லோ... லோ... லோன்!

தொல்புரம் சி.கதிர்காமநாதன்

2003 ஆம் ஆண்டு வீடு கட்ட வேணு மெண்ட நிலைமை உருவானது. வேறுவழி தெரியவில்லை. மூளையைக் கசக்கி நானும் மனுசியும் யோசித்தோம். பிள்ளைகள் இருவரும் தங்களை மறந்து "பாசமலர்" படத்தின் சிவாஜி போல் "அப்பா வீடு கட்டுவார்" என அமைதி கொண்டார்கள். நாங்கள் கற்பனைத் தேரினில் பறந்து சென்றோம்.

புதிய வீடு கட்டுவதைத் தவிர வேறுவழி தெரியவில்லை. தமிழரசுக் கட்சி, வட்டுக் கோட்டையில் எடுத்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் போல, நாங்களும் முடிவெடுத்தோம். இதற்கு வித்திட்டவர் அயல் நண்பர் அருந்தவம் அண்ணா. அவரைத்தான், நாங்கள் இருந்த வீட்டின் திருத்த வேலைக்காக அழைத்தோம். (எண்பது வருஷம் கழிந்த பழைய நாற்சார் வீடு எங்களது 'வெள்ளை மாளிகை')

"இது எண்பது வருஷ காலத்துப் பழைய வீடு, கறையான்கள் சுவருக்குள்ளால் வரத் தொடங்கிட்டுதுகள், இனித் தட்டிக்கொட்டி 'சொலிக்கனம்' பூசி திருத்தம் செய்தும் பிரயோசனமில்லை, வீண்செலவு, நான் சகோதரம் மாதிரிச் சொல்லுறன், இதைத் திருத்தி வீணாய்க் காசைக் கொட்டாமல் இதை இடிச்சோ அல்லது வேறுவிதமாகவோ புது வீடு கட்டுற 'பிளானை' யோசியுங்கோ"

அவர் சொல்லிவிட்டுப் போய்விட்டார். எங்களுக்கும், யோசிக்க அது சரியாய்த்தான் பட்டுது. நாங்கள் வேறு கட்சிகளுடன் கூட்டணி வைக்காததால் இழுபறி இல்லாமல், வாக்கெடுப்புக்கு விடாமல், அவர் சொன்னதை ஏகமனதாக ஏற்றுக்கொண்டு அடுத்த கட்ட வேலையைத் தொடங்கினோம்.

"காசுக்கு என்ன செய்வது? கையில் இருப்பதை வைத்துக் கொண்டு தொடங்க வேண்டியது தான்"

2003 ஆம் ஆண்டு சிமெந்து 530ரூபாய் வரை போனது. வீடு கட்ட முதல் கற்களை அரிந்து வைக்கத் தொடங்கினோம். மனைவி அரச ஊழியர். வீட்டுக்கடன் எடுக்கத் துணிந்தோம். அதற்குரிய ஆரம்பக் கட்ட நடவடிக்கையைத் தொடங்கினோம். அரசகடன் என்றதும் பல பேர் முகத்தைச் சுளித்தார்கள்.

"உது தேவையில்லாத வேலை, காசு எடுக்கிறது சரியான கஸ்டம், எங்கட 'நேர்சிங் ஒபிசர் 'பாலசுந்தரம் லோனுக்குப் போட்ட பிறகு 'பாங்கிலை' அவையள் கேக்கிற ஒவ்வொரு விடயத்துக்கும் அலைஞ்சு திரிஞ்சு கடைசியில 'லோனை' எடுக்காமலே விட்டிட்டார்"

நானும் கேள்விப்பட்டனான். 'பாங்கிலை' கேட்டதைக் குடுத்த பிறகும், அடுத்த ஒன்றை எடுத்துத் தாங்கோ என்று சொல்லுவினமாம். வெளியிலஎடுக்கிறதுக்கு காசு செலவழிக்க வேணும்.

"என்னப்பா...? ஆக்கள் கதைக்கிற கதையளைக் கேட்டீரே? குழப்பியடிக்குதுகள்"

"ஒண்டும் செய்யேலாது, லோன் எடுத்தாத்தான் சமாளிக்கலாம்"

"எவ்வளவு எடுப்பம்"

பல மணி நேர யோசனைக்குப் பிறகு "இரண்டரை லட்சம் எடுப்பம்..."

அடுத்து வங்கியை அணுகி, படிவங்களை நிரப்பி, வங்கி அதிகாரியைச் சந்தித்தபோது அடுத்த கேள்வி எழுந்தது.

"எவ்வளவு காலத்துக்குள்ள கட்டி முடிப்பியள்?" தரமான கேள்வி. நாங்கள் இருவரும் யோசித்தோம்.

"நீங்கள் எடுக்கிற தொகைக்கு, கூடின காலத்திலை கட்டி முடிக்கிறதெண்டால் மாதம் கட்டுற காசு குறைவாக இருக்கும். குறுகிய காலம் எண்டால் மாதம் கட்டுற காசு அதிகமாக இருக்கும்"

"சரி நாங்கள் பதினைந்து வருடத்துக்குள்ள கட்டுறம்"

அதன்பின்னர் ஒவ்வொன்றாகக் கேட்கத் தொடங்கினார்கள். காணி உறுதிக் கடிதங்கள், சம்பள அளவுத் திட்டம், வீட்டுப் பிளான் இப்படியே தொடங்கி வெறும் இரண்டரை லட்சக் கடனுக்காக 2003ஆம் ஆண்டு அலைந்தோம். இந்தா முடியுது..., அந்தா முடியுது... என்று லோன் பெறும் படலம் தென்னிந்தியத் தொலைக்காட்சித் தொடர் போலை நீண்டு கொண்டே போனது.

கடைசியில் இன்சூரன்ஸ் கேட்டு லோயரிடம் போய் கடிதமும் வாங்கி, லோனை முழுமையாகக் கையில் பெற ஏறக்குறைய 50 ஆயிரம் ரூபாவரை செலவுபோனது. இன்றுவரை அந்த லோனுக்காக மாதாமாதம் 2,690 ரூபா கழிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. (இந்த வருட இறுதியில் அது முடிவடைகிறதாகத் தகவல்)

பணம் அந்த நேரத்தில் கிடைத்தது நல்ல விசயம்தான். பணத்துக்காக பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகமாகப் போய்விட்டன. அரச ஊழியரான மனைவியும் இப்போது ஓய்வு பெற்று விட்டார். நானும் ஓய்வு பெற்று விட்டேன்.

இன்று என்ன நடக்கிறது?

"ரீச்சர் நிக்கிறீங்களே? இரண்டு லட்சம் லோன் தருகினம், பிணைக்கு ஒரு ஆள் 'சைன்' பண்ணினால் காணுமாம், வேறு ஒண்டும் தேவையில்லையாம்."

"அக்கா, மூன்று பேர் சேர்ந்து லோன் எடுக்கலாமாம், நீங்களும் வாங்கோவன்"

கடன் பெறலாம்...., அடைக்கலாம்..., இலகுகடன் வாங்கலாம், ஒண்டைப் போட்டு பத்தாக்கலாம், பத்தைப் போட்டு இருபது ஆக்கலாம், கட்டுப்பணத்துக்கு சாமான்களை வாங்கலாம். கட்டில் வாங்கலாம்... ரீ.வி வாங்கலாம்... கார் வாங்கலாம்... எத்தனை விதமான நிதி நிறுவனங்கள்? பணத்தை நீங்கள் வைப்புச் செய்தால் பரிசுப் பொருள்கள். கேற்றில்... குக்கர்...



இப்படிக் கனவுகள் விதைக்கப்படும்.

நாங்கள் போடும் பணத்துக்குப் பின்னால் என்ன இருக்கிறது? அன்று நாங்கள் வாங்கிய கடனை இன்று நினைத்தாலும் அது மறக்க முடியாத விசயமாக உள்ளது. இப்போது நாங்கள் அனைத்து வங்கிகளுக்கும் பிடித்தமான "மூத்த குடிமக்கள்" ஆகிவிட்டோம். பெற்ற பிள்ளைகள் உற்றம், சுற்றம் மறந்தாலும் வங்கிக்காரர்கள் எங்க ளுக்கு வாழ்த்துக்கள் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

"நாட்டுக்கு அளப்பரிய சேவை செய்து விட்டு இப்போது ஓய்வு எடுக்கிறீர்கள்... " (அடக் கடவுளே, காலையில் மரக்கறி வெட்டிக் கொண்டிருக்கின்றேன்)

"இப்போது நாங்கள் வீட்டுக்காக உங்களுக்கு இலகு கடன் திட்டத்தை முன்வைக்கிறோம், நீங்கள் முதலாளி ஆகலாம்... "

எத்தனை சலுகைகள். தேசிய அடையாள அட்டை மாத்திரம் கொண்டு வந்தால் போதும்.


ஆனந்தம்......!

வீட்டில்வங்கிகள், நிதி நிறுவனங்கள் அனுப்பிய கடிதங்கள். தெருவில் ஐஸ் பழ வண்டி பாடிக் கொண்டே போனது எம்.எஸ்.விஸ்வநாதன் பாட்டு

"உனக்கென்ன குறைச்சல் நீயொரு ராஜா
வந்தால் வரட்டும் முதுமை
வந்தால் வரட்டும் முதுமை"

பிறசர் குளிசையும், சலரோகக் குளிசையும் போட்டு விட்டு சாய்மனைக் கட்டிலில் சாய்ந்தேன்.

பாகம் 3





# யாழ் .மாநகர சபையின் வரலாறு

ந.பரமேஸ்வரன்

3.12.1917 ஆம் திகதியன்று நடைபெற்ற தேர்தலில் மூன்றாம் வட்டாரத்துக்கு சி.அருளம்பலம் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். முதலாம் வட்டாரத்துக்கு R.R.நல்லையாவும் ரெஜிஸ் ராஜகாரியரும் போட்டியிட்டனர். R.R.நல்லையாவுக்குக் கிடைத்த வாக்குகள் 399, ரெஜிஸ் ராஜகாரியருக்குக் கிடைத்த வாக்குகள் 208.

இரண்டாம் வட்டாரத்துக்கு நடைபெற்ற தேர்தலில் கனகசபை தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட ஆசைப்பிள்ளையை விட 41 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றியீட்டினார்.



6.2.1918 ஆம் திகதியன்று கதிரவேலு என்பவர் தமது மதுவரி ஆலோசனைக் குழு உறுப்பினர் (Excise Advisory Com mittee) பதவியை இராஜினாமாச்செய்ய, அவரது இடத்துக்குச் சட்டத்தரணி அருளம்பலம் நியமிக்கப்பட்டார்.

15.12.1918 ஆம் திகதியன்று யாழ்ப்பாண நகர்ப்பகுதிக்குரிய பொலிஸ் வரி, வீடுகள் கட்டிடங்களுக்கான வருடாந்த வரிமதிப்பீட்டின் 5% என அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டது.

3.12.1919ஆம் திகதியன்று நடைபெற்ற தேர்தலில் கிழக்கு வட்டாரத்துக்கு அருளம்பலம் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார். மேற்கு வட்டாரத்துக்கு K. கனகசபையும், M.ஆசைப்பிள்ளையும் போட்டியிட்டனர். கடைசி நேரத்தில் கனகசபை போட்டியி லிருந்து விலகுவதாக அறிவித்தார். வாக்குகள் எண்ணப்பட்டபோது ஆசைப்பிள்ளைக்கு 132 வாக்குகளும், கனகசபைக்கு 12 வாக்குகளும் கிடைத்தன. பழுதடைந்த வாக்குகள் 8. மத்திய வட்டாரத்துக்கு R.R.நல்லையாவும், S.கதிரேசுவும் போட்டியிட்டனர். நல்லையாவுக்கு கிடைத்த வாக்குகள் 265; கதிரேசுவுக்குக் கிடைத்த வாக்குகள் 107. இந்தத் தேர்தலில்தான் இரகசிய வாக்கெடுப்புப் பெட்டி உள்ளூராட்சித் தேர்தலில் முதல் தடவையாக அறிமுகம் செய்யப்பட்டது.

18.05.1921 ஆம் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில் உறுப்பினர் அருளம்பலம், மாநகர சபை அந்தஸ்து தேவை, குறைந்தது நகரசபையாவது தேவை எனத் தனிநபர் பிரேரணையொன்றைக் கொண்டு வந்தார்.

யாழ்ப்பாண உள்ளூராட்சி சபையில் அங்கத்தவர்களாக இருந்தவர்களின் புகைப்படங்களை வைத்திருப்போர் அவற்றை மின்னஞ்சல் மூலம் parames35@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தால் இந்த ஆவணம் பூரணமான ஒன்றாக அமையும்.



பொக்கிசன்

# திருவெம்பா

தெல்லிப்பழையில் விழிசிட்டிக்குப் பக்கத்திலை "பொற்கலந்தம்பை" எண்டொரு ஊர். அந்தப் பொற்கலந்தம்பையில இருக்கிற வைரவர் கோயில் கனகாலப் பழமையானது. அந்த வைரவர் கோயிலையும் , அதுக்குக் கிட்ட உள்ள கோயில்களையும் தொடர்புபடுத்தி வாய்மொழி மூலப் பாட்டொண்டும் இருக்கு.

"பொற்கலந்தம்பை புளியமரம் நிக்குதோ
ஆனைவிழுந்தான் அரசமரம் நிக்குதோ
சத்துருக்கன்வாய்க்கால் சனுக்கமரம் நிக்குதோ
உச்சலை நாச்சிமார் நட்ட கல்லு நிக்குதோ"

இந்தப் பாட்டை ஊரிலை இருக்கிற வயதான ஆக்கள் பாடுறவை.

இண்டைக்கு திருவெம்பா. ஆறு மணிக்கிடையிலை பூசை முடிக்க வேணும். மார்கழி முப்பத்தொரு நாளும் ஆறு மணிக்கிடையிலை பூசை முடிக்க வேணும். பித்தளைச் சருவச்சட்டியையும் பித்தளை அகப்பையையும், எடுத்துக் கல்லால் சுரண்டிக் .கழுவிவிட்டு, கப்பியால் தண்ணீரை அள்ளிக் கழுவி, மடப்பள்ளிக்குள் கொண்டுபோய் அடுப்பை மூட்டி விட்டு வந்து,.அபிஷேகம் பண்ணத் தொடங்கினேன்.

பொற்கலந்தம்பை வைரவர் கோயிற்கிணறு சரியான ஆழம். 'ஊசிலி' மிசினாலை இறைக்கேலாது. சில்லுப் பூட்டின பெரிய மிசினாலை தான் இறைக்க வேணும். அபிஷேகம் பண்ணுறதை அரைவாசியிலை விட்டிட்டுப் போய் அரிசியைக் கழுவி, மூண்டு தரம் அடுப்பைச் சுத்தி அரிசியைப் போட்டிட்டு வந்து, அபிஷேகம் பண்ணுவதைத் தொடர்ந்தேன்.

சுப்பிரமணிய வாத்தியார் (கோகிலா மகேந்திரனின் தந்தை) செருப்பைக் கையிலை தூக்கிக் கொண்டு சிவன் கோயிலுக்கு போறார். அவர்தான் சிவன் (நகுலேஸ்வரத்தில்) கோயிலிலை திருவெம்பா பாட்டு பாடுறது. கோயிலைக் கடக்கும் மட்டும் செருப்பைக் கையிலைதான் கொண்டு போறவர்; அதைச் சில பேர் நக்கலடிக்கிறவை. காலில போடுற செருப்புக்கு கோயில் வாசலிலை இவ்வளவு மரியாதையா எண்டு.

ஐயாம்மா (இப்போது அப்பம்மா) வாறா. இனி அவ புக்கையைப் பாத்துக்கொள்ளுவா. ஐயாம்மா பாவம், வயது போட்டுது. இப்பவும் குளிச்சு, சிவபூசை பண்ணாமல் ஒண்டும் செய்யமாட்டா. உபயகாரர் வந்து தட்டத்திலை வெத்திலை, பாக்கு பழத்தை அடுக்கிக்கொண்டிருக்கினம். ஒவ்வொரு பாட்டும் முடிய ஒவ்வொரு வெத்திலை, பாக்கு பழத்தை எடுத்து வைச்சுக் கற்பூரம் காட்ட வேணும். ஒரு கற்பூரக்கட்டியை நாலாய்ப் பிய்ச்சு பஞ்சாலாத்திக்கு வைக்க வேணும் (மக்களிடம் பணப்புழக்கம் குறைவாக இருந்தபடியால் ஒரு பைக்கெற் மட்டும் வாங்கி வருவார்கள்) இப்ப வாற கற்பூரம் எல்லாம் மெழுகுதான். அது எரிய மாட்டுது. சிறிமாவோ வந்தவுடனை கற்பூரம், சாம்பிராணி எல்லாத்துக்கும் தட்டுப்பாடு. விளைகற்பூரம் அல்லது நல்ல சாம்பிராணி வேண்டிறதெண்டா ஆரேன் இந்தியாவுக்கு போறவையிட்டைச் சொல்லி விட்டுத் தான் வாங்கிக்கவேணும்.

மேளம் வந்திட்டுது. இனிப் பூசை பண்ணலாம். இண்டைக்கு சங்கு ஊதத்தேவையில்லை; விடிஞ்ச பிறகு ஊதப்படாது; மார்கழி முப்பத்தொருநாளும் கோயிலிலை இருந்து, பன்னாலை பள்ளிக்கூடம் மட்டும் காலமையிலை சங்கு ஊதிக் கொண்டு சேமக்கலமும் அடிக்க வேண்டும்.

சங்கின்ரை சத்தமும், சேமக்கலச் சத்தமும்தான் அந்தத் திருவெம்பாவையை இன்னமும் மறக்கவிடாமல் செய்து கொண்டே இருக்குது.

# கிராமத்து மனிதர்கள்...

கிராமத்து மனிதர்கள் என்ற இந்தத் தொடர், தனித்துவமான கிராமத்து மனிதர்களை மீள நினைவுபடுத்துவதன் மூலமாக அருகிப்போன கிராமத்து வாழ்வின் செழுமைகளையும் சிறப்புக்களையும் வெளிக் கொண்டு வருகின்றது.

03

இராகன்



இன்றைய கம்பள வீதி" (காப்பற் றோட்) வருவதற்கு முன்னர் இருந்த சாதாரண தார் றோட்டுகளில் வண்டிச் சில்லுகள் ஓடியோடி ஆழப்பதிந்துபோன தடங்கள் வழிநீளத்துக்கு சமாந்தரக் கோடுகளாகக் கிடக்கும். அந்த வழித்தடத்தை வகிடெடுத்துவிட்ட பங்கு, இறப்பர் ரோதைகளைக் கொண்ட வாகனங்களைவிட, இரும்பு வளையமிடப்பட்ட மரத்தினாலான சில்லுகளைக் கொண்ட மாட்டுவண்டில்களுக்குத்தான் உரியது. கல்வீதிகளில் மாட்டுவண்டில்கள் போகும்போது எழும் மாடுகளின் குழம்பொலியும், சில்லுகளின் கடகட ஒலியும் அதிகாலை நான்கு மணிக்கே வீதியோரத்து வீடுகளில் உறங்கிக் கிடப்பவர்களுக்குத் திருப்பள்ளியெழுச்சியாக ஆகிவிடும்.

கிடுகு வண்டில், தென்னம்மட்டை வண்டில், மூரிமட்டை (பனையோலை மட்டை) வண்டில், அலம்பல்(வேலியடைக்கப் பயன்படும் உலர்ந்த அடர்சுள்ளி) வண்டில், குழை வண்டில், சட்டி பானை வண்டில், காட்டுவிறகு வண்டில், தென்னம்பொச்சு வண்டில், மண்ணெண்ணை வண்டில் என்று பலரகத்து மாட்டுவண்டில்களும் தார்வீதிகளில் சர்வசாதாரணமாக வலம்வந்த அந்தக் காலத்தில் "குத்தகைக்காரன் தம்புப்பிள்ளையின்" ஒற்றைத் திருக்கல் வண்டில் வீதியில் இறங்கிவிட்டால் அதுக்கு ஒரு தனிப் பவிசுதான்.

ஏரிபெருத்து கொழுப்பேறி மதர்த்துப்போன கொம்புசீவி வளர்த்தெடுக்கப்பட்ட நாம்பன்மாடு இழுத்துச் செல்லும் வண்டியில் மாட்டின் கழுத்தில் பொருத்தப்பட்ட வண்டியின் துலாவிடையே வட்ட வடிவில் அமைக்கப்பட்ட இருப்பிடத்தில்(சீற்) குத்தகைக்காரர் இருந்து பவனிவருவார். தடிப்பேறி இறுகிய வச்சிர உடம்பு, மார்பிலும் முதுகிலும் படர்ந்த உரோமக்காடு, அச்சுவேலித் தென்னைமர உயரம், கறுப்புக்கும் கபிலத்துக்கும் இடைப்பட்ட நிறம், கோவணம் தெரியும் வண்ணம் சண்டிக்கட்டுக்கட்டி வெகுசாதாரணமாகச் சிரைத்துவிடப்பட்டிருக்கும் வேட்டி, அகலமாக மடித்துத் தோளிலே போடப்பட்ட சால்வை, நெற்றியில் வெள்ளையடிக்கப்பட்ட திருநீற்றினுள் இலங்கும் பெரிய சந்தனப்பொட்டு, கண்ணில் மிதப்பெடுத்திருக்கும் ஒருவித அதிகாரப் பார்வை இவையெல்லாம் குத்தகைக்காரரை ஒரு குறுநில மன்னராகவே காட்டியது. மாட்டின் பின்னிரண்டு கால்களுக்கிடையே வாலுக்குக் கீழுள்ள பகுதியில் தன்னுடைய வலதுகாலைச் செலுத்தி மாட்டுக்குக் கூச்சங்காட்டி "கேய்" என்று துரத்தி மூசிக்கொண்டு ஓட வைப்பார். சில வேளைகளில் நாம்பனின் வாலைப்பிடித்து முறுக்கிச் சினங்கொள்ளவைத்து மூச்சிரைக்க பறக்க வைப்பார். நாம்பனின் கழுத்தில் கட்டிய சதங்கைகள் சல்சல்லென ஒலியெழுப்பும்போது பெருமையால் அவரது மார்பு விரிந்துயரும். குத்தகைக்காரரின் பவனியைப் பார்ப்பதற்கு வேலிப் பொட்டுகளிலெல்லாம் கண்கள் முளைக்கும்.

குத்தகைக்காரர் தம்புப்பிள்ளை என்றால் ஊரில் உள்ளவர்களிடத்தில் ஒருவித பயம்கலந்த மரியாதை. அந்தப் பகுதியின் தொழில்கள் அனைத்தையும் தனது அதிகாரத்தால் ஆளுகை செய்பவராக அவர் விளங்கிவந்தார். ஊரிலுள்ள பனங்கூடல்கள், தென்னந்தோப்புகள், வயற்காணிகள், தோட்டக்காணிகள் அனைத்திலும் பெரும்பங்கு குத்தகைக்காரரின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ்தான் இருந்தது. கொஞ்சம் "கீறு" உள்ள வேளைகளில் இந்த ஊரிலை எவன் தொழில் செய்யிற தெண்டாலும் என்னட்டைத்தான்ரா வரவேணும்" என்ற இறுமாப்பு வெளிப்படப் பேசுமளவிற்கு "பவர்" உள்ளவராக விளங்கினார். குத்தகைக்காரரின் சண்டித்தனம், அதிகாரம் என்பவற்றின் அடியாழத்தில் ஏழைகளுக்கு இரங்கும் ஊற்றொன்றும் ஒழிந்திருந்ததுதான் அவருக்கான மரியாதைக்கான அடிப்படை.

தென்னந்தோப்பு, பனங்கூடல், வயற்காணி, தோட்டக்காணி என்று பட்டியலிட்டவுடன் அவை எல்லாம் குத்தகைக்காரருக்குச் சொந்தமானது என்றுதான் எல்லோரும் எண்ணுவார்கள். அப்படி ஒன்றுமில்லை. காணிகளெல்லாம் தனிப்பட்ட ஒரு தனவந்தரின் முகாமையில் இயங்கும் கோயில்களின் பேரிலுள்ளவை. காலாதிகாலமாகக் "கோயில்காணிகள்" என்று வழங்கிவருபவை. "உடையாற்றை காணி" என்று சொல்லப்படும் வழக்கமும் உள்ளது.

கோயில் முகாமையாளர்(மனேச்சர்) முந்திய காலத்து உடையாரின்பேரன்தானாம். நமசிவாயம்பிள்ளை உடையாரின் பேரனார்தான் சண்முநாதன்பிள்ளை மனேச்சர். பரம்பரைக்கே சொத்துச் சேர்த்து வைத்தவர் உடையார்தான். மனேச்சருக்கு எங்கை , என்ன காணி கிடக்கெண்டே தெரியாது.

இந்தப் பகுதிக்கு தம்புப்பிள்ளையிடம் பொறுப்பளித்ததைப்போல, ஏனைய வெளியிடங்களுக்கும் தனித்தனி "அதிகாரிகளை" நியமித்து வைத்திருந்தார்.

"தம்பு என்ற சண்டியன் பிள்ளை" என்ற பின்னொட்டைச் சேர்த்துக்கொண்டது காணிக் குத்தகைக்குப் பொறுப்பான பின்னர்தான். சண்முகநாதன் பிள்ளை மனேச்சர் முன்னிலையில் மட்டும்தான் தம்புவின் முள்ளந்தண்டு முன்னோக்கிச் சற்று வளையும். தோளிலுள்ள சால்வை இறங்கும். "தம்பு என்ரை பிள்ளையடா..." என்று மனேச்சர் மற்ற ஆட்கள் மத்தியில் கூறும் தருணங்களில் தம்புவின் உடல் பாம்பாய் நெளியும். அதுவே கால நகர்வில் தம்புவை தம்புப்பிள்ளையாக்கியது. தான் சண்டியன் தம்புவாக இருந்த காலத்தைவிட "பிள்ளை" என்ற பின்னொட்டு வந்து சேர்ந்தது ஏதோவொரு "கிக்"கைத் தருவதாக அவர் உணர்ந்துகொண்டார்.

வருடாவருடம் வயல் விளைச்சல்களை அறுவடைசெய்வித்து வண்டில்களில் ஏற்றி மனேச்சர் வீட்டுக்கு அனுப்பிவைப்பார். பனங்காணிகளில் விழும் பனங்காய்களைப் பொறுக்கிச் சேர்த்துப் பாத்தி போட்டு விளையும் பனங்கிழங்குகளைக் கிண்டி ஒடியல், புழுக்கொடியல் போட்டு அனுப்பிவைப்பார். மூரிமட்டை, தென்னம்மட்டை, தென்னம் பொரச்சுகளை வண்டில்காரர்களுக்கு விற்று வரும் பணத்தை அனுப்பிவைப்பார். தோட்டக் காணிகளில் விவசாயம் செய்பவர்களிடம் குத்தகைப் பணத்தைப் பெற்று மனேச்சரிடம் சேர்ப்பிப்பார். தோப்பில் நிற்கும் பனை தென்னைகளில் சீவல் தொழில் செய்பவர்களிடம் குத்தகைப் பணத்தை வசூலித்து அனுப்பிவைப்பார். இவற்றுக்காகத் தம்புவைச் சூழ எப்போதும் ஒரு தொழிலாளர் பட்டாளமே நிற்கும். எவருக்கு எதைக் கொடுப்பது, எவரிடம் எதை வாங்குவது என்பதை தம்புப்பிள்ளையே தீர்மானித்திருந்தார்.

குத்தகை பார்க்கும் பனங்கூடல் ஒன்றின் நடுவில்தான் தம்புவின் "அரண்மனை" அமைந்திருந்தது. பனையோலையால் வேயப்பட்ட சிறுகுடில் மண்வீடு. மனைவியும் வளர்ப்பு மகளும் தான். மாதத்தில் ஒருமுறையேனும் கிடாயடித்துப் பங்குபோட்டு வயல்களிலும் தோப்புகளிலும் கூலிகளாய் வேலை செய்பவர்களை வரவழைத்து பனையோலையில் "குடலை" கட்டிக் கொடுத்தனுப்புவார். அந்த வேளைகளில் கூலிக்காரர்களின் முகங்களில் தோன்றும் சந்தோசத்தைப் பார்த்து மனம் நிறைவார். காணிகளின் வருமானம் மனேச்சர் வீட்டுக்கு மாதம் தவறாது போவதைப் போலவே, வேலையாட்களின் கூலிகளும் நாள் தவறாது கையில் சேரும். அவ்வளவு நேர்மை. குத்தகைக்காரர் தம்புப்பிள்ளையின் "மிடுக்கு" அந்தப் பகுதியில் பலரது வீடுகளில் தொடர்ச்சியாக அடுப்பெரிய காவலரணானதை எல்லோரும் உணர்ந்திருந்தனர்.

தம்புப்பிள்ளை நாளாந்தம் முற்பகல் பிற்பகல் "சொல்விளம்பி"த் தாகத்தை நிரந்தரமாய்த் தீர்க்க நிலைத்த ஏற்பாடாக தன்னுடைய வளர்ப்பு மகளை குத்தகைப் பனையில் சீவலுக்கு வரும் இளைஞன் ஒருவனுக்குக் கலியாணம் முடித்துக்கொடுத்து பனந்தோப்பில் புதிய சிறுகுடில் ஒன்றைப் போட்டுக்கொடுத்து கூடவே வைத்துக்கொண்டார். கலியாணம் இலந்தையடி வைரவருக்கு முன்னாலை நடந்தபோது, மனேச்சரும் வந்திருந்தார் என்பது ஊரில் மறக்கவொண்ணா வரலாற்றுத் தகவலாக நிலைத்துவிட்டது.

காலவோட்டத்தில் தம்புப்பிள்ளை வசித்து வந்த அந்தப் பனங்கூடல் காணியினுள் பல சிறு குடில்கள் அமைக்கப்பட்டு அந்த வீடுகளுக்கு எல்லை வேலிகளும் போடப்பட்டுவந்தன.

வரலாற்றுப் படை 3

# மத்திய கல்லூரியிலிருந்து பிரிந்து உருவானதே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி



தில்லைநாதன் கோபிநாத்

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 1816ஆம் ஆண்டு வெசுலியன் மிசனரிமாரால் தொடங்கப்பட்ட பாடசாலை ஆகும்.**

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே ஒரு பாடசாலையைத் தொடங்குவது என்பது, ஒரு நிறுவனத்தைத் தொடங்கி அறிவித்தல் கொடுத்து ஒரு நாளில் தொடங்கும் காரியமல்ல. நம்பகமான ஆசிரியர் அல்லது ஆசிரியர் குழு இருந்து அவர்களின் பின்னர் சமூகம் திரண்டு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் மாணவர்களைச் சேர்த்தால் மட்டுமே ஒரு பாடசாலையை உருவாக்க முடியும்.

மேலும், ஓர் ஆங்கிலப் பாடசாலையைத் தொடங்குவது என்றால் ஆங்கிலத்தில் நல்ல புலமையுள்ள ஆசிரியர்களின் உதவியுடன் மட்டுமே அது சாத்தியமாகும். அந்தக் காலத்தில் ஆங்கிலப் புலமை கொண்டிருந்தோர் மிசனரி மாரின் பாடசாலைகளில் கல்வி கற்றவர்களே. மிசனரிப் பாடசாலைகளில் கல்வி கற்றபோது அவர்களுக்கு ஆங்கிலப் பெயர்கள் வழங்கப்பட்டன.

கிறித்தவ மதக்கல்வி புகட்டப்பட்டது. பலர் கிறித்தவர்களாக மதம் மாறினர். இவ்வாறு பாடசாலைக் காலத்தில் மதம் மாறியோர், பாடசாலைக் காலத்தின் பின் தமது மூதாதையரின் மதத்துக்குத் திரும்பிய சம்பவங்களும் நடந்தன. கரோல் விசுவநாதபிள்ளை, சி. வை. தாமோதரம்பிள்ளை ஆகியோர் அத்தகையவர்கள்.

ஆனால், மிசனரியில் ஆங்கிலக் கல்வி கற்று, அதன்பின் ஆசிரியப் பணியினைத் தொடர்ந்தோர் வேலை செய்யக் கூடிய இடங்களாக மிசனரிப் பாடசாலைகளே இருந்தன. அத்தகைய மிசனரிப் பாடசாலைகளில் ஆசிரியராகத் தொடரும் ஒருவரால் தமது பழைய மதத்துக்குத் திரும்புவது சாத்தியமில்லை. அந்தவகையில் ஆங்கிலப் புலமையுள்ள ஆசிரியர்கள், அப்போது கிறித்தவர்களாக இருப்பதே சாத்தியமானது.

ஒரு நம்பகமான கிறித்தவ ஆசிரியரும் அவரை நம்பிச் செல்லக்கூடிய மாணவர் குழாமும் இருந்தால் மட்டுமே விரைந்து பெரியதாக வளரக்கூடிய ஆங்கிலப் பாடசாலை ஒன்றினை உருவாக்க முடியும். அவ்வாறு இல்லாமல் தொடங்குவது என்றால், பழைய திண்ணைப் பள்ளிக்கூடங்கள்போல் தொடங்கிப் படிப்படியாக வளர்த்தெடுப்பதே சாத்தியமாகி இருக்கும்.

அதாவது, ஒரு சைவசமயப் பாடசாலையை உருவாக்க வேண்டும் என்றால் கூட, ஒரு கிறித்தவ ஆசிரியர் இல்லாமல் அது சாத்தியமாகி இராது. ஆறுமுகநாவலரின் ஆங்கிலப் பாடசாலை தொடங்கும் முயற்சிகூட, ஒரு கிறித்தவ ஆசிரியருடனேயே சாத்தியமானது என்பதனையும் இங்கு குறிப்பிட வேண்டும். அந்த வகையில் வில்லியம் நெவின்ஸ் என்ற சிதம்பரப்பிள்ளை எடுத்த முயற்சி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியாக மாறியமை இயல்பானது, தவிர்க்க முடியாதது.

1820ஆம் ஆண்டில் பிறந்த சிதம்பரப்பிள்ளை 1828இல் மிசனரி ஆரம்பப் பாடசாலையில் சேர்ந்து, பின்னர் 1832இல் வட்டுக்கோட்டை செமினறி மாணவரானார். பாடசாலைக் காலத்தில் கிறித்தவராகிய இவர், 1838இல் கல்வியை முடித்து அரங்கேறினார். அதன் பின்னர் மிசனரியினரின் ஆரம்பப் பாடசாலைகளில் ஆசிரியராக விளங்கி, 1846இல் வட்டுக்கோட்டை செமினறியில் ஆசிரியரானார். 1856 இல் வட்டுக்கோட்டை செமினறி மூடப்பட்டதைத் தொடர்ந்து ஆசிரியப் பணியிலும், அகராதிப் பணிகளிலும் 1860 வரை ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 1816ஆம் ஆண்டில் வெசுலியன் மிசனரிமாரால் தொடங்கப்பட்ட பாடசாலை ஆகும். அப்போது அது யாழ்ப்பாணம் ஆங்கிலப் பாடசாலை என்ற பெயரில் இருந்தது. பின்னர் யாழ்ப்பாணம் மத்திய பாடசாலை ஆனது. 1860இல் தமிழ்நாட்டில் தங்கியிருந்து வின்சுலோ அகராதிப் பணிக்கு உதவிக் கொண்டிருந்த காலத்தில், சிதம்பரப்பிள்ளை யாழ்ப்பாணம் மத்திய பாடசாலைக்குத் தலைமை ஆசிரியர் பதவி வழங்கப்பட்டு மீண்டும் ஆசிரியப் பணியில் இணைந்தார்.

சிதம்பரப்பிள்ளையின் தலைமையில் குறிப்பிடத்தக்க கல்வி சாதனைகள் நடந்தேறின. பாடசாலை, கல்லூரித் தரத்தினையும் எய்தியது. 1860 முதல் 1886 வரை 26 ஆண்டுகள் சிதம்பரப்பிள்ளை மத்திய கல்லூரியின் அதிபராக இருந்தார். யாழ்ப்பாணத்தில் மிகவும் மதிக்கப்பட்ட, போற்றப்பட்ட கல்வியியலாளராக அவர் இருந்தார்.



நாகலிங்கம்

1886இல் தனது 66ஆவது வயதில் மத்திய கல்லூரியிலிருந்து விலகி, மத்திய கல்லூரிக்கு அருகிலேயே இன்னொரு பாடசாலையை அவர் தொடங்கினார். அவர் தொடங்கியபோது அது ஒரு சைவப் பாடசாலையாக இருக்கவில்லை. சைவப் பாடசாலையைத் தொடங்கும் நோக்கம் அவருக்கு இருந்தது என உறுதிப்படுத்தக்கூடிய தகவல்களும் இப்போது இல்லை. மிசனரிகளிடமிருந்து விலகி ஒரு பாடசாலையைத் தொடங்கியமை ஒரு முக்கிய திருப்பமாக அமைந்தது.

"1886இல் தமது பிரபலமான தலைமை ஆசிரியர் வில்லியம் நெவின்ஸ் பாட சாலையை விட்டு விலகியதைத் தொடர்ந்து பாடசாலை மாணவர் தொகை பெருமளவில் வீழ்ச்சியடைந்ததையும் பல வகுப்புக்கள் வெறுமையாக இருந்ததையும்" மத்திய கல்லூரி நூற்றாண்டு மலர் பதிவு செய்துள்ளது.

சிதம்பரப்பிள்ளை மத்திய கல்லூரித் தலைமை ஆசிரியராக இருந்த காலத்தில், அவருக்குக் கீழ் பணியாற்றிய ஆசிரியரே கோட்மன் அப்பாப்பிள்ளை என்பதனை மத்திய கல்லூரியின் நூற்றாண்டு மலர் பதிவு செய்துள்ளது. மாணவர்களுடன் ஆசிரியர்களும் சேர்ந்து சென்றதையே கோட்மன் அப்பாப்பிள்ளை இந்துக் கல்லூரியின் தலைமை ஆசிரியர் ஆனமை விளக்கி நிற்கிறது.

இப்போதைய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வரலாற்றில் முதலாவது அதிபராக இருந்தவர் எனக் குறிப்பிடப்படும் கோட்மன் அப்பாப்பிள்ளை உண்மையில் இந்துக் கல்லூரியின் தலைமை ஆசிரியராக மட்டுமே இருந்தார். முதலாவது அதிபர் செல்லத்துரை என்ற தகவல் 1910ஆம் ஆண்டுக்கான இந்துக் கல்லூரி கலண்டரில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கோட்மன் அப்பாப்பிள்ளை தலைமை ஆசிரியராக இருந்தார் எனில் அதிபராக இருந்தவர் சிதம்பரப்பிள்ளை அன்றி வேறு எவராக இருக்க முடியும்?

மேலும், சிதம் பரப்பிள்ளை மத்திய கல்லூரியில் தலைமை ஆசிரியராக இருந்தபோது அவரது மாணவராக இருந்தவர் நாகலிங்கம். சிதம்பரப்பிள்ளை கணிதத்தில் சிறந்த ஆசிரியராக இருந்தார். நாகலிங்கம் கணிதத்தில் சிறப்புச்சித்தி பெற்ற மாணவராக இருந்தார். இந்த நாகலிங்கமே சிதம்பரப் பிள்ளை உருவாக்கிய பாடசாலைக்குப் பிற்காலத்தில் நிதியுதவி புரிந்தார். சிதம்பரப் பிள்ளையின் மறைவின் பின்னர் பாடசாலையைக் கையேற்றார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முதலாவது நிர்வாகக் குழுவில் இருந்த சபாபதியும் சிதம்பரப்பிள்ளையின் மாணவரே. அந்த வகையில் மத்திய கல்லூரியில் இருந்து பிரிந்த பாடசாலையே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்பதனையும், அவ்வாறு பிரித்து உருவாக்கிய முதலாவது அதிபர் சிதம்பரப்பிள்ளை என்பதையும், சிதம்பரப்பிள்ளை, தான் தொடங்கிய பாடசாலையைத் தனது மாணவரிடம் ஒப்படைத்தார் என்பதனையும் நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகிறது.

---

## மறம்



அம்பு, வில், வேல், ஈட்டி,
அதன்பின் வாள், துப்பாக்கி,
குண்டுகள், விச வாயு,
ஏவுகணை, அணுகுண்டு,
என்று பரிணாம வளர்ச்சி
பெற்றுக் கூர்ப்படைந்த
ஆயுதங்கள்....
இன்று அடுத்த படி தாண்டி
மானுடம் முழுதையும்
மண்ணுள் புதைக்கவல்ல
உயிரியல் ஆயுதங்கள் ஆகி
உருமாறி வந்து
மயிரைப் பிடுங்கும் நொடிமணித்
துளியுள்ளே
இலட்சோப இலட்சம்
உயிர்களை இரையாக்கும்!
நிலம், காற்று, வானின் ,
நீரினதும் உயிர் பறிக்கும்!
வல்லரசர் நாமென்று மார்தட்டும்
பாதகரின் சல்லிக் குடுவைக்குள்
சத்தமின்றி நோய்க்கிருமி
பள்ளிகொள்ளும்;
சிலதே கசிந்து பரவினாலும்
உள்ளே எது நடக்கு
தென்றுணரும் முன்
மண்ணில்
யார் எவர்கள் என்று பார்க்காமல்
உயிரழிக்கும்!
முகமூடிக் கவசங்கள் மூச்சை
எத்தனை நாள் காக்கும்?
பகலிரவு பாராமல் பாழ்க் கிருமி
பாய்ந்து தாக்கும்!
"யாருக்கோ என்றாய்ந்து வைத்தவை
தமக்கு எமன்
ஆகுமென யார் நினைத்தார்?
அழிவை எவர் உணர்ந்தார்?
வினையை விதைத்தவர்கள்
விளைந்து இன்று வரும் கொடிய ..
வினையை அறுக்கின்றார்!
விஞ்சுபுவிப் பசி தணிக்கத்
தினை விதைக்கத் தெரியாத திக்கரசர்
வரலாற்றின் கனவுகளை நனவிலின்று
கருக்கி எரிக்கின்றார்!

– த.ஜெயசீலன்

# 13 ஐ ஒழிப்பதே கோத்தாவின் நோக்கம்!

புளொட் அமைப்பின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான **தர்மலிங்கம் சித்தார்த்தன்**, சமகால அரசியல் நிலை குறித்து 'சஞ்சீவிக்காக' வழங்கிய பிரத்தியேக நேர்காணல் இது.



சந்திப்பு ஏ.ஏ.

**கே: எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உங்களது கட்சி சார்பில் நீங்களும், மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபனும் களமிறங்கவுள்ளீர்கள் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. கஜதீபனுக்கு ஆசனம் வழங்கியமை தொடர்பில் தங்கள் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அதிருப்தியடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. உங்களது கட்சிக்குள் என்னதான் நடக்கின்றது?**

ப: கஜதீபன் கடந்த 6 ஆண்டுகளாக கட்சிக்காக விசுவாசமாக வேலை செய்கின்றார். மக்கள் மத்தியில் அவருக்குச் செல்வாக்கு இருக்கின்றது. அவரை நியமிப்பதில் எந்தத் தவறும் இல்லை. அண்மையில் எமது கட்சியின் நெருங்கிய ஆதரவாளர்களுடனான கூட்டம் எனது வீட்டில் நடைபெற்றது. கஜதீபனது பெயரை எல்லோரும் ஏகமனதாகப் பிரேரித்தார்கள். இதற்கு மத்திய செயற்குழுவின் அனுமதியைப் பெற்றுக் கொள்வோம். கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அனைவரும் என்னிடம் தனிப்பட்ட முறையில் கஜதீபனையே நியமிக்குமாறு கோரியுள்ளார்கள்.

## பேசுவது மட்டுமே வேலையல்ல!

**கே: 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் ஒரு தடவை மாத்திரமே நீங்கள் பேசியதாக, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் மதிப்பீடு செய்யும் இணையத்தளம் தகவல் வெளியிட்டிருந்தது. உங்களுக்கு பேசுவதற்கு நேரம் ஒதுக்கித் தரப்படவில்லையா? அல்லது நீங்கள் பேசுவதைத் தவிர்த்துக் கொண்டீர்களா?**

ப: நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு நாடாளுமன்றத்தில் பேசுவது மாத்திரம்தான் கடமையல்ல. நாடாளுமன்றத்துக்குள்ளேயே வெவ்வேறு கடமைகள், சபா மண்டபத்துக்கு வெளியில் உள்ளன. அரசமைப்பு பேரவையின் நடவடிக்கைக் குழுவால் நியமிக்கப்பட்ட 6 உபகுழுக்களில் ஒரு குழுவின் தலைவராக இருந்து, அந்தச் செயற்பாடுகளைச் செய்தேன். நாடாளுமன்றத்தில் உள்ள வேறு குழுக்களிலும் செயலாற்றினேன். உதாரணமாக, உயர் பதவிகளுக்கான தெரிவுக்குழுவில் செயலாற்றுகின்றேன்.

இவற்றுக்கு மேலாக நாடாளுமன்றத்தில் பேச நேரம் ஒதுக்குவது, நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தே அமையும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒவ்வொரு விவாதத்திலும் சராசரியாக 45 நிமிடங்கள் ஒதுக்கப்படும். இந்த 45 நிமிடத்தை 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும், இப்போது 14 உறுப்பினர்களும் தம்மிடையே பங்கிட வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் முக்கியமான விடயங்களில் பேசுவதற்கு விரும்பி நேரம் கேட்பது வழக்கம். அப்போது சம்பந்தன் அண்ணையும், சேனாதி அண்ணை போன்றவர்களும் அதில் பேசுகின்றபோது அவர்கள் மேலதிகமான நேரங்களை எடுத்துவிடுவார்கள். எங்களுடைய நேரங்கள் வெட்டப்படும். அப்படியான நேரங்களில் பேசுவதற்குச் சந்தர்ப்பம் இல்லாமல் போயுள்ளது.

ஒரே ஒரு தடவை பேசியது என்ற விடயம் 2019ஆம் ஆண்டில் மாத்திரம் சொல்லப்படுகின்றது. அந்த ஆண்டு நாடாளுமன்றத்தில் மிகக் குழப்பம் நிறைந்த ஆண்டாகவும், இரண்டு அல்லது மூன்று தடவைகள் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட ஆண்டாகவும் அமைகின்றது.

நாடாளுமன்றத்தில் 1994ஆம் ஆண்டிலிருந்து நான் பேசிய விடயங்கள், எத்தனை தடவை பேசியிருக்கின்றேன் என்பவற்றை எடுத்துப் பார்த்தால் நாடாளுமன்றத்தில் எனது பங்களிப்பின் முக்கியத்துவம் தெரியும். வசதியாக இருந்தால், நான் அவற்றை எடுத்து விரைவில் வெளியிடுவேன்.

## புலிகள் தடுத்தார்களா?

**கே: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டுகளின் பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகளுடனான ஆயுதப் போர் முடிவுக்கு வந்த பின்னரே கூட்டமைப்பில் புளொட் இணைந்து கொண்டது. கூட்டமைப்பில் நீங்கள் இணைவதை தமிழீழ விடுதலைப் புலிகள் தடுத்திருந்தார்களா?**

ப: நிச்சயமாக இல்லை. 2004ஆம் ஆண்டு தேர்தலில் கூட்டமைப்பில் இணைந்து போட்டியிடுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு எங்களிடம் கோரினர். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டம்மானின் நேரடிப் பிரதிநிதி, எங்கள்கட்சியின் ஆர்.ஆர். (ராகவன்) உடன் வவுனியாவில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

" இப்போதுள்ள சமாதான ஒப்பந்தம் விரைவில் உடைந்து பெரும் அழிவு ஏற்படும். அந்த அழிவில் நாங்கள் பங்கேற்கத் தயாரில்லை. ஆனால் உங்கள் போராட்டத்துக்கு நாங்கள் பங்கம் ஏற்படுத்த மாட்டோம்" என்று தெரிவித்திருந்தோம்.

இதேவேளை அந்தக் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்த சிலர் நாங்கள் கூட்டமைப்பில் இணைந்து போட்டியிடுவதை கடுமையாக எதிர்த்திருந்தார்கள். விடுதலைப் புலிகள் ஒரு தடவை பேசிவிட்டு பின்னர் பேசாமல் இருந்ததுக்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

**கே: யார் எதிர்த்திருந்தார்கள்?**

ப: அவர்களின் பெயரைக் கூற விரும்பவில்லை. அதனைக் கூறி குழப்பத்தை உருவாக்க விரும்பவில்லை. நாங்கள் கூட்டமைப்பில் போட்டியிட்டால் தங்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்று கருதிய சிலரே அவ்வாறு செயற்பட்டார்கள்.

**கே: அப்படியானால் 2011ஆம் ஆண்டு கூட்டமைப்பில் இணைந்த போது அதனை எவரும் எதிர்க்கவில்லையா? உங்களை இணைப்பதில் எதிர்ப்பு இருக்கவில்லையா?**

ப: 2011ஆம் ஆண்டுச் சூழலைப் பார்க்கவேண்டும். நாங்கள் வெளியே நிற்பதால் ஒற்றுமையைக் குழப்பிக் கொண்டிருப்பதாக இருக்கக் கூடாது. விடுதலைப் புலிகளின் அழிவுக்குப் பின்னர் தமிழ் மக்கள் மிகப் பலவீனமான நிலைக்குத் தள்ளப்பட்ட போது நாங்கள் இணைவது நல்லது என்று பலரும் கூறினார்கள். கூட்டமைப்பிலிருந்த பங்காளிக் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட பலர் நேரடியாக என்னுடன் பேச்சு நடத்தினார்கள். அவர்களும் நிபந்தனைகளை விதிக்க வில்லை. நாங்களும் நிபந்தனைகளை விதிக்கவில்லை. இணைந்து கொண்டோம்.

## அழிவு பற்றிய ஆரூடம்

**கே: சமாதான உடன்படிக்கை முறிவடைந்து பெரும் அழிவு நிகழும். அதில் நாங்கள் பங்கேற்க விரும்பவில்லை என்று எந்த அடிப்படையில், புலிகளின் பிரதிநிதிகளுக்கு கூறியிருந்தீர்கள் ?**

ப: பங்கேற்கவில்லை என்பதன் அர்த்தம் பொறுப்பேற்க விரும்பவில்லை. இன்றைய இந்த அழிவில் எல்லோருக்கும் பொறுப்பு இருக்கின்றது. மறைமுகமாக நாங்களும் பொறுப்புத்தான். அதை மறுக்கமாட்டேன். ஆயுத இயக்கங்களாக இயங்கியவர்கள், சாத்வீக வழியில் இயங்கியவர்கள் அனைவரும் பொறுப்பு. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மாத்திரம்தான் பொறுப்பு என்று சொல்லிவிட்டு எவரும் செல்ல முடியாது.

சமாதான உடன்படிக்கைக் காலத்தில் இரண்டு தரப்புக்களும் தங்களைப் பலப்படுத்துவதை நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தோம். இது மக்களுக்கு ஆபத்தான நிலையை உருவாக்கும் என்பதை புலிகளின் பிரதிநிதிகளுக்கு விளங்கப்ப டுத்திக் கூறினோம்.

அரச தரப்பின் ஆயத்தங்களை எங்களால் ஊகிக்கக் கூடியதாக, அறியக் கூடியதாக இருந்தது. அதே நேரத்தில் சர்வதேச ரீதியில் புலிகளுக்கு எதிரான முனைப்பு இருந்தது. போரில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் என்று சகல நாடுகளும் இலங்கை அரசுக்கு ஆயுதங்களைக் கொடுத்து உதவியிருக்கின்றார்கள். புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறியிருக்கின்றார்கள். அந்தக் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் 11 ஆயுதக் கப்பல்கள் அழிக்கப்பட்டன. அந்தக் கப்பல்களை அழிப்பதற்கான உளவுத் தகவல்களைக் கொடுத்தது மாத்திரமல்ல, அவற்றை அழிப்பதற்கு வெளிநாடுகள் உதவியதாக நாங்கள் இப்போது அறிகின்றோம். இப்படியான ஆபத்துக்கள் இருக்கின்றன என்பதை முன்கூட்டியே கூறியிருந்தோம். நாங்கள் கூறியதை புலிகள் அலட்சியமாக எடுத்துக் கொண்டார்கள். காற்றுப் புக முடியாத இடத்திலும் நாங்கள் புகுவோம் என்று பொட்டமானின் பிரதிநிதி எங்களுக்குச் சொல்லி விட்டுச் சென்றார். புலிகள் மாத்திரமல்ல, தமிழ் மக்களுடைய சாபக்கேடே, எங்களை நாங்களே மிகைப்படுத்திக் கொள்வதுதான்.

## கோத்தாபயவைப் பற்றி புலிகளுக்கு எச்சரித்தோம்

**கே: சமாதான ஒப்பந்த காலத்தில் அரசு தன்னைப் போருக்குத் தயார்படுத்திக் கொண்டிருந்தது என்று கூறியிருந்தீர்கள். அரச தரப்பு சமாதான ஒப்பந்தத்தில் இதயசுத்தியுடன் செயற்படவில்லையா?**

ப: அரச தரப்பு இதயசுத்தியுடன் செயற்படவில்லை. பேச்சுக்களில் ஒரு முன்னெடுப்புக் கிடையாது. இழுத்தடித்துச் சென்றார்கள். விடுதலைப் புலிகளின்



முக்கியமான பின்னடைவுக்குக் காரணம் 2005ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல்.
2005ஆம் ஆண்டுக்கு முன்னர் நடைபெற்ற போர்களின்போது இராணுவம், விமானப் படை, கடற்படை ஆகியவற்றுக்கு இடையில் ஒருங்கிணைவு, தகவல் பரிமாற்றம் என்பவை இருக்கவில்லை. 2005ஆம் ஆண்டு ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக் ஷ தெரிவு செய்யப்பட்ட பின்னர், பாதுகாப்பு அமைச்சின் செயலராக கோத்தாபய பொறுப்பேற்றுக் கொண்டார். அவர் முப்படைகளையும் ஒருங்கிணைத்தார். அவருக்கு அதற்கான முழு அதிகாரமும் இருந்தமையால், அதனைச் செய்ய முடிந்தது. செய்துவிட்டுச் சொல்லலாம், சொல்லிவிட்டும் செய்யலாம் என்ற நிலைமை அவருக்கு இருந்ததால், இவற்றைத் தடையின்றிச் செய்தார். அப்போதும்கூட புலிகளுக்குச் சொன்னோம். "மிக அலட்சியமாக எடுக்காதீர்கள். கோத்தாபய வந்திருக்கின்றார். அவரும் உங்களைப் போன்ற (புலிகள்) சிந்தனையில் இருக்கின்றார். போர்தான் என்ற ஒற்றைச் சிந்தனையில் மாத்திரமே இருக்கின்றார்" என்று சொன்னோம்.

**கே: அப்படிப்பட்ட ஒருவர் இப்போது ஜனாதிபதியாகியிருக்கின்றார். இனி என்ன நடக்கப் போகின்றது?**

ப: அவர் ஒரு விடயத்தில் மிகத் தெளிவாக இருக்கின்றார். அதிகாரப் பரவலாக்கம் தேவையில்லாத விடயம். அவருடன் நான் அன்று தொடக்கம் கதைத்து வந்ததிலிருந்து தெரிந்த விடயம். மற்றையது சிறிய நாட்டுக்குள் இவ்வளவு அரசியல் கட்சிகள் தேவையில்லை. இரண்டு மூன்று கட்சிகள் மாத்திரம் இருந்தால் போதும் என்ற நிலைப்பாடும் அவருக்கு இருக்கின்றது.
அவர் சிறந்த சிங்களத் தேசியவாதி. சிறுபான்மையினர் இந்த நாட்டில் வாழட்டும். அவர்களுக்குத் தேவையான அபிவிருத்திகளைச் செய்தால் சரி. இந்தச் சிந்தனை கோத்தாபயவுக்கு மாத்திரமல்ல, பல சிங்களத் தலைவர்களுக்கு இருக்கின்றது. சிங்களத் தேசியவாதம் இருப்பதில் பிழையில்லை. எப்படி எங்களுக்கு தமிழ்த் தேசியவாதம் இருக்கின்றதோ, அதேபோன்று அவர்களுக்கு சிங்களத் தேசியவாதம் இருக்கின்றது. ஆனால், எங்களை ஆக்கிரமிக்கின்ற தேசிய வாதமாக அது இருக்கக் கூடாது. எங்களைத் தாக்குகின்ற நிலைமைக்கு வரக்கூடாது. அவர்கள் எங்களின் சுதந்திரத்தைப் பறிக்கின்ற நிலைப்பாடு களைத்தானே எடுக்கின்றார்கள்.

## சிறுபான்மையினருக்குச் சாதகமாக கோத்தாபய செயற்படார்

**கே: ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் கோத்தாபய மீது தமிழ் மக்களுக்கு இருந்த பயம் குறைவடைந்து செல்கின்றதா? கோத்தாபயவின் நிர்வாகம் சார் அதிரடி நடவடிக்கைகளால் அவரை ஏற்றுக் கொள்ளும் போக்கு ஏற்படுகின்றதா?**

ப: நிர்வாக ரீதியாகவும், பாதுகாப்பு ரீதியாகவும் அவர் திறமாகச் செயற்படுவார் என்று நான் முன்னரே எதிர்பார்த்தேன். சிறுபான்மையினருக்குச் சாதகமான அரசியல் நடவடிக்கையை அவர் எடுக்க மாட்டார். 70ஆண்டுகளாக தமிழ் மக்கள் சமஷ்டிக்கும் அல்லது தனிநாட்டுக்கும் ஆதரவு கொடுத்துள்ளார்கள். தமிழர்களுக்கு நிர்வாகம் வேண்டும், பாதுகாப்பு வேண்டும் எல்லாம் வேண்டும். அதற்கு முதன்மை கொடுக்கமாட்டார்கள். அரசியல் தீர்வுக்குத்தான் முதன்மை கொடுத்திருந்தார்கள், கொடுக்கின்றார்கள். வடக்கு கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளும் அதிகாரப் பகிர்வைப் பற்றிக் கதைத்திருக்கின்றன. மக்கள் நூறுவீதம் அதிகாரப் பகிர்வுக்காகத்தான் வாக்களிக்கின்றார்கள்.

**கே: இந்தப் போக்கில் கோத்தாபய சென்று கொண்டிருந்தால், எதிர்காலத்தில் அவர் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்றால், அவரை எப்படிக் கையாளப் போகின்றீர்கள் ?**

ப: நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவர்களுக்கு கிடைக்கும் என்று நான் நம்பவில்லை.
அவர் தப்பித்தவறி அவ்வாறு பெற்றால், மிகப் பெரிய ஆபத்து இருக்கின்றது. தமிழர்களுக்கு மாத்திரமல்ல, சிங்கள புத்திஜீவிகள், சிவில் சமூகத்தவர்களுக்கும் ஆபத்து இருக்கின்றது.
தமிழர்களுக்கான தீர்வில் அக்கறை கொண்ட சிங்கள சிவில் சமூகத்தினர் என்னிடம் பேசும்போது, தீர்வைப் பற்றி கோத்தா தரப்பு அக்கறையில்லாமல் இருக்கின்றது. அவர்கள் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்றால், 13ஆவது திருத்தச் சட்டத்தையே, மாகாண சபை முறைமையையே இல்லாமலாக்கும் நிலைப்பாட்டை எடுக்கலாம்.
கோத்தா என்ன நினைக்கின்றாரோ தெரியவில்லை. ஆனால் அவரைச் சுற்றி உதய கம்பன்பில, விமல் வீரவன்ச போன்றவர்கள் இருக்கின்றார்கள். இராணுவத் தளபதிகள் இருக்கின்றார்கள். அவர்கள் கோத்தாபய 13ஆவது திருத்தத்தை ஒழிக்கும் விடயத்தை முன்னெடுக்க ஊக்குவிக்கலாம். இந்த ஆபத்தை எனக்கு முதன் முதலில் சொன்னதே சிங்களப் புத்திஜீவிகள்தான்.
ஆனால், மஹிந்த அரசியல்வாதி. அவருக்கு சர்வதேச அழுத்தங்ளைப் பற்றி நன்றாகத் தெரியும். முக்கியமாக 13ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்வது இந்தியாவுடன் எவ்வளவு பெரிய பிரச்சினையை உருவாக்கும் என்பதும் அவருக்குத் தெரியும்.

## கூட்டமைப்பு தனியே தேர்தலுக்கான கூட்டா?

**கே: கூட்டமைப்புக்குள் தேர்தல் காலங்களில் பூதாகாரமாக பிரச்சினைகள் வெடிக்கின்றன. தேர்தல் காலங்களில் சில அரசியல் கட்சிகள் கூட கூட்டமைப்பிலிருந்து வெளியேறியிருக்கின்றன. அப்படியானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெறும் தேர்தலுக்கான அரசியல் கூட்டா?**

ப: தேர்தல் காலங்களில் பிரச்சினைகள் எழுவதற்குக் காரணம் உண்டு. கூட்டமைப்பு கட்சியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தால், இப்படியான பிரச்சி னைகள் எழாது. தனித்தனியாக கட்சியாக இருக்கின்றோம். தனித் தனிக் கட்சிகளாக இருக்கின்றபோது, நாங்கள் ஒவ்வொரு கட்சியும், எங்களது கட்சிகளைப் பலப்படுத்தவே பார்ப்போம். பலப்படுத்தவேண்டும் என்ற சிந்தனையில் கட்சிகள் கூடுதலான ஆசனங்களைக் கேட்பது வழமை. நாங்கள் எங்கே எங்களால் வெல்ல முடியும் என்பதைக் கவனத்தில் எடுத்தே, ஆசனங்களைக் கேட்போம்.
எங்கள் கூட்டுக்குள் கட்சிகளுக்கு இடையே கருத்து வேறுபாடு இல்லாவிட்டால், அந்தக் கூட்டு வளரக் கூடிய கூட்டு அல்ல. கருத்து வேறுபாடுகள் இருக்க வேண்டும்; அது பற்றிக் கதைக்கப்பட வேண்டும், பின்பு தீர்க்கப்பட வேண்டும். அந்தக் கட்சிதான் சரியான வளர்ச்சியைக் காணும். சம்பந்தன் அண்ணையின் கருத்துக்கு நாங்கள், மற்றைய கட்சிகள் கடும் எதிராக இருந்தாலும், அவர் உடனடியாக குழம்பிப் போய்விட்டது என்று நிற்கமாட்டார். ஒரு கூட்டம், இரண்டு கூட்டம், ஐந்து கூட்டம் என்று பல கூட்டங்கள் வைத்து, தனது கருத்தை ஒருவாறு எங்கள் மீது திணிப்பார் அல்லது ஏற்க வைப்பார்.

**கே: எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்னடைவைச் சந்திக்கும் என்று ஆருடம் கூறியிருந்தீர்கள். அதற்கான காரணம் என்ன?**

ப: மக்கள் மத்தியில் அதிருப்தியான நிலைப்பாடு. முக்கியமாக தீர்வு விடயத்தில் சரியான நிலைமை இயலவில்லை. நாங்கள் கண்ணை மூடிக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிப்பதாக மக்கள் பலர் நினைக்கின்றார்கள். இவைகள் ஒரு காரணம். ஆனால் இது மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்ட தவறான அபிப்பிராயம்.

**கே: மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயம் உருவாக்கப்பட்டதாகக் கூறுகின்றீர்கள். ஏன் சரியானதை மக்களிடம் சொல்லவில்லை?**

ப: அரசுடன் ஒரு விடயத்தை நாங்கள் செய்யும் போது மக்கள் அப்படிக் கருதுவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன. அதைச் சரி செய்வதற்கு நாங்கள் சில விடயத்தை மக்களுக்குச் சொல்லப் போகின்ற போது, தெற்கில் அது பிரச்சினையை ஏற்படுத்தி விடும். உதாரணத்துக்கு ஒரு விடயத்தைச் சொல்கின்றேன். பண்டா, செல்வா ஒப்பந்தம் மூலம் தமிழர்களை பண்டாரநாயக்கவுக்கு விற்று விட்டார்கள் என்று அப்போது தமிழ்க் காங்கிரஸின் ஜி.ஜி.பொன்னம்பலம் சொல்லித் திரிந்தார். இதற்காக தமிழ் அரசுக் கட்சியினர், ஒப்பந்தத்தில் உள்ள விடயங்களைக் கூறி மக்களைத் தெளிவடையச் செய்தார்கள். தமிழ் அரசுக் கட்சியினர் தமிழ் மக்களுக்குச் சொன்னதை வைத்து தெற்கில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜே.ஆர்.ஜெயவர்தன கண்டி யாத்திரை போனார். குழப்பங்களை ஏற்படுத்தி அந்த ஒப்பந்தத்தை கிழித்துப் போடச் செய்தார். சில விடயங்களில் நாங்கள் பக்குவமாக நடக்க வேண்டும். மக்களுக்கு இந்த விடயங்கள் தெரியவருகின்ற போது தெரிந்து கொள்ளட்டும். அதற்கு முன்னர் அந்த விடயங்களை குழப்பி விடக் கூடாது என்பதில் தெளிவாக இருந்தோம், இருக்கிறோம்.

## மஹிந்தவுடன் பேசலாம்

**கே: நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் புதிய அரசமைப்பு முயற்சி தொடருமா?**

ப: தேர்தலின் பின்னர் மஹிந்தவே பெரும்பாலும் பிரதமராக வருவார். அவர் அரசியல்வாதி. கோத்தாபய போன்றில்லை. அவருடன் நாம் பேசக் கூடிய வாய்ப்பு வரும்.
ஆனால் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு,கிழக்கில் நாம் சிதறிப் போனால் அது அரச தரப்புக்குத்தான் வாய்ப்பாகிவிடும். வடக்கு - கிழக்கிலிருந்து நான்கு அல்லது ஐந்து கட்சிகளைப் பிரதிநிதித்து வப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வந்தால், அரச தரப்பு அதையே சாட்டாக வைத்து விடயத்தை இழுத்தடித்து விடும்.
வடக்கு கிழக்கிலிருந்து வந்த கூட்டமைப்புடன் மாத்திரம் பேசத் தேவையில்லை. அந்த மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேச வேண்டும் என்று இப்போதே அரச தரப்பினர் சொல்கின்றார்கள். தேர்தலில் நாங்கள் சிதறிப் போனால் அரசுக்கு அது இன்னமும் இலகுவாகிவிடும். அதனால்தான் கூட்டமைப்பை உடைக்கக் கூடாது என்பதில் நாங்கள் மிகக் கவனமாக இருக்கின்றோம்.

## அதிகாரப்போட்டியே காரணம்

**கே: கூட்டமைப்புக்கு எதிரான மாற்று அணி கூட மாற்று அணியாக, ஓரணியாக இல்லையே?**

ப: அவர்களும் கொள்கை ரீதியைக் காட்டிலும், ஆசன ரீதியாகவே சிந்திக்கின்றார்கள். விக்னேஸ்வரன் ஐயாவைக் காண்பித்து தாங்கள் படியில் ஏறிவிடலாம் என்றும், சிலர் சிந்திக்கின்றார்கள். இப்படியான மனப்பாங்குகளுடன் இருப்பதால்தான் அவர்களால் சரியாக இயங்க முடியாமல் இருக்கின்றது.
புலிகள் இருந்த காலத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோவுடனும் வேலை செய்ய முடியும். இப்போதுதான் அவருக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். பெரிய பிரச்சினையாகத் தெரிகின்றது. தமிழ் மக்கள் பேரவையில், எழுக தமிழில் நான், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் ஆகியோர் கடைகடையாகச் சென்று ஆதரவைத் திரட்டினோம்.
அந்தத் தருணத்தில் சேர்ந்து வேலை செய்ய முடியும். இப்போதுதான் சுரேஷுடன் சேர்ந்து வேலை செய்ய முடியாது என்கிறார்கள். ஏனென்றால், அவர் இயக்கம் என்று சொல்லுகின்ற நிலைமை.அதிகாரப் போட்டிதான் இதற்குக் காரணம்.

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு புளொட்டும் காரணமா?

**கே: காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் நியமிக்கப்பட்ட பரணகம ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்தோர் பலர் புளொட் அமைப்பால் தங்கள் உறவுகள் கடத்தப்பட்டதாக தெரிவித்தனர். அரசிடம் பொறுப்புக் கூறலை வலியுறுத்தும் நீங்கள் இந்த விடயத்தில் எப்படிப் பொறுப்புக் கூறப் போகின்றீர்கள் ?**


ப: அரசியலுக்காக குற்றம் சுமத்தவேண்டாம். ஆதாரங்களுடன் கூறினால் அதற்கு நாம் ஒத்துழைக்கத் தயார். எங்கள் இயக்க உறுப்பினர்கள் சிலருக்கு எதிராக இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுக்கப்பட்டன. ஆனால் அவை தள்ளுபடி செய்யப்பட்டு விட்டன. இப்போதும் சொல்கின்றேன், எங்கள் இயக்க உறுப்பினர்களால் கடத்தப்பட்டார்கள் என்று நம்பினால், அதை உரிய ஆதாரங்களுடன் கொண்டு வந்து நிரூபியுங்கள். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் ஒத்துழைப்போம்.

**கே: நீங்கள் ஆயுத அமைப்பில் இருந்தவர். தமிழ் மக்களின் விடிவுக்காக ஆயுதம் ஏந்தியவர். இப்போதைய அரசியல் சூழல், கோத்தாபயவின் நடவடிக்கைகள் மீண்டும் தமிழர்களை ஆயுதம் தூக்குவதற்கு தள்ளக்கூடுமா?**

ப: கோத்தாபய அரசுக்கு எதிரான அதிருப்தி, உணர்வுகள் தமிழ் மக்கள் மத்தியில் உருவாகிக் கொண்டிருக்கின்றன. ஆனால் ஆயுதப் போராட்டத்துக்கான ஆரம்பமாக இது இருக்கும் என்று இதுவரையில் நான் நம்பவில்லை.

கதிர்

**கடந்த 22.01.2020 அன்று மிருசுவில், படித்த மகளிர் குடியேற்றத் திட்டப் பகுதியில் அநாதரவாகக் கிடந்த ஒரு சடலத்தின் பின்னால் மறைந்திருக்கும் பல திடுக்கிடும் உண்மைகளை, களத்துக்குச் சென்று அங்குள்ள மக்களையும், பொலிஸாரையும் சந்தித்த எமது புலனாய்வுக் குழு கண்டுபிடித்தது. இருளில் மறைந்துள்ள அந்த உண்மைகள் இங்கு தரப்படுகின்றன.**



# கொலையாளிகளே!




**22.01.2020**


எப்போதும்போல காலையின் அமைதியில் துயின்று கொண்டிருந்தஎழுதுமட்டுவாள், படித்த மகளிர் திட்டத்தில் உள்ள அந்த ஒழுங்கை, காலை 10 மணிக்கு திடீரென அலறித் துடித்துக் கொண்டு பரபரப்பானது. அந்தப் பதற்றத்துக்கு காரணம், அந்த ஒழுங்கையில் இருந்து சற்று எட்டவாக ஈய்க்கள் மொய்த்தபடி இருந்த ஆணின் சடலம் தான்.

அந்தப் பாதையால் போய்க் கொண்டிருந்த ஒருவரின் பார்வையில் யதேச்சையாகவே அந்தச் சடலம் தென்பட்டு, இத்தனை களேபரத்துக்கும் காரணமாகிப் போனது. சும்மாவே வேடிக்கை பார்ப்பதென்றால் குவிந்து விடும் மக்கள், சடலம் ஒன்று கிடப்பது தெரிந்தால் சும்மா யிருப் பார்களா? ஈக்களை விடவும், சடலத்தை மொய்த்து சனக்கூட்டம்.

கிராம சேவகர் உடனடியாகவே பொலிஸுக்கு அறிவித்தார். அடுத்த சில நிமிடங்களில் பொலிஸ் ஜீப், கிறீச்சிட்ட படி வந்து நின்றது. சுற்றியிருந்த வர்களைக் கொஞ்சம் எட்டப் போகச் செய்துவிட்டு, சடலத்தை ஆராயத் தொடங்கியது பொலிஸ். சடலத்தின் தலையிலும், நெஞ்சிலும் ஆழமாக காயங்கள்.

அந்தக் காயங்களிலிருந்து வடிந்த குருதி காய்ந்திருந்தாலும், ஓரளவு ஈரலிப்போடே இருந்தது. ஆக, சந்தேகமேயில்லாமல் கொலைதான். அதுவும் சில மணித்தியாலங்களுக்கு முன்னர் நடந்தேறியிருக்கிறது. சரி, கொல்லப்பட்டவர் யார்?

அவரைக் கண்டுபிடிக்க அதிக சிரமத்தை அங்கிருந்த மக்கள் கொடுக்கவில்லை. கொலையுண்டவரைப் பற்றி அக்குவேறு ஆணிவேறாகச் சொன்னார்கள் அங்கிருந்தவர்கள்.




கொல்லப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த இரத்தினம் குபேந்திரன் (வயது 56). நடுத்தர வயதான போதும், தனிக்கட்டையாக வாழ்பவர். கூலி வேலை செய்பவர். கூடவே அங்குள்ள பிள்ளையார் கோயிலில் தொண்டும் செய்பவர். செய்வினை, சூனியம் செய்பவர் என்று ஊர் முழுதும் அவர் மீது ஒரு பயம். ஆனால் அப்படிப் பயங்காட்டியவர் இப்போது பிணமாக.......

யார் இந்தக் கொலையைச் செய்திருப்பார்கள்? பொலிஸ் குழம்பியது.

எந்தத் தடயமும் இல்லை. ஆனால் ஒரு அவசரத்தனத்தோடு, அந்தப் பிணம் வீசப்பட்டிருப்பதை அனுமானிக்க முடிந்தது. பிணத் தின்கனமும், அளவும் ஒருவர் மட்டுமே அந்தப் பிணத்தைக் கொண்டு வந்து வீசியிருக்க முடியாது என்பதைச் சொல்லி நின்றன. அப்படியானால், இருவர் அல்லது அதற்கும் மேற்பட்டவர்கள் இணைந்தே அவரைக் கொலை செய்துவிட்டு, இங்கே கொண்டு வந்து வீசியிருக்க வேண்டும். இறந்தவரின் வீட்டுக்கு பொலிஸ் போய் சல்லடை போட்டும் எந்தவொரு தடயமும் சிக்கவேயில்லை. தடயங்கள் இல்லாதபோது மோப்ப நாய் மட்டுமே பொலிஸுக்குள்ள ஒரே தெரிவு.




வந்திறங்கியது மோப்ப நாய். சில நிமிடங்கள் பிணத்தைச் சுற்றிச் சுற்றி வந்து விட்டு, 'விர்' எனப் பாய்ந்தோடத் தொடங்கியது. பின்னாலேயே பொலிஸாரும் ஓடத் தொடங்கினர். கொலையாளிகளின் வாசனையை மிக நன்றாக மோப்பநாய் கிரகித்துக் கொண்டதாலோ என்னவோ, நன்கு பழக்கப்பட்ட இடத்தால் பயணிப்பதுபோல எவ்வித குழப்பங்களுமின்றி, பிணம் இருந்த இடத்தில் இருந்து, இரு குறுக்கு ஒழுங்கைகளைக் கடந்து, ஒரு.வீட்டின் முன்னே சென்று, உள்ளே நுழையத் திமிறியது. ஆனாலும் பொலிஸார் அதனை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

மோப்பநாய் சென்று நின்ற வீட்டின் உரிமையாளர் கல்பனா (வயது 36).

மோப்பநாய் வீட்டை அடைந்த தருணத்தில், மிகச் சாவதானமாக வீட்டை நீர் ஊற்றிக் கழு விக் கொண்டிருந்தார் கல்பனா. கிராமசேவக ரோடு கூட வந்த பொலிஸாரைக் கண்ட கல்பனாவின் புருவங்கள், 'என்ன?' என்னும் பாவனையில் நெளிந்தன. கிராமசேவகர் படலையைத் திறந்து, " கல்பனா நிக்கிறவோ?" என்று கொஞ்சம் உரத்துக் குரல் கொடுக்க, " ஓம் ஜீஎஸ் வாங்கோ" என்றவாறு வெளியே வந்தார் கல்பனா. வழக்கமான சம்பிரதாய விசாரிப்புகளைச் செய்த பொலிஸார் தப்பித் தவறியும் கொலை பற்றி வாய் திறக்காமல், அடுத்த கேள்வியைக் கேட்டனர்.

"என்ன திடீரென்று வீட்டைக் கழுவிக் கொண்டு இருக்கிறீங்கள்?"

கல்பனா சற்றும் அசரவில்லை.

"அதுவோ, இண்டைக்கு நான் விரதம். அது தான் கழுவுறன்"

அவர் சொன்னதை பொலிஸார் மட்டுமல்ல, கூடவந்த மோப்பநாயே நம்பவில்லை. பொலிஸாரின் பிடியில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்ட மோப்பநாய், வீட்டுக்குள் நுழைந்து எல்லா இடமும் ஒரு 'ரவுண்ட்' அடித்துவிட்டு, அப்படியே வெளியில் வந்தது. அதன் பின்னர் எதையோ அது தீவிரமாக முகர்ந்து பார்த்து மோப்பம் பிடித்தது.

அடுத்த நொடியே நாய் துள்ளிப்பாய்ந்து கொண்டு வீட்டின் பின்பக்கமாக உள்ள கிணற்றடிக்கு போய், பின்னர் அப்படியே அருகில் எரிந்து போன நிலையில் இருந்த குப்பையை வேகமாகக் கிளறத் தொடங்கியது. அந்தக் குப்பைக்குள் எரிந்தும் எரியாத நிலையில் ஒரு 'அயர்ன் பொக்ஸின் 'பாகம் ஒன்றை நாய் காட்டிக் கொடுத்தது. அது ஒரு தடயமாக இருக்கக்கூடும். பொலிஸார் அதனையும் எடுத்துக் கொண்டு 'சரேலென' வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

வீட்டுக்குள் நுழைந்ததும் 'குப்' என்று இரத்த வாடை. இரண்டுமுறை கழுவப்பட்டும், இரத்தநெடி அடங்கி யிருக்கவில்லை போலும். மூக்கைப் பிடித்துக் கொண்டு நிமிர்ந்த, பொலிஸின் கண்களில் அகப்பட்டது இன்னொரு தடயம். சுவரின் மேற்புறத்தில் இரத்தம் தோய்ந்த கையொன்றின் ரேகைகள். தண்ணீர் ஊற்றி, அழிக்க முயன்ற அடையாளங்கள் அப்பட்டமாகத் தெரிந்தன. பின்னரும் மோப்பநாய் அடங்கவில்லை. கிணற்றடியையே வட்டமிட்டபடி குரைத்துக் கொண்டிருந்தது. சந்தேகம் வலுக்க, இருவர் கிணற்றுக்குள் இறங்கித் தேடினர். அகப்பட்டது ஒரு இரும்புக் கம்பி. சில மணித்தியாலங்களுக்கு முன்னரே அது வீசப்பட்டுள்ளது என்று பார்த்தவுடனே தெரிந்தது. இரும்புக் கம்பி.. கொலைக்கான மற்றொரு தடயம். பிறகென்ன, கல்பனாவுக்குக் கைவிலங்கு போடப்பட்டது. கல்பனா, தான் கொலை செய்வதற்கு உடந்தையாக இருந்தார் எனக்கூறி, இளைஞர் ஒருவரைக் காட்டிக் கொடுக்க, அவரும் சிறைக்குள் தள்ளப்பட்டார்.

## "என்னைக் காக்கவே கொன்றேன்!"

### கல்பனாவின் வாக்குமூலம்

'நான் திருமணம் செய்யமுதலே, குபேந்திரனை எனக்குத் தெரியும். எங்கள் வீட்டுக்கு அருகில்தான் வசித்து வந்தார். தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு அவர் பலமுறை என்னை நச்சரித்தார். நான் மறுத்து விட்டேன். அந்தச் சமயத்தில் என்னுடைய திருமணப் பேச்சுக்கள் நடந்து கொண்டிருந்தது. தன்னைத் திருமணம் செய்யாமல், வேறு எவரையாவது திருமணம் செய்தால் கட்டாயம் குழப்புவேன் என்று பலமுறை மிரட்டினார். ஏற்கனவே அவர் செய்வினை, சூனியம் வைத்து பலரது வாழ்க்கையை நாசமாக்கியுள்ளார் என்று பலரும் கதைப்பார்கள். இதனால் எனக்கு உள்ளுக்குள் பயமிருந்தாலும் அதனை நான் வெளிக்காட்டவில்லை."

"2017 ஆம் ஆண்டு எனக்குத் திருமணம் முடிந்த பின்னரும், குபேந்திரன் என்னை நிம்மதியாக இருக்கவிடவில்லை. சூனியம் வைத்து, வெறும் மூன்றே மாதத்தில் என்னுடைய வாழ்வையே நாசமாக்கினார். என்னுடைய கணவர் என்னை விட்டுப்பிரிந்துபோய்விட்டார். இந்த ஆத்திரத்தில் நான் குபேந்திரனை திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை.

அன்று இரவு, நள்ளிரவு தாண்டி ஒரு மணி ஆகியிருக்கும்."


"நுளம்பு வலைக்குள் கண்ணயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தேன். திடீரென என்னுடைய கழுத்தை யாரோ இறுக்குவது போல உணர்ந்து, திடுக்கிட்டுக் கண் விழித்தேன். அப்போதுதான் குபேரன், ஆடைகள் எதுவுமின்றி நிர்வாணமாக என் கழுத்தை இறுக்கிப் பிடித்து என்னை வன்புணர முயற்சிப்பதை அறிந்தேன். என்ன செய்வதென்று தெரியவில்லை. நான் தூங்கச் செல்லும்போது, எப்பொழுதும் என்னுடைய பாதுகாப்புக்காக தலையணைக்கு அடியில் ஒரு இரும்புக் கம்பியை வைத்திருப்பது வழக்கம். கண்ணிமைக்கும் நேரத்தில் அதை எடுத்து, பலம் கொண்ட மட்டும் குபேந்திரனைத் தாக்கினேன். அந்த அடியில் நிலை தடுமாறி, குபேரன் கீழே விழுந்தார். ஆனால் மறுகணமே வெறிபிடித்த மிருகம்போல அருகில் இருந்த மரக்கட்டை ஒன்றைத் தூக்கிக் கொண்டு வந்து என்னைத் தாக்

கினார். விட்டிருந்தால் என்னைக் கொலையும் செய்திருப்பார். அதனால் அவரிடமிருந்து என்னைக் காப்பாற்ற வேறு வழி தெரியவில்லை. கத்தி ஒன்றை எடுத்து, குபேந்திரனைக் குத்தினேன்."

'சதக்!..சதக்!!...சதக்!!"

"ஆத்திரம் தீரும்வரை, ஆறு தடவைகள் குபேந்திரனைக் குத்தினேன். என்னுடைய ஆத்திரம் தீர்ந்தபோது, குபேந்திரன் பிணமாகி இருந்தார். அதன் பின்னர் அவரது சடலத்தை எங்காவது எறிந்து விட்டு, வீட்டையும் கழுவிச் சுத்தம் செய்துவிட்டால், எவராலும் இந்தக் கொலையை நான்தான் செய்தேன் எனக் கண்டுபிடிக்க முடியாது எனத் திட்டம் போட்டேன். ஆனால் தன்னந்தனியாக குபேந்திரனின் பிணத்தை நான் தூக்கிச்சென்று போட முடியாது. எனவே எனது நம்பிக்கைக்குரிய, எங்கள் வீட்டில் சில காலத்துக்கு முன்னர் தங்கியிருந்து படித்த இளைஞர் ஒருவரிடம் உதவி கேட்டேன். அவரும் சம்மதித்தார். பின்னர் அவரது மோட்டார் சைக்கிளில் குபேந்திரனின் பிணத்தை இருத்தி, அதை நான் பிடித்துக் கொண்டு சென்று, ஒழுங்கையோரமாகப் போட்டுவிட்டு வந்தோம்."





கொலை நிகழ்ந்த வீடு

# ஒரு கொலை... சில குறிப்புகள்

## கொலைக் குறிப்பு 1

குபேந்திரன்தான் கொலை செய்யப்படுவதற்கு முதல்நாள், முன்னிரவு 7.30 மணியளவில் உரப்பை ஒன்றினுள் வைக்கோல் கொண்டு சென்றுள்ளார். குபேந்திரனை அயலவர்கள் கடைசியாகக் கண்டது அப்போதுதான். அதன் பின்னர் பிணமாகக் கிடந்தபோதுதான் அவர்கள் குபேந்திரனைக் கண்டார்கள். குபேந்திரன் எப்படிக் கல்பனாவின் வீட்டுக்குத் துணிந்து போனார் என்பது இதுவரை மர்மம் தான். கல்பனா சொல்வதுபோல, திருட்டுத்தனமாக உள்ளே போனாரா? அல்லது கல்பனா அழைத்துத்தான் உள்ளே போனாரா? என்ற சந்தேகம் இன்னும் நீடிக்கிறது. ஏனெனில் கல்பனாவின் வீட்டுக்குள், அவர் உள் நுழைய வேண்டுமாயின் ஒன்றில் கதவின் ஊடாகப் போயிருக்க வேண்டும். ஆனால் தூங்கும்போதும் பாதுகாப்புக்காக தலைமாட்டுக்குள் இரும்புக்கம்பியை வைத்திருக்கும் முன்னெச்சரிக்கையுடைய கல்பனா, கதவுகளைத் திறந்துவிட்டு தூங்கியிருக்க மாட்டார்.

அப்படியானால், வேறு ஏதும் வழியில் ஓடு பிரித்துத் தான் அவர் உள்ளே நுழைந்திருக்க வேண்டும். அப்படி நுழைந்திருந்தால், ஆளரவம் கேட்டு கல்பனா உடனேயே எழும்பியிருப்பார். ஆக, கல்பனாவுக்குத் தெரியாமல் குபேந்திரன் அவரது வீட்டுக்குள் போயிருக்க வாய்ப்புகள் மிகக் குறைவு.

## கொலைக் குறிப்பு 2

நுளம்புவலைக்குள் படுத்திருந்தபடியே , குபேந்திரனை தன் தலைமாட்டுக்குள் இருந்த இரும்புக்கம்பியால் தாக்கியதாக, கல்பனா கூறுகிறார். ஆனால், நுளம்பு வலைக்குள் இருந்தபடி, கம்பியை எடுத்து, வலைக்கு வெளியே இருப்பவரைத் தாக்குவதென்பது நடைமுறைக்கு ஒத்துவராது. அப்படி அடித்தாலும் கூட, அது கீழே விழுத்துமளவுக்கு வலுவாக இருக்காது.

## கொலைக் குறிப்பு 3

குபேந்திரன் பிணமாக, வீசப்பட்டுக் கிடந்தபோது, வேடிக்கை பார்க்கப் பலர் கூடியிருந்தார்கள். அப்படிச் சென்று பார்த்தவர்களில் கல்பனாவும் ஒருவர். சடலத்தை ஊர்மக்கள் பார்த்த போது கொலைச் சந்தேகநபரான கல்பனாவும் சென்று பார்த்துள்ளார். அதன் பின்னர் ஒருவிநோதமானவேலையைச் செய்துள்ளார் கல்பனா.

வழக்கத்துக்கு மாறாக சடலத்தைக் கண்ட தகவலை அங்குள்ள பலரின் வீடுகளுக்கும் சென்று பகிர்ந்துள்ளார். அத்தோடு , குறுக்கு மறுக்காக ஒழுங்கற்ற பாதைகளைத் தெரிவு செய்து நகர்ந்துள்ளார். இதற்கு இரண்டு காரணிகள்தான் இருக்கமுடியும்.

ஒன்று, தான் கொலை செய்ததாக எவராவது சந்தேகிக்கிறார்களா? என்று ஆழம் பார்க்கப் போயிருக்கலாம். அல்லது, பொலிஸார் மோப்ப நாயைப் பயன்படுத்தி தன்னைத் தேடும்போது, அந்த நாயை ஊரில் உள்ள எல்லா வீடுகளுக்கும் போக வைத்து, குழம்பச் செய்து, தான் தப்பித்துக் கொள்ளலாம் என அவர் எண்ணி இருக்கலாம். இந்த இரண்டில் எதற்காக அப்படி செய்தார் என்பது கல்பானவுக்கே வெளிச்சம்.

## கொலைக் குறிப்பு 4

கொலையுண்டவருக்கும், கொலை செய்தார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள கல்பனாவுக்கும் இடையே முன்னர் (கல்பனாவுக்கு திருமணமாக முன்னர்) மிக நெருக்கமான உறவு இருந்துள்ளது. இருவரது வீடுகளிலும் வேறு எவரும் இல்லாததால் ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருந்துள்ளார்கள்.

அப்போதெல்லாம் குபேந்திரனுக்கு மூன்று வேளை சாப்பாடும் கல்பனாவே சமைத்துக் கொடுத்துள்ளார். இந்தப் பிணைப்பில் இருக்கும் காலத்தில் பலரிடம் கடன் வாங்கியும், தன் காணியை விற்றும் கல்பனாவுக்கு குபேந்திரன்நிறையப்பணமும்கொடுத்துள்ளார். இப்படி நெருக்கமாக இருந்தவர்கள், கல்பனாவின் திருமணத்தில் எதிரும் புதிருமாக மாறிவிட்டனர். இதனால், தான் கொடுத்த பணத்தை திருப்பித் தருமாறு குபேந்திரன் கல்பனாவிடம் கேட்டுள்ளார். இந்தக் கொடுக்கல் வாங்கல் பிரச்சினை இணக்க சபை வரை சென்றுள்ளது. "கலியாணத்துக் கெண்டு சொல்லி, காசு வேண்டினவள். காசையும் தாறாளில்லை. என்னைக் கலியாணமும், கட்டுறாளில்லை " எனப் பலரிடமும்குபேந்திரன்சொல்லி வந்துள்ளார் . அதே போல் தன்னைத் திருமணம் செய்யுமாறு குபேந்திரன் தொந்தரவு செய்து வருவதாக கல்பனாவும் தெரிவித்துள்ளார்.

ஆக, பணக் கொடுக்கல் வாங்கல், திருமணம் செய்யுமாறு தொந்தரவு ஆகிய இரண்டுமே இந்தக் கொலைக்கான அடிப்படைக் காரணங்களாக இருக்க வேண்டும்.

## கொலைக் குறிப்பு 5

குபேந்திரனைத் தான் மட்டுமே கொன்றதாக ஆரம்ப விசாரணைகளின் போது கல்பனா வாக்குமூலம் கொடுத்திருந்தார். ஆயினும் அந்தக் கொலையை தானும் சேர்ந்தே செய்ததாக, கல்பனாவுக்கு உடந்தையாக இருந்தார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்த இளைஞர் முன்னர் கல்பனா வீட்டில் இருந்து படித்தார் எனக் கூறப்பட்டபோதும், அது உண்மையா?

அவருக்கும் கல்பனாவுக்கும் என்ன தொடர்பு?

எதற்காக சம்பவ தினத்தன்று அவர் கல்பனா வீட்டில் இரவு நேரத்தில் தங்கினார்?

கொலை செய்யப்படும் போது அவரும் வீட்டில் இருந்திருந்தால், தான் படுத்திருக்கும் போது குபேந்திரன் வன்புணர வந்ததால் தாக்கினேன் எனக் கல்பனா சொல்வதன் நம்பகத்தன்மை என்ன?

இப்படி நிறையக் கேள்விகளுக்கு இன்னும் விடையில்லை.

## கொலைக் குறிப்பு 6


கத்தி மட்டுமல்லாது, அயர்ன்பொக்ஸ் , இரும்புக்கம்பி என்பவற்றாலும் குபேந்திரன் தாக்கப்பட்டுள்ளார். இரும்புக் கம்பி கிணற்றில் வீசப்பட்டுள்ளது.

கொலை செய்யப்பட்ட பின்னர் குபேந்திரன் அணிந்திருந்த ஆடைகள் களையப்பட்டு, குபேந்திரனின் சடலத்தைக் குளிப்பாட்டி,வேறு உடைகளை அணிவித்தே சடலம் ஒழுங்கைக்குள் கொண்டு சென்று வீசப்பட்டுள்ளது. அவ்வாறு களையப்பட்ட ஆடைகளும், அயர்ன்பொக்ஸோடு சேர்த்து அதிகாலை வேளையில் வீட்டின் பின்பக்கமாக நெருப்பில் இட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு அவற்றுக்குத் தீமுட்டுவதை அயலவர்கள் அவதானித்துள்ளனர்.

இருப்பினும் இப்படிக் கோரமாக குபேந்திரன் கொலை செய்யப்பட்ட போதும், பக்கத்து வீடுகளில் இருந்தவர்களுக்கு ஒரு சிறு சத்தம் கூடக் கேட்கவில்லை.

## கொலைக் குறிப்பு 7

குபேந்திரனின் சடலத்தை தண்டவாளத்தில் போட்டுவிட்டால், ரயிலில் மோதி இறந்துவிட்டார் என்று எல்லோரும் நம்புவார்கள் எனக் கொலையாளிகள் திட்டம் போட்டுள்ளார்கள். அதை நிறைவேற்றவே சடலத்தை மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு சென்றுள்ளார்கள். ஆனால் அவர்கள் நினைத்தபடி, தண்டவாளத்தில் போட முடியாத சூழல் ஏற்பட்டதால், உடனடியாகத் திட்டத்தை மாற்றி ஒழுங்கைக்குள் சடலத்தை வீசியுள்ளனர்.



## கொலைக் குறிப்பு 8

கொலை செய்தார் எனச் சந்தேகிக்கப்படும் கல்பனா , ஈ.பி.டி.பி உறுப்பினர். அவர் மோப்பநாயின் உதவியுடன் கைது செய்யப்பட்ட வேளையில், அதில் இருந்து தப்பிக்க , ஈ.பி,டி.பி உயர்மட்டத்துக்குத் தொலைபேசி அழைப்பை எடுக்க முயன்றுள்ளார். எனினும் பின்னர் அவர் கைது செய்யப்பட்டார்.


இதே போன்றே நெடுந்தீவுப் பிரதேசசபைத் தலைவராக இருந்த றெக்சியன் என்பவரை, ஈ.பி.டி.பி.யின் அப்போதைய யாழ்.மாவட்ட அமைப்பாளராக இருந்த கமல், றெக்சியனின் மனைவியோடு கூட்டுச் சேர்ந்து சுட்டுக் கொன்றுவிட்டு , அதைத் தற்கொலை போல சிருஷ்டிக்க முனைந்து , பின்னர் மாட்டிக் கொண்டார் . இதை கல்பனா இப்போது செய்த செயல்கள் நினைவுபடுத்துகின்றன.

## கொலைக் குறிப்பு 9

2000ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி மிருசுவிலில் உள்ள தங்கள் வீட்டைப் பார்வையிடச் சென்ற குழந்தைகள் உள்ளிட்ட 8 பேர் படையினரால், கோரமாகக் கொலை செய்யப்பட்டு, மலசலக் கூடக் குழியில் போடப்பட்டிருந்தனர். அந்தக் கொலைச் சம்பவம் நடந்த காணிக்கு அடுத்த காணியில் தான், குபேந்திரன் கொலை செய்யப்பட்ட கல்பனாவின் வீடு.

சஞ்சீவி
08 பெப்ரவரி 2020

இந்தக் கட்டுரைத் தொடர் உயர்தரத்துக்குப் பின்னரான உயர்கல்வி தொடர்பில் சில அடிப்படையான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் வாராந்தம் வெளி வருகின்றது. எமது பிரதேச இளையவர்களைப் பொருத்தமான தடத்தில் வழிப்படுத்துவதற்கான சிந்தனைக் கிளறல்களைப் பல மட்டங்களிலும் ஏற்படுத்துவதே இந்தக் கட்டுரையாளரின் நோக்கமாகும்.





இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர், கல்வியியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# உயர்தரத்துக்கு பின்னான உயர்கல்வி 3

## கலைப்பிரிவு மாணவர்களுக்கான பாடத்தெரிவுகள்

**கவனத்துடன் அணுக வேண்டியது காலக் கடமை**

கடந்த வாரம் உயர்தரத்தில் தெரிவு செய்யப்பட வேண்டிய பாடச் சேர்மானங்கள் தொடர்பான மேலோட்டமான தொரு அடிப்படையையும், விளக்கத்தையும் இந்தக் கட்டுரைத் தொடர் வழங்கியிருந்தது. பொதுவாகவே க.பொ.த சாதரண தரத்தைத் தாண்டி உயர்தரத்துக்கு பிரவேசிக்கும் போது முதலில் மாணவர்கள் தமது கற்கை நெறி தொடர்பான தெரிவுகளை மேற்கொள்வார்கள். இருந்தும் கற்கை நெறி தொடர்பான தெரிவுகளை மாணவர்கள் தமது எதிர்கால இலட்சியம், விருப்பு மற்றும் இதர பல காரணிகளின் அடிப்படையில் பல ஆண்டுகளுக்கு முன்னரே முடிவு செய்யும் தன்மையும் உண்டு. மிகக் குறைவான எண்ணிக்கையுடைய மாணவர்கள் மட்டும், முதலில் ஒரு துறையில் கற்க ஆரம்பித்து பின்னர் ஒவ்வொரு துறையாகத் தாவித் தாவி, இறுதியில் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது அல்லது இரண்டாம் மற்றும் மூன்றாம் தடவை பரீட்சைக்குத் தோற்றும் போது தமது கற்கைநெறியை முடிவுசெய்யும் வகுதியினராகவுள்ளனர்.

ஒரு துறையில் கற்பது என்று முடிவாகிய பின்னர், பாடத் தெரிவுகள் தொடர்பாக எழும் பிரச்சனை கணித, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் துறை மாணவர்களைக் காட்டிலும் கலைப்பிரிவு மாணவர்களிடம் அதிகமாகவுள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அவர்களது பாடத் தெரிவில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் அவர்கள் நலனில் அக்கறை கொண்டோரின் வழிகாட்டல்கள்
2. பாடசாலையில் கலைத்துறைப் பாடங்களைக் கற்பிப்பதற்காகவுள்ள ஆசிரியர்களின் கிடைப்பனவு
3. உயர்கல்வி தொடர்பாக மாணவர்கள் கொண்டுள்ள விசேட எண்ணங்கள்
4. பாடங்களின் இலகுத்தன்மை
5. குறித்த பாடம் உயர்தரப் பரீட்சையின் புள்ளியில் கொண்டுள்ள செல்வாக்கு
6. மூன்று பாடங்களின் தெரிவின் போது ஒரு பாடத்தின் தெரிவு மற்றைய பாடத்தின் தெரிவில் கொண்டுள்ள செல்வாக்கு

இங்கு பல பாடசாலைகளில் சில கலைத்துறைப் பாடங்களுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையினால் மாணவர்கள் நீண்ட காலமாக தமது விருப்பத்தெரிவுகளுக்குள் வைத்திருந்த பாடங்களை பாடசாலையின் ஆசிரிய ஆளணி நியமனத் தன்மைக்கேற்ப மாற்ற வேண்டிய தர்மசங்கடமான நிலைமையை எதிர்கொள்கின்றமை கவனத்தில் கொள்ளத்தக்கது. இந் நிலமை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. குறிப்பாக எதிர்காலத்தில் உயர்தரத்துக்குப் பின்னான உயர்கல்வியில் செல்வாக்கு செலுத்தும் பாடங்களைத் தெரிவுசெய்யும்போது ஆசிரியர் பற்றாக்குறையினால் மாணவன் பெறுமதிமிக்க ஒரு பாடத்தைத் தவிர்க்க வேண்டிய நிலைமைக்கு ஆளாகுதலை ஒரு சமூகத்துக்கான இழப்பாக கருத வேண்டும்.

இந்த நிலையில், கலைத்துறை மாணவர்களின் பாடத்தெரிவுகள் சம்பந்தமான சில அடிப்படைகளை ஆராய்வது பொருத்தமானது. எந்தவொரு உயர்தர மாணவனினதும் முதன்மை இலக்கு பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவதே. எனவே பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவது தொடர்பில் கலைத்துறைப் பாடத்தெரிவுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து ஆராயலாம்.



பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக்கழக அனுமதிக்காக வருடம் தோறும் வெளியிடும்வழிகாட்டி நூலில் இந்த விடயங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இருந்தும் எமது மாணவர்களும் ஆசிரியர்களும் பல்கலைக்கழக அனுமதிக்குவிண்ணப்பிக்கும்போது மாத்திரமே இந்த வழிகாட்டி நூல் குறித்து கவனம் செலுத்துகின்றனர். ஆனால் உயர்தரத்தை கற்க ஆரம்பிக்கும் போதே இந்த நூலை வாசிப்பது மிகவும் அவசியமானது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.



கலைப்பிரிவில் அதிக எண்ணிக்கையான பாடங்கள் காணப்படுவதனால் அவை நான்கு தொகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன

1. சமூக விஞ்ஞானம் மற்றும் பிரயோக சமூக கற்கைகள்
2. சமயங்களும் நாகரீகங்களும்
3. அழகியல் கற்கைகள்
4. மொழிகள்

இந்த ஒவ்வொரு தொகுதிகளுக்குள்ளும் பல பாடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**சமூக விஞ்ஞானம் மற்றும் பிரயோக சமூக கற்கைகள்**

முதலாவது தொகுதியான சமூக விஞ்ஞானம் மற்றும் பிரயோக சமூக கற்கைகள் தொகுதிக்குள் உள்ளடங்கும் பாடங்கள் விசேட தன்மை கொண்டவை. இவற்றுள் பல பாடங்கள் தனித்து கலைப்பிரிவு மாணவர்களுக்கு மட்டும் உரித்தானவையல்ல. அவற்றுள் பல, வர்த்தகப்பிரிவு மற்றும் தொழில்நுட்பப் பிரிவு மாணவர்களுக்கும் உரித்தானவை. இந்தத் தொகுதிக்குள் பின்வரும் பாடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

புவியியல், வரலாறு, மனைப் பொருளியல், விவசாய விஞ்ஞானம், கணிதம், இணைந்த கணிதம், தொடர்பாடலும் ஊடகக் கற்கைகளும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல், கணக்கீடு, வணிகப் புள்ளிவிபரவியல், அரசியல் விஞ்ஞானம், அளவையியலும் விஞ்ஞான முறையும், தொழில்நுட்பப் பாடங்களிலிருந்து ஒரு பாடம் (குடிசார் தொழில்நுட்பம், மின், இலத்திரனியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம், விவசாயத் தொழில்நுட்பம், பொறிமுறை தொழில்நுட்பம், உணவுத் தொழில்நுட்பம், உயிர் வள தொழில்நுட்பம்)

இந்தத் தொகுதிக்குள் இருந்து பாடங்களைத் தெரிவு செய்யும்போது அல்லது தவிர்க்கும்போது மாணவர்கள் பின்வரும் விடயங்களைக் கருத்தில் கொள்ளுதல் அவசியமானது.

1. மூன்று பாடங்களையும் இந்தத் தொகுதிக்குள் இருந்து தெரிவு செய்ய முடியும்
2. இந்தத் தொகுதிக்குள் இருந்து ஒரு பாடத்தையும், ஏனைய தொகுதிகளில் இருந்து ஏனைய இரண்டு பாடங்களையும் தெரிவு செய்யலாம்.
3. இந்தத் தொகுதிக்குள் இருந்து பாடங்களைத் தெரிவு செய்யாது ஏனைய மூன்று தொகுதிக்குள்ளும் பாடங்களை அந்தத் தொகுதிகளின் தெரிவு நிபந்தனைகளுக்கு உட்பட்டு தெரிவு செய்யலாம்.

இருந்தும் கலைப்பிரிவு மாணவர்கள் இந்தத் தொகுதியிலிருந்து ஒரு பாடத்தையேனும் தெரிவு செய்வது மிகப் பொருத்தமானது என்பது கட்டுரையாளரின் தனிப்பட்ட அபிப்பிராயமாகும். குறிப்பாக பல்கலைக்கழக அனுமதி மற்றும் இதர உயர்கல்வி வாய்ப்புக்களுக்கான கலைப்பிரிவு மாணவர்களின் z புள்ளியைத் தீர்மானிக்கும் பாடங்களாக இவையுள்ளன.

அண்மைய உதாரணமாக 2019ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தரப் பரீட்சை 2019 இல் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் கெங்காவரதன் நிலக்சன் என்பவர் இரண்டு பாடங்களில் மட்டுமே அதிவிசேட சித்தியைப் பெற்ற நிலையில் வரலாற்றுப் பாடத்தில் பெற்றுக்கொண்ட அதிவிசேட சித்தியும் புள்ளிகளும் அவரது z புள்ளியைத் தீர்மானித்து யாழ்.மாவட்டத்தில் முதலிடத்தையும் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொடுத்திருந்தது.

வரலாற்றுப் பாடம் மட்டுமன்றி இந்தத் தொகுதியின் ஏனைய பாடங்களும் அத்தகைய வகிபாகத்தைக் கொண்டுள்ளன. இருந்தும் இத் தொகுதியிலிருந்து பாடங்களைத் தெரிவு செய்வதில் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரதான இடர்பாடு குறித்த பாடத்துக்கான, பொருத்தமான பாடசாலை ஆசிரியரின் கிடைப்பனவேயாகும். குறிப்பாக வன்னிப் பிரதேச மாணவர்கள் இத்தகைய சிக்கலை எதிர்கொள்கின்றனர். இருந்தும் வணிகத்துறையுடன் இணைந்ததான பொருளியல் பாடத்தைக் கற்கும் கணிசமான அளவான மாணவர்கள் உள்ளனர். அது போன்று அண்மைக் காலமாக தொடர்பாடலும் ஊடகக் கற்கைகளும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்யும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

கலைத்துறையில் வேலையற்ற பட்டதாரிகள் எனும் வகுதிக்குள் மேற்குறித்த சமூக விஞ்ஞானக் கற்கைகள் தெரிவுகளுக்கூடாக வந்த மாணவர்கள் அதிக எண்ணிக்கையானோர் அகப்படாமையும் பொதுவான அவதானமாகும். அதற்கான காரணம் சமூக விஞ்ஞானம் மற்றும் பிரயோக சமூகக் கற்கைகள் தொகுதிப் பாடங்களைத் தெரிவு செய்யும் மாணவர்கள் வேலைகொள்வோரின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யும் ஆற்றலை இயல்பாகவே கொண்டிருப்பதேயாகும்.

கலைத்துறை மாணவர்களின் பாடத் தெரிவு தொடர்பான மேலும் சில முக்கியமான விடயங்கள் குறித்து அடுத்த வாரம் சிந்திக்கலாம்.

நேர்கண்டவர் - ரேகா சிவலிங்கம்



# ரகசியங்கள் ஒளிந்திருக்கும் பட்டங்கள்!

பட்டங்களைக் கண்டவுடனேயே இப்போதெல்லாம் நினைவுக்கு வருவது வல்வைப் பட்டத் திருவிழா தான். விதவிதமான வடிவங்களோடு, பார்ப்போரை ஆச்சரியத்தில் மூழ்கடிக்கச் செய்யும் தொழினுட்பங்களோடு, ஒவ்வொரு தைப்பொங்கல் நாளன்றும் வல்வெட்டித்துறைக் கடற்கரையை வர்ணஜாலமாக்கும் வித்தை இந்தப் பட்டப்போட்டிக்கு உண்டு. லட்சக்கணக்கான மக்களை பார்வையாளராக இழுத்துவரக்கூடிய கொண்டாட்டமாக மாறியிருக்கும் இந்தப் பட்டத் திருவிழாவில், கடந்த 5 வருடங்களாகத் தனி முத்திரை பதித்து முதலிடத்தைத் தனதாக்கி வருகிறார் மகேந்திரன் பிரசாந்த். 27 வயதான இந்த இளைஞர், ஒவ்வொரு வருடமும் பிரமிக்கவைக்கும் ஏதோ ஒரு வித்தையைத் தன் பட்டங்களுக்குள் புகுத்திப், பார்க்க வருபவர்களையும், பட்டப்பிரியர்களையும், நடுவர்களையும் தன்வசமாக்கி வருகிறார். வழக்கமாக முதலிடத்தை மட்டும் பிடித்து வந்த பிரசாந்த், இந்த முறை முதல் மூன்று இடங்களையும் வழித்துத் துடைத்து தன் 'பொக்கற்றுக்குள்' போட்டிருக்கிறார். வெளிவாரியாக பட்டப்படிப்பொன்றை மேற்கொள்ளும் இவர், 'மெக்கானிக்' வேலையையும் செய்து வருகிறார். நாடகம், பொய்க்கால் குதிரை போன்ற கலைகளிலும் ஆர்வம் கொண்ட பிரசாந்த், உடுக்கு வாசிப்பதிலும் வல்லவர். பட்டப்போட்டிகளில் தனது சாதிப்புக்கள் குறித்து சஞ்சீவிக்காக பிரசாந்த், பகிர்ந்து கொண்ட கருத்துக்கள், இங்கு பிரசுரமாகின்றன.

**கே:** பட்டங்கள் மீதான காதல் உங்களிடத்தே எப்போது முளைத்தது?

**ப** சிறு வயதிலிருந்தே பட்டங்கள் மீது பிரியம் அதிகம். பட்டம் ஏறக் கூடிய 'சீசனில்' நான் எப்போதும் நூலும் கையுமாகத்தான் இருப்பேன். கூடவே என்னுடைய அப்பாவும் பட்டங்கள் கட்டுவதில் நிபுணர். அவரிடமிருந்தும் இந்தப் பட்டங்கள் மீதான விருப்பம் என்னிடம் தொற்றிக்கொண்டது. அதுவே காலப்போக்கில் இந்தப் பட்டப்போட்டியில் பங்கேற்க வைத்து, இப்படித் தொடர்ச்சியாக முதலிடத்தையும் பிடிக்க வைத்துள்ளது.

எனினும் தொடர்ச்சியாக வெற்றி பெறுவோம் என்பதை ஆரம்பத்தில் நானே எதிர்பார்த்ததில்லை. ஆனால் ஒவ்வொரு வருடமும் பட்டம் கட்டும் போது வித்தியாசமாகவும் , புதுமையாகவும் விசித்திரமானதாகவும் இருக்க வேண்டும் என்று செயற்பட்டுக் கட்டுவோம்.

அதனால்தான் இந்தத் தொடர் வெற்றி சாத்தியமாகியதாக நினைக்கின்றேன் . 2016 இல் அலங்கார விண்வெளி ஓடம், 2017 - ஓணான், 2018 - பறக்கும் மேடையில் பொம்மலாட்டம், 2019 - பறக்கும் விநோத சமையலறை, 2020 - வான் வீதியில் பாரம்பரிய இசை என ஒவ்வொரு வருடமும், புதிய 'ஐடியாக்களோடு' களமிறங்குவதால், பார்வையாளர்களைக் கவர்ந்து, வெற்றியைச் சுவைக்க முடிகின்றது.

நீண்ட நாட்களாக சிரமப்பட்டுக் கட்டிய பட்டங்கள் வெற்றி பெறும்போது சொல்லுவதற்கு வார்த்தைகள் வராது. அவ்வாறானதோர் மனநிலையிலேயே நானும் இருந்தேன், பட்டம் கட்டும்போது இருந்த பிரச்சினைகள், நீண்டநாள் உழைப்பு எல்லாமே அந்த நேரத்தில் "வெற்றி" என்ற ஒரு வார்த்தையில் மறைந்து போய்விடும்.

**கே:** நீங்கள் போட்டிக்காக உருவாக்கிய பட்டங்கள் அனைத்தும், காற்றின் அதிர்வு மூலமாகவே இயங்கும் பொதுத் தன்மை ஒன்றைக் கொண்டிருந்தன. அவ்வாறான இயங்கு முறைக்கு என்ன நுட்பங்களை விசேடமாகப் பயன்படுத்தினீர்கள் ?

**ப** எம்முடைய பட்டங்களின் அசைவுகள் எல்லாமே காற்றை மட்டும் பயன்படுத்தி இயங்கக் கூடியவாறான நுட்பத்தோடுதான் கட்டியிருந்தோம். அவற்றை இயங்கச் செய்வதற்காக மோட்டர் போன்ற இயந்திரங்கள் எவற்றையும் பயன்படுத்தவில்லை. மாறாக மூங்கில், நூல், பேப்பர், அலுமினியக் கம்பி, போன்ற சாதாரணமாகக் கிடைக்கும் பொருட்களை மட்டுமே பயன்படுத்தி எமது பட்டங்கள் உருவாக்கப்பட்டன. காற்று வீசும்போது, சுழலும் சக்கரத்தை மையமாகக் கொண்டு பட்டத்தில் உள்ள உருவங்களிலும் அசைவுகளை உண்டாக்கியிருந்தோம். அந்தச் சுழலும் சக்கரத்தையும் நாங்களே பேப்பர் ,நூல், மூங்கில் கொண்டு உருவாக்கினோம். அந்தச் சக்கர உருவாக்கத்தில் சில விடயங்களை வெளியில் சொல்வது பொருத்தமற்றது. சில விடயங்கள் ரகசியமாக இருப்பது தான் நல்லது. ஏனெனில் அதைக் கண்டு பிடித்தவர்கள் நாங்கள்தான். பெப்சி, கொக்ககோலா போன்ற நிறுவனங்கள் எவ்வாறு தங்களுடைய பொருள் சேர்க்கைகளைப் பற்றிய விபரங்களை ரகசியமாகப் பேணுகின்றனவோ, அது போலத் தான் நாங்களும் பட்டத்தின் பிரதான நுட்பம் குறித்த ரகசியத்தைப் பேணுகிறோம்.

**கே:** சரி, அந்த நுட்பம் ரகசியமாகவே இருக்கட்டும். எனினும் அந்த ரகசிய நுட்ப முறைகளை தனியே நீங்கள் மட்டுமே உருவாக்கினீர்களா அல்லது வேறு எவரேனும் உதவி செய்துள்ளார்களா?

**ப** உண்மையில் அந்த நுட்பம் என்னுடைய தனி உருவாக்கம் அல்ல. அப்பா, தம்பி, ஆகியோரின் கூட்டுழைப்பும் அந்த நுட்பத் துக்குள் புதைந்து கிடைக்கிறது. இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால், அந்த நுட்பத்தின் மூளையே அப்பா தான் . என்னவிதமான நுட்பத்தைப் பயன்படுத்தப்போகிறோம் என்பதைத் தீர்மானிப்பதும் அப்பாதான். அவரும் ஒரு திறமையான 'மெக்கானிக்' என்பதால், தன்னுடைய பட்டறிவில் கற்றுக்கொண்ட மொத்த வித்தைகளையும் தொழில் நுட்ப அறிவு அத்தனையையும் பட்டத்தின் உருவாக்கத்தில்காட்டிவிடுவார். அதனால் பட்டத்தின் அசைவுகள் எல்லாம் அப்பாவின் 'ஐடியா'வாகத் தான் இருக்கும்.

**கே:** ஒரு பட்டத்தை உருவாக்க எடுத்துக் கொள்ளும் காலம் எவ்வளவு? அப்படிப் பட்டங்களை உருவாக்கும்போது ஏதேனும் இடர்களைச் சந்திக்க வேண்டியிருந்ததா?

**ப** ஒரு பட்டத்தைக் கட்ட மூன்று மாதங்களுக்கு மேல் செலவழிப்போம். வேலை, படிப்பு என்பவை காரணமாக தொடர்ச்சியாகப் பட்டம் கட்டமுடியாது. அதன் காரணமாக 3 மாதங்கள் தேவைப்படுகிறது.பெரிய பட்டங்களை வீட்டில் வைத்தே கட்டுவோம். அதனால் இடப்பிரச்சினை வரும். அத்தோடு மழைக் காலம் என்பதால் வெளியில் வைத்தும் கட்ட முடியாது, பட்டத்தில் அசைவுகளை உருவாக்கும் அவை சரியாகச் செயற்பட வேண்டும். அதற்காக நிறைய நேரம் செலவழிப்போம். அதை விட, பட்டம் கட்டியபின் அதை வெள்ளோட்டமாகவும் ஏற்றிப் பார்க்க வேண்டும். அப்படி ஏற்றிப் பார்க்க வேண்டுமாயின் கடற்கரைக்குத்தான் போக வேண்டும். அங்குதான் பட்டம் ஏறக்கூடிய அளவுக்கு காற்று இருக்கும். ஆனால் பிரச்சினை என்னவெனில், எல்லோரும் பார்க்கக்கூடியவாறு பட்டத்தைக்கொண்டு செல்ல முடியாது. மற்றவர்கள் பார்த்துவிட்டால், எங்கள் பட்டம் பற்றிய எதிர்பார்ப்பு இல்லாமல் போய்விடும். அதனால் அதிகாலை 2 அல்லது 3 மணியளவில் தான் பட்டத்தை ஏற்றிப் பார்க்கப் போவோம். இதற்கு எனது மாமா பெரிதும் உதவி செய்துள்ளார். அத்தோடு சில பட்டங்களை ஒருதடவையில் ஏற்றிச்சரி பார்க்க முடியாது . திரும்பத் திரும்ப ஏற்றிச் சரி பார்க்க வேண்டி ஏற்படும். அதை விட வேலைக்கும் போக வேண்டும், படிக்கவும் வேண்டும். இடைப்பட்ட நேரத் தில் தான் பட்டத்தைக் கட்ட வேண்டும். இப்படிச் சில இடர்கள் இருக்கத்தான் செய்கின்றன.

**கே:** அப்படியானால் பட்டத்தைக் கட்டுவதற்குப் பொருளாதார ரீதியாகச் சிக்கல்கள் ஏற்படுவதில்லையா?

**ப** அப்படியான சிக்கல் வராது. ஒரு பட்டத்தைக் கட்டி முடிக்க சுமார் 15 ஆயிரம் ரூபா முதல் 20 ஆயிரம் ரூபா வரை செலவாகும்தான். ஆனால், என்னுடைய அதிர்ஷ்டமும், திட்டமிடலும், பட்டங்களின் அழகும் தொடர்ச்சியாக வெற்றியைக் கொடுத்ததால் , மைக்ரோ அவுண், தங்கத்திலான பதக்கங்கள் என்று, செலவழித்ததை விடவும் அதிகமாகப் பணம் திரும்பக்கிடைத்தே வந்துள்ளது.இருப்பினும் பட்டப்போட்டியில் வரும் பரிசுத்தொகை என்பது இலாபம் என்று கிடையாது. போட்டியில் வெற்றி என்ற ஒன்று தான் மிகப்பெரும் பரிசு. அத்தோடு பட்டத்தின் செலவை விட, பட்டம் கட்டுவதற்காக எடுக்கும் நேரம் மிக அதிகம்.



(18 ஆம் பக்கம் பார்க்க)

ம. பா. மகாலிங்கசிவம்

# ஜீவகாருண்யம்

## இன்றைய உலகின் அத்தியாவசிய தேவை

இன்றைய உலகம் இயந்திரத்தனமானதாக மாறிவிட்டது. பெரும்பாலான எல்லாச் செயற்பாடுகளுமே பணம் சேர்ப்பதை மட்டும் குறிக்கோளாகக் கொண்டிருப்பதால் ஈவிரக்கமற்ற கொடூரத்தனமும், சுயநலமும் எந்த வழியிலாவது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளவேண்டுமென்ற அவாவும் மோலோங்கி நிற்கின்றன. இரக்கம், கருணை, புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு என்பவை பலவீனர்களிற்கே அணிகலன்களாகிவிட்டன என நினைக்கின்றனர்.

பெரும் செல்வத்தைத் தரும் பெற்றோல் வளத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக, அதி சக்தி வாய்ந்த நாடுகள் மத்திய கிழக்கில் மோதல்களை உருவாக்கி பல லட்சம் பேர் கொல்லப்படக் காரணமாகின்றன. தனி மனிதர்களும் இதற்குச் சளைத்தவர்கள் அல்லர். தமது எதிரிகளை ஈவிரக்கமின்றித் திட்டமிட்டுக் கொல்கின்றனர். தவறான வழியிற் பெற்ற சிசு தன்னைக் காட்டிக் கொடுத்துவிடும் என்ற ஒரே காரணத்துக்காக, பெற்ற தாயே சிசுவைக் கொல்லும் சம்பவங்கள் குறித்த செய்திகளும் அடிக்கடி ஊடகங்களில் வெளியாகின்றன.

மனிதர்கள் மனிதர்களைக் கொல்வதுடன் மட்டும் நின்றுவிடாது, வாய் பேசாத மிருகங்களையும் வகை தொகையின்றிக் கொன்று குவிக்கின்றனர். கொரோனா வைரஸின் பிறப்பிடமான சீனாவின் வுஹான் மாகாணத்தில் பாம்பு முதலிய பலவகையான உயிரினங்கள் உணவுக்காகக் கொன்று குவிக்கப்படுவது அனைவரும் அறிந்ததே.

போர்த்துக்கேயருக்கு உணவுக்காகப் பசு வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டபோது, அதனை மறுத்து இந்தியாவுக்குத் தப்பிச் சென்ற "ஞானப்பிரகாசர்" வாழ்ந்த யாழ்ப்பாணத்திலேயே கன்றுத்தாச்சியான பசுவை இறைச்சிக்காக வெட்டும் கொடுமை அரங்கேறியது.

சக மனிதர்களுக்குத் துன்பம் செய்யாமல் வாழ்ந்தவர்கள், இன்னோர் உயிர் தவறுத லாகப் பாதிக்கப்பட்டால் அதற்காக வருந்தியவர்கள் யாராவது இருந்திருக்கின்றார்களா? என்ற வினா எம்மத்தியில் எழுகின்றது. முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி, மயிலுக்குப் போர்வை கொடுத்த பேகன், பசுவுக்கு நீதி வழங்கிய மனுநீதி கண்ட சோழன் ஆகியோருடன் இந்த வரலாறு முடிந்துவிடவில்லை. " வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்று நீரின்றி வாடிய பயிருக்காக மனம் வாடிய இராமலிங்க வள்ளலார் வரை இது தொடர்கின்றது. ஈழத்து மகாகவி து.உருத்திரமூர்த்தியூடாக இந்த ஜீவகாருண்ய மரபு ஈழத்திலும் வேர்விடுகின்றது. தான் அறியாமற் செய்த சிறு தவறு ஒன்றால் தவறுதலாக இறந்துவிட்ட சிறிய பூச்சிக்காக ஈழத்து மகாகவி து.உருத்திரமூர்த்தி அடைந்த துன்பத்தையும் குற்ற உணர்வையும் அவரது "புள்ளி அளவில் ஒரு பூச்சி" என்ற கவிதை வெளிப்படுத்துகின்றது.

*புத்தகமும் நானும்,*
*புலவன் எவனோதான்*
*செத்த பின்னும் ஏதேதோ சேதிகள் சொல்ல*
*மனம் ஒத்திருந்த வேளை!*

*ஒழுங்காக அச்சடித்த*
*வெள்ளைத் தாள் மீதில்,*
*வரியின் முடிவினிலே,*
*பிள்ளைத் தனமாய் பிசகாகப் போட்ட காற்*
*புள்ளியைக் கண்டு*
*புறங்கையால் தட்டினேன்.*

*நீ இறந்து விட்டாய்!*
*நெருக்கென்றதென் நெஞ்சு*
*வாய் திறந்தாய், காணேன்,*
*வலியால் உலைவுற்றுத்*
*'தாயே' என அழுத*
*சத்தமும் கேட்கவில்லை.*

*கூறிட்ட துண்டுக் கணத்துள் கொலையுண்டு*
*ஓர்*
*கீறாகத் தேய்ந்து கிடந்தாய்,*
*அக்கீறுமே*
*ஓரங்குலம் கூட ஓடியிருக்கவில்லை.*

*காட் டெருமை காலடியிற்*
*பட்ட தளிர்போல,*
*நீட்டு ரயிலில்*
*எறும்பு நெரிந்ததுபோல்,*
*பூட்டாநம் வீட்டிற் பொருள்போல*
*நீ மறைந்தாய்.*

*மீதியின்றி நின்னுடைய*
*மெய் பொய்யே ஆயிற்று*
*நீதியன்று நின்சா,*
*நினையாமல் நேர்ந்ததிது,*
*தீதை மறந்து விட மாட்டாயோ சிற்றுயிரே!*

*காதில் அப்பூச்சி கதை ஒன்றே வந்துவந்து*
*மோதிற்று;*
*மீண்டும் படிக்க முடியவில்லை*
*பாதியிலே பக்கத்தை மூடிப்*
*படுத்துவிட்டேன்.*




எனக் கவிதை அமைகிறது.

கவிஞர் புத்தகத்தை மெய்மறந்து வாசித்துக் கொண்டிருந்தபோது, புத்தகத்தாளில் பொருத்தமற்ற ஓரிடத்தில் காற்புள்ளி போட்டது போன்ற அடையாளம் இருந்தது. எதற்காக அது இருக்கிறது என்று சிந்தித்துக் கொண்டே புறங்கையால் அதனைத் தட்டிவிடுகிறார். அது காற்புள்ளி அன்று. ஒரு சிறு பூச்சி கவிஞரின் கைபட்டதும் இறந்துவிடுகிறது.

"நீ இறந்து விட்டாய்!

நெருக்கென்ற தென் நெஞ்சு" என்னும் பாடலடிகள் சிறு பூச்சியின் மரணத்தால் கவிஞர் அடைந்த துயரத்தை, உள நெருக்கீட்டை வெளிப்படுத்துகின்றன. அந்தப் பூச்சி மரணம் நெருங்கிய வேளையில் வலியால் வாய்விட்டுக் கதறவில்லை. "தாயே என அழுத சத்தமும் கேட்கவில்லை" இந்த மௌன மரணம் கவிஞரை மேலும் துன்புறுத்துகின்றது. துன்பத்திலிருந்து மீள்வதற்காக அந்தச் சிறு பூச்சியிடம் கவிஞர் மன்னிப்புக் கேட்கின்றார்.

*"நீதியன்று நின்சா,*
*நினையாமல் நேர்ந்ததிது,*
*தீதை மறந்து விட மாட்டாயோ சிற்றுயிரே!"*

உலகிலுள்ள ஜீவராசிகள் எல்லாவற்றிலும் சிறந்ததாக, ஆறறிவு உடையதாகத் தன்னைத்தானே சிறப்பித்துக் கொண்டிருக்கும் மனிதகுலத்தைச் சேர்ந்த ஒருவர், சிற்றறிவுடைய சாதாரண பூச்சியிடம் மன்னிப்புக் கேட்கும் உன்னத பண்பு, உயர்ந்த ஜீவகாருண்ய உணர்வு மனதை நெகிழ வைக்கின்றது. இன்னோர் உயிரினத்திற்குத் தன்னால் ஏற்பட்ட துன்பத்துக்காகத் தான் வருந்தும் இந்த நிலை எல்லோரிடமும் ஏற்பட்டுவிட்டால் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற குற்றங்கள் உலகில் இல்லாமல் போய்விடுமே!





அலட்டல் அப்புத்துரை

## கத்தரிக்காயும் கடுப்பும்

அந்தக்காலத்தில வாத்தியார் தொழிலுக்கு சமூகத்தில நல்ல மதிப்புக் கொடுத்தவை. நல்ல கவுரவம் கொடுத்துதான் அவையளோட பழகுவினம். குறிப்பாய்ச் சொல்லுறதெண்டால், வாத்தியார் தொழில் பார்த்த தமிழ் பண்டிதர்மாரிலை பலபேர் தங்கடை நாளாந்தச் செயற்பாடுகளில, முழுக்கை நாசனலோடை கம்பீரமாக கனவான்கள் போல உடுப்பு உடுத்திக் கொண்டுதான் பள்ளிக்கூடத்துக்கோ, இல்லை வெளியிலயோ போறவை. அதுமட்டுமில்லாமல் அவர்களின்ரை உரையாடலிலும் சுத்தத் தமிழ், இலக்கண நடை கலந்திருக்கும். மொத்தத்தில தமிழ்க் கலாசாரம், பண்பாடு அவர்களின்ரை நாளாந்த வாழ்வியலில் பிணைஞ்சிருக்கும்.

அந்தக்காலத்தில நானறிந்த வாத்தியார் தொழில் பார்த்த பண்டிதர் ஒருத்தரைப் பற்றி இந்த இடத்தில ஒரு கதை சொல்லித்தானாக வேண்டும்.

எங்கட ஊர்ப் பள்ளிக்கூடத்தில அவரிட்ட ஆறாம் வகுப்புத் தொடக்கம், ஒன்பதாம் வகுப்பு வரை தமிழ்ப்பாடம் படிச்சவை யில நானும் அடக்கம். அவர் கடும் அக்கறை எடுத்துப் படிப்பிச்சபோதிலும், எஸ்.எஸ்.ஸி சோதனையில பாஸ் பண்ண என்னால முடிஞ்சதில்லை. அடுத்தவருஷம் திருப்பி சோதனை எழுதியும் தமிழ்ப்பாஷை, தமிழ் இலக்கணம் இரண்டிலையும் நான் பெயில்தான். ஆனால் அக்கறையோட அவரிட்ட பாடம் படிச்சு, ரெண்டு தமிழ்ப்பாடங்களிலயும் நல்ல 'ரிசல்ட்'எடுத்து, தொடர்ந்து ஏ.எல், யுனிவெர்சிட்டி எண்டு பயணம் செய்து, தங்கடை வாழ்க்கையில நல்லநிலைமைக்கு வந்து, வெவ்வேறு துறைகளில கொடிகட்டிப்பறக்கிற பலபேர் இண்டைக்கும் இருக்கத்தான் செய்யினம் எண்டது வேறை கதை.

குறிப்பிட்ட அந்தப்பண்டிதர் ஐயா ஒரு நாள் தன்ரை வீட்டுத்தேவைக்கு காய்கறி வாங்க சுன்னாகம் சந்தைக்குப் போயிருக்கிறார். மரக்கறி வியாபாரம் செய்யிற ஒரு வயதான ஆச்சியிட்டை, தனக்கே இயல்பான இலக்கணத் தமிழிலை " மாதோ! வழுதுணங்காயின் கிரயம்தான் யாதோ ? "எண்டு கேட்டிருக்கிறார். அதாவது "கத்தரிக்காயின் விலை என்ன?" என்பதைத்தான் அவர் அப்படி இலக்கணச் சுத்தத்தோடு கேட்டிருந்தார்.

அன்றைக்குப்பார்த்து, வழக்கத்துக்கு மாறாக, தான் விற்க வைத்திருந்த மரக்கறிகள் விலை போகவில்லையே என்ற கடுப்பில் இருந்த ஆச்சிக்கு எங்கடை பண்டிதர் ஐயாவின்ரை அந்த இலக்கண வித்துவம் இன்னும் கடுப்பை ஏற்றியது.

" என்ன காணும், விடியக்காலையும் அதுவுமாய் நளினம் விடுகிறீர்? கத்தரிக்காய் வேணுமெண்டால் விலையைக்கேட்டு, வாங்கிறதை விட்டிட்டு உம்மட பண்டிதத்தமிழை அவிட்டுவிட்டு எனக்கு கடுப்பேத்தாமல் நடையைக் கட்டும்" என்று பொரிந்து தள்ளிவிட்டாவாம். அந்தச் சம்பவத்தை அருகில் இருந்து பார்த்த என்ரை அயல்வீட்டுக்காரர், எங்களுக்கு அந்தச் சம்பவத்தைச் சொல்லிக் கேலி செய்தது இப்பவும் எனக்கு நினைவிலை இருக்குது. நாலுபேர் கூடி ஒரு விசயத்தைப் பற்றிக் கதைக்கேக்க நான் இடைநடுவில புகுந்து 'எங்கடை பண்டிதர் ஐயா கத்தரிக்காய் வாங்கப்போய் மூக்கு உடைபட்டது போலத்தான் உங்கடை கதை இருக்குது'என்று சமய சந்தர்ப்பம் இல்லாமல் அலட்டி, அந்த ஆள்களால் ஏளனப்படுத்தப்படுவதுண்டு. என்ன செய்யட்டும், என்ரை வாய் அப்பிடி . சும்மாய் கிடவாது.

உலகத்தில இண்டைக்கு வெகுவேகமாக எல்லாவற்றிலும் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டு இருக்குது. நாங்களும் அந்த மாற்றங்களுக்கு இணையாக மாறிக்கொண்டு தான் இருக்கிறம். அல்லது எம்மை நாமே மாற்றிக்கொண்டுதான் பயணிக்கிறம். இந்த லட்சணத்தில, எங்கட பண்டிதர் ஐயா போன்ற ஒரு சிலரும் வீம்போட செய்றபட்டுக்கொண்டுதான் இருக்கினம். சாதாரணதொரு வாசகனாலை அல்லது ரசிகனாலை இலகுவில் கிரகித்துக்கொள்ள முடியாத அளவுக்கு எழுதியோ, பேசியோ, தத்தமது மேதாவித்தனத்தை வெளிப்படுத்த முனையும் ஒரு சில பேரின்ரை அத்தகைய உத்தி, அவர்களைத் தனிமைப்படுத்திவிட வழி வகுக்கும் என்பதை அவர்கள் உணரத்தவறி விடுகின்றனர் எண்பதுதான் கவலை. எங்கடை தனித்துவம், மொழியின் சிறப்பு, பாரம்பரியம், எல்லாத்தையும் கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்குத்தான். ஆனால் ஊரோடு ஒத்து ஓடு என்று எங்கடை பெரியவை சொல்லி இருக்கினமெல்லோ ?

# சொற்சிலம்பம் போட்டி 2

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | | ❀ | 5 |
| 6 | | | | ❀ | ❀ | 7 | |
| 8 | | | | 9 | | ❀ | ❀ |
| ❀ | | ❀ | ❀ | | ❀ | 10 | 11 |
| 12 | ❀ | 13 | 14 | | ❀ | 15 | |
| 16 | 17 | | | ❀ | 18 | | |
| 19 | | ❀ | | ❀ | | ❀ | |
| ❀ | 20 | | ❀ | ❀ | 21 | | |

அனுப்புபவர் பெயர்:........................................

முழுமையான தபால் விலாசம்: ................................

........................................................

கையொப்பம்:..............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. தபாற்கந்தோர் தலைவர்
6. செயல்
7. விரோதம்
8. நிலைகெடு
10. தோன்று (சூரியன்)
13. 30 நாட்கள் கொண்டது
15. சிறகடித்துச் செல்
16. ஒரு கிராமியப் பெண் தேவதை
18. இரக்கம்
19. பூட்டு என்ற ஏவலின் எதிர்ப்பதம்
20. கண்ணின் மணிக்குள் இருப்பது (குழம்பியுள்ளது).
21. சேதம் உண்டுபண்ணும் காற்று.

### மேலிருந்து கீழ்

1. செய்யக்கூடாத
2. உலகம்
3. தோட்டத் தொழிலாளர்கள் வாழும் வீட்டு வரிசை
4. பூட்டானின் தலைநகரம்
5. ஆபரணம்
9. தினுசு வகை
10. மேலதிகம்
11. திறப்பு
12. சுணங்கு
13. அம்மாவின் சகோதரன்
14. உறைந்த பால்
17. பாற்பசு
18. தனித்துவ குணவியல்பு

**சொற்சிலம்பம் போட்டி இல.02**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**14.02.2020 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக**
தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

போட்டியில் கலந்துகொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன் களையும் நிரப்பி அனுப்பலாம்.
- உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே


**ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=**

பணப்பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயன் சஞ்சீவில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல.01 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் **15.02.2020** சனிக்கிழமை சஞ்சீவியில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி 1 இற்கான விடைகள் அடுத்தவார இதழில் பிரசுரமாகும்**

## முருங்கை நெல்லி துவையல்



### தேவையான பொருள்கள்

முருங்கைக்காய்கள் - 5
நெல்லிக் காய்கள் - 10
செத்தல் மிளகாய்கள் - 8
துருவிய தேங்காய் - 1/2 கப்
வெள்ளை உழுத்தம்பருப்பு - 1தேக்கரண்டி
புளி - சிறிதளவு
பெருங்காயம் - சிறிதளவு
உப்பு - தேவையான அளவு
கறிவேப்பிலை - சிறிதளவு

### செய்முறை

முருங்கைக்காயைத் துண்டுகளாக வெட்டி அவித்து அதனுள் இருக்கும் சதையை எடுத்துக் கொள்ளவும். நெல்லிக்காயை அவித்து விதைகளை நீக்கவும்.
செத்தல் மிளகாய், தேங்காயத் துருவல், வெள்ளை உழுத்தம்பருப்பு, பெருங்காயம் என்பவற்றை வறுத்து எடுத்துக் கொள்ளவும்.
கறிவேப்பிலையையும் தாளித்து எடுத்துக் கொள்ளவும் (தேவையெனில் பச்சையாகவும் சேர்த்துக் கொள்ளலாம்).
மேற்கூறிய அனைத்தையும் ஒன்றாக இட்டு அதனுடன் உப்பையும் சேர்த்து சிறிது கரகரப்பாக அரைத்து எடுக்கவும்.
சுவையான முருங்கை நெல்லித் துவையல் தயார்.
(விரும்பினால் சிறிதளவு நல்லெண்ணெய் விட்டு துவையலை வதக்கியும் எடுக்கலாம்)

### கவலையை விடுங்கள்

# கூந்தல் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு



தலைமுடிப் பிரச்சினைகளைத் தீர்க்க நாம் எத்தனையோ வழிகளைக் கையாண்டு களைத்துப் போய் இருப்போம். எந்தக் கடையில் என்ன எண்ணெய் வாங்கி வைத்தால் தலைமுடி வளரும், அடர்த்தியாகும் என்று தேடித்தேடி சந்தையில் கிடைக்கும் புதிய புதிய எண்ணெய் வகைகளை வாங்கிப் பயன்படுத்துவோம். ஆனால் அதன் மூலம் எந்தவித மாற்றங்களும் இருக்காது.
அவற்றை விடுத்து இயற்கையான முறையில் எமது தலைமுடியைப் பராமரித்து வந்தால் எமக்கு தலைமுடிப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வும் கிடைக்கும், மனத்திருப்தியும் உண்டாகும். இயற்கையான முறையில் கிடைக்கும் பொருள்களைப் பயன்படுத்தி எவ்வாறு எண்ணெய் தயாரிக்கலாம் என இன்றைய மகளிர் பகுதியில் உங்களுக்காக.

### தேவையான பொருள்கள்

சுத்தமான தேங்காய் எண்ணெய் - 1/4 லீற்றர்
(செக்கில் வார்த்த எண்ணெய் மிகவும் நல்லது)
செம்பருத்திப் பூக்கள் - 5
பெரிய நெல்லிக் காய்கள் - 5
கறிவேப்பிலை - 1/4 கப்
மருதாணி இலை - 1/4 கப்
கருசலாங்கண்ணி இலை - 1/4 கப்
வெந்தயம் - 50கிராம்
கருஞ்சீரகம் - 50கிராம்
சிறிய வெங்காய ஜூஸ் - 1/4 கப்
கற்றாழை ஜெல் - 1/4 கப் அல்லது ஒரு பெரிய மடல்

### செய்முறை

அடுப்பில் ஒரு பாத்திரத்தை வைத்துச் சூடாக்கி அதில் (சாதாரண நெருப்பில்) தேங்காய் எண்ணெயைவிட்டுக்கொதிக்க விடவும், எண்ணெய் கொதித்துக் கொண்டு இருக்கும்போதே அதில் கற்றாழை ஜெல், சிறிய வெங்காய ஜூஸ், செம்பருத்திப் பூ என்பவற்றை இட்டுக் கொதிக்க விடவும். தொடர்ந்து அதில் கறிவேப்பிலை, மருதாணி இலை, கருசலாங்கண்ணி இலை, வெந்தயம், கருஞ்சீரகம் என்பவற்றையும் சேர்த்து நன்றாகக் கொதிக்க விடவும்.

எண்ணெய் நன்றாகக் கொதித்ததும், அடுப்பிலிருந்து இறக்கி இரண்டு நாள்கள் அப்படியே ஊற வைத்து, பின்னர் கண்ணாடிப் போத்தலொன்றில் விட்டுவைத்துப் பயன்படுத்தவும்.

தினமும் அல்லது வாரம் இருமுறை இந்த எண்ணெயை தலைக்குத் தேய்த்து ஐந்து முதல் பத்து நிமிடம் வரை நன்றாக மசாஜ் செய்து வர வெறும் மூன்று மாதங்களில் மாற்றங்களை உணர முடியும்.

அடர்த்தியான தலைமுடி வளர்ச்சிக்கு, தலைமுடியைக் கறுப்பு நிறமாக ஆக்க, தலைமுடி உதிர்வு, பொடுகு மற்றும் இளநரை என்பவற்றைக் கட்டுப்படுத்த, தலை குளிர்ச்சியேற்பட என ஒட்டுமொத்த கூந்தல் பிரச்சினைகளுக்கும் இந்த எண்ணெய் தீர்வினைப் பெற்றுத்தரும்.
"இனி நீங்கள் நினைத்தாலும் உங்கள் தலைமுடி வளர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாது"

(தொடர்ச்சி)

# சாருமதியின் வீடு

மிக நிறைவாக, இந்தத் திருமணத்தையே அவள் தனது வாழ்வின் உன்னத தருணமாகக் கருதி அவள் கிளம்புகிறாள் என்றால், அவளை நான் வாழ்த்தாமல் இருப்பது அந்தச் சந்தர்ப்பத்திற்கு இசைகேடாகிப் போகலாம்.

இயல்புக்கு மீறி என்னாலும் அவளிடம் அதிகம் பேச முடியவில்லை. டீயும் பிஸ்கட்டும் கொண்டு வந்து தந்தாள். அவளால் அந்தச் சந்தர்ப்பத்தில் அதை மட்டுமே தர முடிந்தது. அதிலிருந்து அவளது மகிழ்ச்சி குறித்து எதையும் ஊகிக்க முடியவில்லை. இருவருக்குமிடையே இடைவெளி விழுந்திருந்தது. திரை கழன்று இருவரும் பேச ஆரம்பித்தபோது ஒவ்வொருவராக ஆட்கள் வரத் தொடங்கினார்கள். அவளது பழைய சிநேகிதிகளும் கூட எங்கிருந்தோ மோப்பம் பிடித்து வந்துவிட்டார்கள். விடைபெற்றபோது அவள் என்னைப் பார்த்து இயல்பாகப் புன்னகைத்தாள். நான் அவள் கரத்தைப் பற்றிக் குலுக்கினேன்.

"விஷ் யூ ஓல் த பெஸ்ட்..." என வாழ்த்தினேன்.

குளிர்ந்திருந்த அவள் கரம் கொஞ்ச நேரம் என் கைக்குள் இருக்கவேண்டும் போலிருந்தது.

"மதி..." என்று அவளது அம்மாவின் குரல் கேட்டபோது அவள் என்னிடமிருந்து விலகிக் கொண்டாள். "ஓகே...பை..." என விடைபெற்றுக் கொண்டேன்.

அதன்பிறகு அவள் போய்விட்டாள் என்பதனைச் சித்தி மூலம் அறிந்து கொண்டேன். நீண்ட நாட்களுக்கு அவள் வாசலுக்கு வந்து விடை பெற்ற கணங்கள் என் உள்மனதைக் கிளறிக்கொண்டேயிருந்தன. அன்று வாசலுக்கு வந்த கடைசிக்கணத்தில் அவள் என்னிடம் என்ன சொல்ல வந்தாள்...? அவள் கண்களில் இருந்தது என்னவென்பதை என்னால் பின்வந்த நாட்களில் யூகிக்க முடியவில்லை.

அவளது திருமணம் இந்தியாவில் நடந்ததென்றும், சில வாரங்கள் கொழும்பில் நின்ற அவளது அம்மாவும், தன்னுடைய மகன்மாருடன் சென்றுவிட்டாள் என்றும், பிறகு அறிந்து கொண்டேன். அவளுக்கு நெருக்கமான உறவாயிருந்த அவளது மாமா வீட்டில் அவளது திருமணப் புகைப்படத்தையும் , அவளது குழந்தையின் புகைப்படத்தையும் பார்க்கக் கிடைத்தது. அவளைப் பற்றிக் கடைசிக் கணங்களில் ஏற்பட்ட கலக்கம் அந்த நிமிடத்தில் தீர்ந்து போனது. அவள் நன்றாகத்தான் இருக்கிறாள்.

அவளோடு கதைத்துத் திரிந்ததாகச் சொல்லப்பட்ட சேந்தனிடத்தில், அவள் போன பின்னர் எந்தவித மாற்றங்களும் ஏற்படவில்லை. அதனால் என்னிடம் தொடர்ந்து எந்தவிதமான சஞ்சலமும் ஏற்படவில்லை. அதன் பிறகு சாருமதியின் வீடு கொஞ்சக்காலம் அவளுடைய ஒன்றுவிட்ட மாமாவின் பராமரிப்பில் இருந்தது. ஐந்தாறு மாதங்கள். அப்போது நாங்கள் பெரிய நெல்லிக்காய் வேண்டி அங்கு போவோம். ஒற்றை ஒற்றையாக விழும் நெல்லிக்காய்களை உப்பில் ஊறவைத்துச் சாப்பிடுவோம். அப்போதெல்லாம் நான் அவளை இரக்கத்தோடும் அவளது தோழிகளை எகத்தாளத்தோடும் நினைத்துக் கொள்வேன். ஆனால், பிறகு அதற்கும் வழியில்லாமல் போனது.

ஐந்தாறு மாதங்களில்,அவள் வீட்டு மதிலுக்குமேல், மூன்றடி உயரத்திற்கு தகரங்கள் அடிக்கப்பட்டு கேற் அருகில் மண் அணை கட்டி காவலரண் உருவானது. உள்ளே மேலும் கட்டுமானப்பணிகள் நடப்பதற்கு ஏதுவாய் மணல், சல்லியோடு உழவு இயந்திரங்கள் ஒழுங்கையால் போய்த் திரும்பும். உள்ளே பெரிய வேலைப்பாடுகள் நடப்பதாகப் பானு சொல்வாள். அங்கே இரவிரவாய் வேலை நடக்கிறதென்றும், யாரோ பெரியவர்கள் தங்குகின்ற அசுமாத்தம் இருந்ததென்றும் ஊருக்குள் பேசிக்கொண்டார்கள்.

ஆனையிறவுப் பக்கம் அடிபாடு தொடங்க முதல் அந்த வீடு சில நாட்கள் ஒரே கூச்சலும், கும்மாளமுமாக இருந்தது. போராட்டப் பாடல்கள் உள்ளிருந்து கசட் ரெக்கோடர்களில் உணர்ச்சி ததும்ப எழும்பி உயிரை அருட்டுவதாக இருக்கும். அதன்பின் அடிபாடுகள் நடைபெறும் காலங்களில் விவிரிக்க வியலாத ஒரு நிசப்தம் அந்த வீட்டைச் சூழ்ந்திருக்கும். இடையில் ஒருநாள் அந்த வீட்டைக் கடந்து சென்ற வேளையில்,சேந்தனை அவ்விடத்தில் கண்டேன். சீருடையுடன் இருந்தான். எனக்கு அவனை அங்கு கண்டது அதிர்ச்சியாயிருந்தது. அவன் முகத்தில் எந்த மாறுதலும் இல்லை. உள்ளே போய்விட்டான். அதற்குப் பிறகு அவனைக் காணும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்ட வில்லை.

ஒரு வருடம் அவர்கள் மாறிமாறிப் பல குழுக்களாக அந்த வீட்டில் இருந்தார்கள். அதற்குப் பிறகு அவர்களும் அந்த வீட்டில் இருக்க முடியாமற் போனது. மாறிமாறி வெடிச்சத்தங்கள் துரத்திய ஒரு பொழுதில் அவர்கள் அந்த இடத்தைக் கைவிட்டு வெளியேறினார்கள். பிறகு, மறுபடியும் அந்த இடத்தை அவளது மாமா பராமரிக்கத் தொடங்கினார்.

அந்த வீட்டில் இடைக்கிடை சோதனைகளும், ஆயுதத் தேடல்களும் இடம்பெறும். அங்கே ஒருதடவை ஒளித்து வைக்கப்பட்ட சில ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டன. அதன்பிறகு அந்த வீடு கடும் பாதுகாப்பின் மத்தியில் அமளிதுமளிப்பட்டது. மாமா கூட அங்கு வருவது தடைப்பட்டது. பிறகு கொஞ்சநாளில் அக்குவேறு ஆணிவேறாகத் துளைக்கப்பட்ட பிறகு அந்த வீடு மாமாவிடம் கையளிக்கப்பட்டது.

அங்கு நெல்லிமரத்தின் கீழ்,பெரியதாக ஒரு பதுங்குகுழி அமைக்கப்பட்டிருந்ததென்றும், அதற்குள் இரண்டு, மூன்று அறைகள் அமைந்திருந்ததென்றும் கதையோடு கதையாகச் செய்திகள் வந்தன. ஒழுங்கைக்குள் இருந்ததாலோ என்னவோ மற்றைய வீடுகள் போல் இராணுவம் அந்த வீட்டைத் தான் எடுத்துக் கொள்ளவில்லை. தொடர்ச்சியாக மாமாவும் அங்கு போய்த் தங்கி வந்ததனால், அந்த வீடு நெடுநாட்களுக்குப் பின் மீட்கப்பட்டதாகச் சொல்லிக் கொண்டார்கள். பிறகு அங்கிருந்த நெல்லிக்காய் நினைவு மடிந்து போன ஒரு பொழுதில் மீண்டும் அந்த நினைவை மேலெழச் செய்யும் வண்ணம் அங்கு போக வேண்டி நேர்ந்தது. அது முதலாவது சமாதான காலத்திற்கு முன்னர் வெடித்த போராகவிருந்தது கடும் ஷெல் மழைக்கு மத்தியில் மீள முடியாத திணறல் ஏற்பட்டது.

ஒய்வொழிச்சல் இல்லாத ஷெல்லடிக்குள் இரு தரப்புகளுக்கும் இடையிலான யுத்தத்தில் சிக்கிக்கொண்டபோது ஒவ்வொன்றாகக் குடும்பங்கள் விலகி ஓடின. நாங்கள் ஒரு இருபது முப்பது குடும்பங்கள் எஞ்சியிருந்தோம். ஓடுவதற்கு இடமின்றி சாருமதி வீட்டு பங்கருக்குள் தஞ்சம் புகுந்தோம். ஐந்து பகல், ஐந்து இரவு. அரிசிமாவும் பிஸ்கட்டும் தேநீருமாக அங்கேயே வசித்தோம். கொங்கிரீட் அறைகளுடனிருந்த உறுதியான பங்கர்.

வெடிச்சத்தங்கள் இடைவெளி விட்டபோது அவளது வீடும், நெல்லியும் அவளது நினைவை என்னுள் வளர்த்துக்கொண்டே இருந்தன. அப்போது நெல்லியில் காய்கள் இருக்கவில்லை. ஆனாலும் நிமிர்ந்து அந்த மரத்தைப் பார்ப்பதற்கு எனதியல்பு தவறிவிடவுமில்லை.

தொடர்ந்து தங்க முடியாமல் ஊரை விட்டு விலகியபோது அவளது வீட்டுச்சுவர்கள் ஷெல் சிதறல்களால் உருக்குலைந்திருந்ததைக் காணமுடிந்தது. முதல்நாளில் கூட அங்குதான் இருந்தோமா...? என்ற ஆச்சரியம் பீதியாய் உருமாற எங்கள் ஊரை முதல் தடவையாகப் பிரிந்து வெளியேறினோம். இரு வருடங்களின்பின் மீளவும் ஊர் திரும்பியபோது,எங்களுடைய வீடுகள் போலவே அவளுடைய வீடும் யன்னல்கள் நொருங்குண்டு உருக்குலைந்திருந்தது. நெல்லி மரத்தடியிலிருந்த பங்கர் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டிருந்தது.

மாமா மட்டும் மீண்டும் மீண்டும் அவளது வீட்டைக் கவனமெடுத்து பராமரித்துக் கொண்டிருந்தார். எனக்கோ அவளது வீட்டைப் பார்க்கும் கணந்தோறும் அவள் ஊரை விட்டுப் பிரிந்த நாளும், அந்த வீட்டில் ஒருபோது சேந்தனைச் சீருடையில் கண்டதுமே மனதில் நிழலாடிக் கொண்டிருந்தன. அவனைப் பற்றிய தகவல்கள் மட்டும் எனக்கு அதன் பின்னர் கிடைக்கவில்லை. சாருமதி மட்டும் சுக மாக இருப்பதாய் அறிந்தேன். பிறகு எனக்கும் கல்யாணமாகி,குழந்தைகள் பிறந்து அவர்களும் பள்ளிக்கூடம் போய் நெல்லிக்காயில் ஆசை வைத்து நெல்லிக்காய் கேட்கிற அளவுக்குக் காலம் வளர்ந்து போயிற்று.

ஒருநாள், சின்னவனின் ஆய்க்கினை தாளாது சாருமதி வீட்டுக்குப் போய் நீண்ட கொக்கத்தடி எடுத்து நெல்லிக்காய்களைத் தட்டி விழுத்திக்கொண்டிருந்தேன். அருகிலே வெடி வைத்துத் தகர்க்கப்பட்ட பங்கர் புதர் மூடிக் கிடந்தது. அதைப் பார்த்த போது சேந்தன் நினைவில் வந்தான். நாங்கள் ஆபத்துக்கு ஒதுங்கிய பங்கர். அவன் ஒருகாலத்தில் தங்கியிருந்த இடமாயிருந்திருக்கும். அவன் அங்கே பெரிய பதவியில் இருந்தானாம். கடைசிப் போரில் காணாமல் போய்விட்டான். அவனைப் பற்றிய எந்தத் தடயமும் இல்லாமல் அவனது குடும்பம் அல்லாடிக் கொண்டிருந்தது.

நெல்லிக்காய்களோடு நானும் மகனும் திரும்பிக் கொண்டிருந்தபோது, மாமாவும் இன்னொருவரும் வீட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டுக் கீழிறங்கிக் கொண்டிருந்தனர்.

முன்பு வாசலிலிருந்து வீட்டை நோக்கிச் சரித்து வளர்க்கப்பட்ட பசிய புல் வேலியின் அடையாளம் கொஞ்சமும் இல்லை. மாமா தெருவில் இறங்கியதும் நான் அவரிடம் கேட்டேன்.

"என்ன மாமா...வாடகைக்கு விடப் போறீங்களோ...?"

"ஏன் வாடகைக்கு விட வேணும்? இவ்வளவு காலம் பாத்த நான் இனியும் பாக்கமாட்டனோ...?" அவரது குரலில் ஆதங்கம் இருந்தது.

"அப்ப ஆர் மாமா வீட்டை இப்பிடிப் பாத்திட்டுப் போறது...?" மாமா ஒரு நிமிடம் மௌனமானார். கனத்த கணமொன்று விடைபெற்றபோது பெருமூச்சோடு சொன்னார்.

"வீட்டை விக்கிறதெண்டால், ஆக்கள் பாத்திட்டுத்தானே வாங்குவினம்...."

"என்ன ..." என் சொற்கள் வீறிட்டன. அது சாருமதியின் சீதன வீடு. ஒரு காலத்தில் வீடு திரும்புவாள் என எதிர்பார்க்கப்பட்ட சாருமதி,எதற்காக அவள் வீட்டை விற்கவேண்டும்...?

அவளுக்கென்ன குறைச்சல் அங்கே!

"அப்ப, சாருமதி இனி வரவே மாட்டாளா....?" என்றேன் அளவிடமுடியாத் துயருடன்.

"வரமாட்டாள்..." என்றார் மாமா திடமாக.

"ஏன்...?" மீண்டும் கனத்த நிமிடங்கள்.

"சாருமதியின்ரை பிள்ளை போன வருஷம் ஒரு அக்சிடென்ரிலை ஆப்பிட்டிட்டான்..."

"அது போன வருசமேல்லோ... சுகமாப் போச்சு தெண்டறிஞ்சன்..." எனது குரலை உடைத்து மாமா சொன்னார்.

"இல்லை,அவன் இன்னும் கோமா நிலையிலை தான்.இன்னும் கூட நினைவு வரேல்லை... " அதற்கு மேல் ஒன்றும் என் காதில் விழவில்லை.

நான் அவளது வீட்டைக் கடைசி முறையாகப் பார்க்கிறேன். அவளது நினைவுகளை, கூடவே சிலதுளி அவனது நினைவுகளையும் சுமந்த அந்த வீடு இனி,என் பார்வையில் விழப் போவதில்லை.எனது மனதில் பல வருடங்களாக வட்டமிட்ட அவளது முகம் , இப்போது என்னை அலைக்கழிக்கத் தொடங்குகிறது.

(தொடர்ச்சி)

# பட்டங்கள்!

**இலாபம் கருதி பட்டப்போட்டிகளில் நாம் பங்கு பற்றுவதில்லை. எமது திறமையை வெளிப்படுத்தும் களமாகவே இந்தப் போட்டிகளைக் கருதுகிறோம் .**

கே: வடமராட்சி பட்டப்போட்டி தவிர்ந்த வேறு ஏதாவது பட்டப்போட்டிகளில் பங்கு பற்றியுள்ளீர்களா?

ப: **ஆம், 2014 ஆம் ஆண்டு வட மாகாண ரீதியாக இடம்பெற்ற பட்டப்போட்டியில் பங்குபற்றினேன். அப்போது ஆளுநர் விருது வழங்கிக் கௌரவித்தார். அத்தோடு அரியாலையில் இடம்பெற்ற சுதேச விளையாட்டு விழாவில் இடம்பெற்ற வட மாகாண ரீதியிலான பட்டப்போட்டியிலும் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றுக்கொண்டோம். பட்டப்போட்டிகளுக்காக நாம் இது வரை முப்பதுக்கு மேற்பட்ட பட்டங்களைக் கட்டியுள்ளோம்.**

கே: வல்வெட்டித்துறைப் பட்டப்போட்டி என்றாலே, முதலிடம் பிரசாந்துக்குத்தான் என்ற நிலை வந்திருக்கிறது., இவ்வாறு தொடர்ச்சியாக வெல்வதுகூட, எதிர்மறையான விமர்சனங்களை உருவாக்கியிருக்குமே?

ப: ஆம், சில விமர்சனங்கள் எனது தொடர் வெற்றிக்கு எதிராகவும் எழுந்துள்ளன. குறிப்பாக பட்டப் போட்டிக்கான 6 நடுவர்களில் ஒருவர் எங்களுக்குச் சாதகமாகச் செயற்படுவதாகச் சிலர் கூறினார்கள். அவர்களின் தனிப்பட்ட முயற்சியால் நிர்வாகத்துக்கு அழுத்தம் கொடுத்து அந்த நடுவரை 2019 ஆம் ஆண்டு நீக்கியும் இருந்தார்கள். எனினும் நாங்கள் அதே ஆண்டும் முதலிடத்தைப் பெற்றோம். நடுவர்களின் பக்கச்சார்பு காரணமாக அல்லாமல், எமது திறமையாலேயே இந்த வெற்றிகளைப் பெற்றோம் என்பதை இதன் மூலம் நிரூபித்தோம். எதிர்மறை விமர்சனங்களால் நாம் வீழ்ந்துவிடமாட்டோம். மாறாக அடுத்த வருடம் இதைவிட, மிகச்சிறப்பான இன்னொரு பட்டத்தைக் கட்ட வேண்டும் என்ற உந்துதலை அவை அளிக்கின்றன.

(தொடர்ச்சி)



# கொடிகளில் இல்லை சுதந்திரம்

நிலாந்தன்

சீனத்து வைரஸ் குறித்த அச்சத்தின் நிழலில் தென்னிலங்கையில் நாட்டின் 72ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்பட்டிருக்கிறது. கொழும்பில் ஆங்காங்கே சிங்கக் கொடிகள் விற்கப்பட்டன. பொதுக் கட்டிடங்களிலும், பொதுப் போக்குவரத்து வாகனங்களிலும், ஒரு தொகுதி முச்சக்கர வண்டிகளிலும் தேசியக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. காலி வீதி நீட்டுக்கும் கொடிகள் பறந்தன. கொழும்பு ஒரு கொடி நகரமாகக் காணப்பட்டது. ஆனால் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த அல்லது மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் பயன்படுத்தும் சொகுசுக் கார்களில் அவ்வாறு சிங்கக் கொடி பறந்த அதிகமாகக் காண முடியவில்லை. அப்படி என்றால் எவர்கள்தான் சுதந்திரத்தைக் கொண்டாடுகிறார்கள் ? அல்லது எவரெவருக்கு அந்தச் சுதந்திரம் ஒரு பொருட்டாக இருக்கிறது?

சுதந்திரம் எனப்படுவது தேசியக் கொடியைப் பறக்க விடுவது அல்ல. அது அதைவிட ஆழமானது. ஆனால் ராஜபக்ச சகோதரர்கள் உட்பட அவர்களைக் கொண்டாடும் தென்னிலங்கையைச் சேர்ந்த பலரும் சுதந்திரதினம் என்பதை தேசியக் கொடியைப் பறக்க விடும் ஒரு வைபவமாகவே குறுக்கிப் பார்ப்பதாகத் தெரிகிறது. இலங்கைத் தீவு 450 ஆண்டுகள் வெள்ளைக்காரர்களின் ஆதிக்கத்தின் கீழிருந்தது . அதன்பின் அதற்கு சுதந்திரம் வழங்கப்பட்ட பொழுது அந்தச் சுதந்திரத்தை இச் சிறிய தீவினால் பாதுகாக்க முடியவில்லை. பத்திரப்படுத்த முடியவில்லை. ஏனெனில், சுதந்திரம் என்று அவர்கள் விளங்கி வைத்திருந்தது ஒரு பெரிய இனத்தின் நலன்களை மட்டும் தான். சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தின் நலன்களையும் பயங்களையும் பாதுகாப்பதை மட்டும்தான்.

ஆனால், இலங்கைத் தீவைப் பொறுத்த வரையிலும், சுதந்திரம் எனப்படுவது இங்கு வாழும் மூன்று இனங்களுக்கும் உரியது. இவற்றில் ஒரு இனம் சுதந்திரத்தைக் கொண்டாடும் பொழுது மற்றொரு இனம் அதைக் கொண்டாடவில்லை என்றால் அதற்குப் பெயர் சுதந்திரம் அல்ல. ஏனெனில், இலங்கைத் தீவில் சிங்கள மக்கள் ,தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள் ஆகிய மூவருமே சக நிர்மாணிகள் ஆவர். இச் சிறிய தீவைக் கட்டி எழுப்ப வேண்டிய சக நிர்மாணிகள். ஆனால் வெள்ளைக்காரர்களிடமிருந்து விடுபட்ட பின்னர், இந்த மூன்று இனங்களையும் சக நிர்மாணிகளாக ஏற்றுக்கொண்டு ஒரு யாப்பு உருவாக்கப்படவில்லை. வெள்ளைக்காரர்கள் விட்டுச்சென்ற அற்ப பாதுகாப்பு ஏற்பாடுகளும் கூட, பின்னாளில் அகற்றப்பட்டன. இலங்கை தீவின் யாப்பு எனப்படுவது, பல்லினத் தன்மை அற்றதாகவும், பல்மதத் தன்மை அற்றதாகவும் பல்வகைமைக்கு இடம் கொடாத ஒன்றாகவும் படிப்படியாக மாற்றப்பட்டு வந்தது. இப்பொழுது பல்லினத் தன்மைக்கும் பல்மதத் தன்மைக்கும் பல்வகைமைக்கும் எதிரான சக்திகள் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கின்றன. இந்தமுறை தேசியகீதம் தமிழில் பாடப்படவில்லை. இதனால் 'ஒரு இலங்கையனாக வெட்கமும், கவலையும் அடைகிறேன்' என மனோகணேசன் தனது டுவிட்டர் தளத்தில் கூறியுள்ளார்.

யுத்த வெற்றிவாதம் எனப்படுவது இனவாதத்தின் 2009ஆம் ஆண்டுக்குப் பிந்திய புதிய வடிவமாகும். இந்தச் சிறிய தீவு, யுத்தத்தை வெற்றிகொண்ட பெரிய இனத்துக்கு மட்டும் சொந்தமானது என்று நம்புவதே யுத்த வெற்றிவாதம். அப்படிப் பார்த்தால், இங்கே பல்லினச் சூழலுக்கும் பல் மதப் பண்புக்கும், பல்வகைமைக்கும் இடம் இல்லை. அதாவது, தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் சிங்கள மக்களைப் போல இந்தச் சிறிய தீவில் சக பங்காளிகளும் அல்ல. சக நிர்மாணி களும் அல்ல.

இவ்வாறு சிறிய தேசிய இனங்களை சக நிர்மாணிகளாக ஏற்றுக்கொள்ளாத ஒரு நாடு, அதன் முழுமையான பொருளில் சுதந்திரத்தை அனுபவிக்கவும் கொண்டாடவும் முடியுமா? நிச்சயமாக இல்லை. ஏனெனில் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை தோற்கடிப்பதற்காக இலங்கைத் தீவு, நாட்டுக்கு வெளியே பிராந்தியப் பேரரசுகளிடமும் உலகப் பேரரசுகளிடமும் கடன்பட்டிருக்கிறது. சீனாவின் கடன் பொறிக்குள் சிக்குண்டிருக்கும் ஒரு நாடு, தன்னை சுதந்திர நாடாகக் கருத முடியுமா? தனது சக சிறிய தேசிய இனங்களை தோற்கடிப்பதற்காக, நாட்டுக்கு வெளியே இருக்கும் பேரரசுகளோடு கூட்டுச் சேரும் ஒரு பெரிய இனம், சுதந்திரமாக நிம்மதியாக இருக்க முடியுமா? இல்லை. நிச்சயமாக இல்லை.


இலங்கைத் தீவு அதன் மெய்யான பொருளில், முழுமையான அர்த்தத்தில் இப்பொழுது ஒரு சுதந்திரமான நாடு அல்ல. அது அதிகமதிகம் சீனமயப்பட்டுவிட்ட ஒரு தீவு. .அதன் நவீன வரலாற்றில் முன்னெப்பொழுதும் இந்த அளவுக்கு இந்தச் சிறிய தீவு சீனமயப்பட்டதில்லை. சீனமயமாதலானது தீவின் வரைபடத்தை மாற்றியமைத்து விட்டது. அதுமட்டுமல்ல சீன விரிவாக்கத்தின் தென்னாசிய பங்காளிகளில் ஒன்றாக மாறியிருக்கும் இலங்கைத் தீவு, அதன் விளைவாக ஏனைய பிராந்திய பேரரசுகளுக்கும் உலகப் பேரரசுக்கும் விட்டுக் கொடுக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக நேர்ந்தது.

இதன் விளைவாக இந்தியா பலாலி விமானத்தளத்தையும், காங்கேசன்துறை துறைமுகத்தையும், மன்னாரில் பியர் துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்யக் கேட்கிறது. அமெரிக்கா "மிலேனியம் சவால்" உடன்படிக்கையின் மூலம் இலங்கைத் தீவின் காணிகளின் வரைபடத்தை டிஜிட்டல் மயப்படுத்தி, அதைத் தன்னிடம் தருமாறு கேட்கிறது. அதோடு 'சோபா' உடன்படிக்கை உட்பட இரண்டு உடன்படிக்கைகள் மூலம் இலங்கைத் தீவில் அமெரிக்கப் படையினரின் சுதந்திரமான நடமாட்டத்துக்கு உத்தரவாதத்தைக் கேட்கின்றது. மத்தள விமான நிலையம் உலகத்திலேயே விமான நடமாட்டம் மிகக் குறைந்த ஒரு விமான நிலையம். அதைக் கட்டியது சீனா. இப்பொழுது அதை இந்தியா கேட்கிறது. கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தையும் இந்தியா கேட்கிறது. அதாவது சீன விரிவாக்கத்திற்கு எதிராக இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கைத் தீவில் தமது பாதுகாப்பு நலன்களை விரிவுபடுத்தவும், நிலைநிறுத்தவும் முற்படுகின்றன. இவ்வாறு வல்லரசுகளின் போட்டா போட்டிக்குள் சிக்கி இருக்கும் ஒரு சிறிய தீவு எப்படி சுதந்திரமான ஒரு தீவாக இருக்க முடியும்?

இப்பொழுது சிங்கள மக்கள் கொண்டாடிக் கொண்டிருப்பது உண்மையான சுதந்திரத்தை அல்ல. அது சீனாவினாலும், இந்தியாவினாலும், அமெரிக்காவினாலும் ஏனைய சக்திமிக்க நாடுகளினாலும் பங்கிடப்படும் ஓர் அப்பம் ஆகும். எனவே இங்கு சுதந்திரம் எதுவும் கிடையாது. மாறாக இங்கு சுதந்திரம் என்று கூறப்படுவது இரண்டு சக சிறிய இனங்களுக்கு எதிராக ஒரு பெரிய இனம் ஒரு பேரரசோடு நிற்பது தான். ஆனால் அதன் விளைவுகளை சுருக்கிக் கூறின் அது ஒரு அடிமை நிலைதான்.

தென்னாசியாவில் சீன விரிவாக்கத்தின் ஒரு களமாக மாற்றப்பட்டதன் விளைவாகவே இலங்கைத் தீவு பேரரசுகளின் இழு விசைகளுக்குள் முன்னெப்போதையும் விட அதிகமாகச் சிக்க வேண்டி வந்தது. அது மட்டுமல்ல அதன் 72 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடியது போது கொரோனா வைரஸின் பீதிக்குள் நாடு சிக்கியிருந்தது .சீனத்து வைரஸ் பற்றிய அளவுக்கு 'மிஞ்சிய அச்சம் காரணமாக, நாட்டில் உள்ள சீனப் பிரஜைகளை சில உணவு விடுதிகள் புறக்கணிப்பதாவும், சில தனியார் வாகனச் சாரதிகள் புறக்கணிப்பதாகவும் வருத்தம் தெரிவித்து கொழும்பில் உள்ள சீனத் தூதுவர் ஓர் அறிக்கை வெளியிட்டு இருக்கிறார். மிகவும் உணர்ச்சிகரமான வார்த்தைகளைக் கொண்ட அந்த அறிக்கையானது சிங்கள மக்களைக் கவரும் விதத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

சீனத்து வைரஸ் குறித்து அதிகரித்த அச்சம் எனப்படுவது இலங்கைத் தீவைப் பொறுத்தவரை சீன விரி வாக்கத்தின் ஒரு விளைவு தான். ஏனெனில் சீனர்கள் அதிகம் நடமாடுவதால் தான், அந்த வைரஸ் குறித்த அச்சமும் அதிகமாகக் காணப்படுகிறது. இது ஒரு குறியீடு. கார்ல் மாக்ஸ் கூறியது போல "ஒடுக்கும் இனம் ஒருபோதும் நிம்மதியாக இருக்க முடியாது" என்பதன் ஒரு குறியீடுதான். ஆம், இலங்கைத் தீவில் இப்பொழுது தமிழர்களுக்கு மட்டும் அல்ல. முஸ்லிம்களுக்கு மட்டும் அல்ல, சிங்களவர்களுக்கும் சுதந்திரம் இல்லைத்தான். ஆனால், சுதந்திர தினம் என்று அழைக்கப்பட்ட அந்நாளில் காணப்பட்ட வித்தியாசம் என்னவெனில், சுதந்திரம் இழந்த தமிழ் மக்கள் தேசிய கீதத்தைப் பாட அனுமதிக்கப்படவில்லை அல்லது தமிழ் மக்கள் அதைப் பாடவிரும்பவில்லை. ஆனால் சுதந்திரம் இழந்த சிங்கள மக்களோ தமக்கு சுதந்திரம் இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டு தேசிய கீதத்தைப் பாடி மகிழ்ந்தார்கள் என்பது தான்.



**சீன விரிவாக்கத்துக்கு எதிராக இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கைத் தீவில் தமது பாதுகாப்பு நலன்களை விரிவுபடுத்தவும், நிலைநிறுத்தவும் முற்படுகின்றன. இவ்வாறு வல்லரசுகளின் போட்டா போட்டிக்குள் சிக்கி இருக்கும் ஒரு சிறிய தீவு எப்படி சுதந்திரமான ஒரு தீவாக இருக்க முடியும்?**




சஞ்சீவி

**மாணவர் கழகம்**

1. முழுப்பெயர்: ..........................................
2. முகவரி: ..........................................
..........................................
3. பிறந்த திகதி: ..........................................
4. கல்வி கற்கும் பாடசாலை: ..........................................
5. கற்கும் தரம்: ..........................................
6. தொலைபேசி இலக்கம்: ..........................................

.................... ....................
மாணவர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *uthayansanjeevi@gmail.com*

இந்த விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தி பாஸ்போட் அளவு புகைப்படத்துடன் அனுப்பி வைப்பதன் மூலம் எமது **உதயன் - சஞ்சீவி** மாணவர் கழகத்தின் அங்கத்தவர்களாக நீங்களும் இணைந்து கொள்ளலாம்.

# மாணவர் கழகம்



அங்கத்துவ இல. 005

**பெயர்:** கிருபாகரன் திவாகரன்
**முகவரி:** உடுவில் வீதி, மானிப்பாய்
**பிறந்த திகதி:** 2008.08.09
**பாடசாலை:** யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி



அங்கத்துவ இல. 008

**பெயர்:** செல்வக்குணச்சந்திரன் துவாரகன்
**முகவரி:** மின்சார நிலைய வீதி, ஓடக்கரை, பருத்தித்துறை.
**பிறந்த திகதி:** 2008.10.03
**பாடசாலை:** யா/சித்திவிநாயகர் வித்தியாலயம்.



அங்கத்துவ இல. 006

**பெயர்:** சிறீகாந்தன் பங்கயன்
**முகவரி:** அளவெட்டி மத்தி, அளவெட்டி.
**பிறந்த திகதி:** 2005.12.31
**பாடசாலை:** யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி



அங்கத்துவ இல. 009

**பெயர்:** பிரதீபன் பிரியந்தன்
**முகவரி:** வைரவ கோவிலடி, துணவி, வட்டுக்கோட்டை
**பிறந்த திகதி:** 2006.05.08
**பாடசாலை:** யா/ வட்டு. இந்துக் கல்லூரி.



அங்கத்துவ இல. 007

**பெயர்:** கோபாலகிருஷ்ணன் திவாக்சனி
**முகவரி:** சம்பந்தர் கண்டி, காரைநகர்
**பிறந்த திகதி:** 2011.12.31
**பாடசாலை:** யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை.



அங்கத்துவ இல. 010

**பெயர்:** பிரதீப் சஞ்ஜேய்
**முகவரி:** 74/1 பத்திரகாளி கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
**பிறந்த திகதி:** 2014.03.03
**பாடசாலை:** கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.

- சஞ்சீவியில் பிரசுரமாகும் படைப்புகளில், மாணவர் கழகத்தில் அங்கத்துவம் வகிக்கும் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- மாணவர்கள் தனது படைப்புக்களை அனுப்பும் போது தமது அங்கத்துவ இலக்கத்தை தவறாது குறிப்பிட்டு அனுப்பவும்.
- மாணவர் கழக அங்கத்தவர்களுக்கு எதிர்ப்பாராத பரிசுகளும் சிறப்புச் சலுகைகளும் வழங்கப்படவுள்ளன. (இது தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்)